
கல்கி
KALKI
16.8.1970
40 காசு



விவா

இரு செயல் புரியும் ஆரோக்கிய பானம்

பகலில் உடலுக்கு உரமூட்டும்...
இரவில் நிம்மதியூட்டும்!

காலையில் விவா: பகல் முழுவதும் நீங்கள் வீறுத் துடிப்புடன் விளங்குவீர்கள்! விவாவிலுள்ள ஆடைப்பால் செழுமையாக்கப்பட்டுள்ளது—மால்ட், கோதுமை மற்றும் புரதச் சத்துக்கள் சேர்க்கப்பட்டு. இதைப் பருகினால், நீங்கள் நாள் முழுவதும் சக்திபெற்று உற்சாகமுடன் திகழ்வீர்கள்!

படுக்கும்போது விவா: இரவு முழுவதும் நிம்மதியுடன் உறங்குவீர்கள்! விவாவின் புத்துணர்வூட்டும் சுவையும், ஊட்டப் பொருள்களும் உங்கள் திசுக்களுக்கு உரமூட்டி, நரம்புகளுக்கு இதமூட்டி, தசைகளுக்கு நலமூட்டுகின்றன. நீங்கள் நிம்மதியுடன் தூங்கி, காலையில் தெம்புடன் எழுவீர்கள்!

விவா, எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவுப் பானம்...பலவீனமானவருக்கும உடல் தேறி வருபவருக்கும் சஞ்சீவி!

பருகுங்கள் விவா—ஆரோக்கியமூட்டும்!
நீரோ பாலோ கலந்தால் இன்சுவையூட்டும்!



இந்தியாவில் தயாரிப்போர்:
ஜகத்ஜித் இண்டஸ்ட்ரீஸ் லிட்.
ஜகத்ஜித் நகர், ஹமீரா (பஞ்சாப்).

விற்பனை ஏஜெண்டுகள்:
ஹோம் ப்ராடக்ட்ஸ் மார்க்கெட்டிங் ஏஜென்சி,
டிவிஷன் ஆப் ஸாராபாய் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்.

Shilpi JI-3A/70 tam.

கல்கி

பொருளடக்கம்


சாதாரண, ஆடி 31 :: 1970, ஆகஸ்டு 16


(அட்டைப் படம்) பூவில் மலர்ந்த காதல் : ஜமாலி



''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை(இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00


நீங்கள் வாக்களித்த பணத்தை அரசாங்கம் கொடாமல் நிறுத்தப் பார்க்கிறது
நான் நம்பவில்லை
இந்திரா இதை அனுமதிக்க மாட்டாள்


இந்தியா அழைக்கிறது!
என்ன சத்தம் அங்கே மறுபடியும்? நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தோல்வியுறச் செய்ததும், இதெல்லாம் ஓய்ந்து விட்டதாக எண்ணினேனே!

மலர் 30

இதழ் 3

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்



சர்க்கார் சர்வாதிகாரம்

இந்தியாவின் விவகாரங்களில் கம்யூனிஸம் ஊடுருவி முன்னேறி வருகிறது. அதை எதிர்க்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவதுதான் இந்த வருஷத்துச் சுதந்திர தினத்துக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். அகந்தையின் காரணமாக, ஸ்ரீமதி இந்திரா காந்தி நடத்தும் ஆட்சி கம்யூனிஸத்தை வளர்த்து விட்டது. ஒரு தனி மனிதரின் ஆசை மேலிட்டதன் காரணமாகத் தேசிய ரீதியில் தவறான காரியங்கள் செய்யப்படுகின்றன.

ஸ்ரீமதி இந்திரா காந்தி இரு கம்யூனிஸ்ட் வல்லரசுகளில் ஏதாவது ஒன்றின் சார்பு நாடாக இந்தியாவை ஆக்கும் வழியில் செல்கிறார். சுதந்திரத்தையும், ஜனநாயகத்தையும் போற்றும் எல்லோரும் இந்தப் போக்கை எதிர்ப்பதில் ஒத்துழைக்க வேண்டும் என்று ஜூன் 28ம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அழைப்பு விடுத்தது. ஜனசங்கமும், சுதந்திரக் கட்சியும் தயக்கமின்றித் தேசபக்த உணர்வுடன் அதற்கு இசைவு கூறின. ஆனால் முதலில் வேண்டுகோள் விடுத்த காங்கிரஸ், பிறகு விசித்திரமாகப் பின்வாங்கி விட்டது. அது எப்படியாயினும் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பேரபாயத்திலிருந்து காக்கும் மகத்தான பொறுப்பு ஜனசங்கம், சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களைச் சார்ந்துள்ளது. காங்கிரஸின் பெரிய தலைவர்கள் உறுதியுடன் நடந்து கொள்வார்கள் என்று தேசம் நம்பியது. ஆனால் நடந்தது என்னவோ பழைய கதைதான். இந்தியாவை ஆண்டுவந்த மன்னர்கள் பிளவுபட்டுக் கிடந்ததால் தேசம், படையெடுத்த அந்நியர் வசம் சுலபமாகப் போய்விட்டதல்லவா? அந்தப் பழைய சாபத்திடு மீண்டும் நம்மை வதைப்பதாகத் தெரிகிறது. மன்னர்களின் வாரிசுகளாக வந்த பார்லிமெண்ட் ஆட்சி முறைத் தலைவர்களும் நம்பத் தகாதவர்களாகி விட்டனர். ஆனால் நிலைமையின் தேவைக்கு ஏற்ப நாட்டை ரட்சித்து நாகரிகத்தையும், சுதந்திரத்தையும் காக்கக்கூடிய கட்சிகளும் தலைவர்களும் இப்பொழுது கிடைத்திருக்கிறார்கள். தேசம் மீண்டும் அடிமை வாழ்வில் ஆழ்ந்து விடுவதை அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எனவே, ஜூன் 28ந் தேதி காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு மீண்டும் உயிரளிக்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆதரவை நம்பியிருக்கும் பிரதம மந்திரிக்கும் புதியகாங்கிரஸுக்கும் எதிராகப் பாரதக் கூட்டணியை அமைக்கும் திட்டத்தை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் பெருந்தலைவர்கள் கைவிடவில்லை. அதற்காகத் தொடர்ந்து முயன்று வருகிறார்கள். ஆனால் அவர்களது முயற்சிகளின் வேகம் போதுமானதாக இல்லை. அதில் போதிய விறுவிறுப்பு இல்லை. கூட்டணி என்ற கருத்திலேயே தேச பந்தோபஸ்துக்கும் க்ஷேமத்துக்கும் குறைந்தபட்சமாகத் தேவைப்படுபவைகளை வரையறுத்துக் கொண்டு கூட்டாக உழைக்க வேண்டும் என்பது அடக்கம். குறைந்தபட்சத் தேவைகளுக்கு அதிகப்படியான விஷயங்களைச் சேர்க்க முற்பட்டால் இடையூறுகள் தாம் அதிகரிக்கும். வெவ்வேறு கட்சிகள் தமது தனித் தனி கொள்கைகளுக்குத் தரும் மதிப்பின் காரணமாகப் பேச்சில் அபிவிருத்தியின்றி முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டுவிடும். அம்மாதிரி நடக்க வேண்டும் என்றுதான் கெட்டிக்காரராகிய பிரதம மந்திரி விரும்புகிறார்.

கூட்டணியின் பலம் சிறிது கூடுதலாக வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சியின் எந்தப் பிரிவையும் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று ஜனசங்கத்தலைவர் ஸ்ரீ வாஜ்பாய் கருதுகிறார். இது சரியான கருத்து. கம்யூனிஸ்ட் கட்சிகளிடையில் போட்டியிருந்து வருவதால் நமது கூட்டணியில் சேர ஏதாவது ஒரு பிரிவு முன்வரக்கூடும். அதைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. கூட்டணி அங்கத்தினர்களின் எண்ணிக்கை சிறிது குறைவாக இருந்தால் கூடப் பரவாயில்லை. நாம் மேற்கொள்வது பெரிய ஜனநாயக முயற்சி. அதில் தேச விரோதப் பான்மை உள்ள

துரோகக் கட்சிகளுக்கு இடம் கொடுத்தால் பேராபத்து விளையலாம்.

மக்களை வஞ்சிப்பதற்காகக் கவர்ச்சிகரமான, ஆனால் காரிய சாத்தியமற்ற, ஒரு பொருளாதார சித்தாந்தம் பயன்படுத்தப்படுகிறது. வாழ்க்கையும் பொருள் உற்பத்தியும் எளிதாக இருந்த பழங் கால நிலை மாறிவிட்டது. சிறந்த கருவிகள், நுட்பமான தொழில் திட்டங்கள், திறமையுள்ள நிர்வாகம் ஆகியவை இருந்தால்தான் நாம் வாழும் காலத்தில் முன்னேற்றம் காண்முடியும். இவை கைகூடுவதற்கு இரண்டு வழிகள் கூறப்படுகின்றன. ஒன்று சுதந்திரத்துடன் கூடிய அமைப்பு முறை, மற்றொன்று அடிமை வாழ்வில் கொண்டு போய் விடும் சர்க்காரின் தொழில் சர்வாதிகாரம். பணக்காரர்களைத் தீர்த்துக் கட்டினால் எல்லா மக்களுக்கும் சொர்க்க வாழ்வு கிடைத்து விடும் என்பது பொய்யும் புரட்டுமாகும். தனி முதலாளிகளின் உற்பத்தி முறையின் கீழ் தான் சுதந்திர வாழ்வு நிலைத்திருக்க முடியும். நிர்ப்பந்தம், அடிமை நிலை, ரகசியப் போலீஸ் ஆட்சி ஆகியவை சர்வாதிகாரத்தின் அம்சங்கள். இப்படிப்பட்ட பயங்கர சர்வாதிகார ஆட்சி வந்தால் பரவாயில்லை என்று கருதினால்தான் மூலதனமும் தொழில் அமைப்பும் தேவையில்லை எனப் புறக்கணித்து, சுதந்திர வாழ்வின் மகிழ்ச்சியைப் பறி கொடுக்க முற்படலாம்; முதலாளிகளைத் தீர்த்துக் கட்டிவிடலாம். ஆனால் அவர்களது இடத்தை அரசாங்கம் நிரப்பினால் வரிகளின் மூலமாகத்தான் மூலதனம் திரட்ட வேண்டியிருக்கும். சர்க்காரின் தொழிலாதிக்கத்தில் தனி நபரின் சுதந்திரமும், ஜனநாயகமும் பறி போகும்; அடிமை வாழ்வும், சர்வாதிகாரமுமே ஏற்பட்டுவிடும். அப்போது மக்களுக்குப் பணியாற்ற வேண்டிய அரசாங்கம் கொடுங்கோல் ஆட்சியாகி விடுகிறது. கண்ட்ரோல்களும் சர்க்காரின் நிர்வாகமும் தொழில்களை எந்தக் கதிக்கு ஆளாக்கியிருக்கின்றன என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். ஆண்டுதோறும் பெருந்தொகைகள் நஷ்டம்; நேர்முக வரிகளும் மறைமுக வரிகளும் கடுமையாக உயரும் நிலை; இமயமலைபோல் வளர்ந்து விட்ட அந்நியக் கடன்களைத் திருப்ப முடியாத நிலை; பண வீக்கத்தால் விலை உயர்வு; வாழ்க்கைச் செலவு அதிகரித்து வருவதால் மக்கள் அல்லல்படும் நிலை! இவைதாம் நாம் கைமேல் கண்ட பலன்.

கம்யூனிஸ்ட் ஆட்சி வந்தால் அது பாட்டாளி மக்களிடமே பூரண அதிகாரமும் தரும் என்பது வெறும் புரட்டு. தந்திரசாலிகளான அரசியல்வாதிகளின் சர்வாதிகாரம்தான் அந்நிலையில் ஏற்படும். அதிகாரத்தைச் சாசுவதமாகத் தம்மிடமே வைத்துக் கொள்வதற்கு அவர்கள் முயல்வர்.

சுய அதிகாரத்தை நாடுபவர்கள்கூட ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதுதான் தங்கள் நோக்கம் என்று சொல்வார்கள். ஆனால் திறமையுடன் நடைபெற்று விஸ்தரித்துக் கொண்டே போகக்கூடிய தொழில்கள் மூலமாகத்தான் ஏழைகளை உயர்நிலைக்குக் கொண்டு வர முடியும். அவைதாம் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடியவை. தனி மனிதனின் கௌரவம், சுதந்திரம் ஆகியவற்றுக்கு எவ்வித நஷ்டமுமின்றி அதே சமயத்தில் எல்லோருக்கும் வேலை கிடைக்க வேண்டுமாயின் ஜனநாயக வாழ்க்கையே சாலச் சிறந்தது. சர்வாதிகாரத்தைத் தழுவிவிடக் கூடாது.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

என்ன சேதி?

சுதந்திரக் கட்சி மாநாடு

சென்னை ஜில்லா சுதந்திரக் கட்சியின் இரண்டாவது அரசியல் மாநாடு இம்மாதம் 15, 16 தேதிகளில் புரசைவாக்கம், தர்ம பிரகாஷில் நடக்கிறது. சுதந்திரக் கட்சி அக்கிராசனர் ஸ்ரீ மஸானி தொடக்கி வைக்கிறார். ராஜஸ்தானத்தைச் சேர்ந்த தலைவர்கள் ஸ்ரீ எம். கே. மோஹ்தாவும், எஸ். கே. தபூரியாவும், மற்றும் திருவாளர்கள் எஸ். எஸ். மாரிசாமி, சா. கணேசன் ஆகியோரும், சட்ட சபையினர் பலரும், சென்னை நகரத்தைச் சேர்ந்த 500 பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். மாநாடு சிறப்பாக நடந்து, பயனுள்ள முடிவுகள் காணும் என நம்புகிறோம்.

மொழி வகுப்புகள்

பம்பாயில் உள்ள செம்பூர்த் தமிழ்ச் சங்கம் அங்குள்ள தமிழர்களுக்கும் பிரதேச மக்களாகிய மராத்தியர்களுக்கும் ஒரு நல்ல பணி செய்து வருவதை அறிந்து பாராட்டுகிறோம்.

பம்பாயில் உள்ள தமிழர்கள் மராத்தி மொழி கற்க, கட்டணம் ஏதுமின்றிப் பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை மராத்தி வகுப்புகளை இச்சங்கம் நடத்தி வருகிறது. அதேபோல் மராத்தியர்கள் தமிழ் பயில, தமிழ் வகுப்புக்கள் நடத்தி வருகிறது. ஆறு அல்லது எட்டு மாத காலம் பயிற்சி அளித்து, தேர்ச்சி பெற்றவர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

இவை மட்டுமின்றி, உயர்நிலைப் பள்ளி மாணவ — மாணவியர்க்கு என்று மாணவர் அரங்கம் ஒன்றும், கல்லூரி மாணவர்க்கென்று கல்லூரிப் பிரிவு ஒன்றும் நடத்துகிறார்கள். மாணவ மாணவியர் இலவச நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்; உபகாரச் சம்பளம் பெறலாம். அக்கறையுள்ளவர்கள் சங்க அலுவலகத்தில் (4—6, காந்தாரி காலனி, இரண்டாவது தெரு, செம்பூர், பம்பாய்) விசாரித்துப் பயன் அடைவார்கள் என்று நம்புகிறோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

என் புத்திமதியைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அது ஏற்றுக் கொண்டாலும் புறக்கணித்தாலும் மக்களுக்கு எது நல்லது என்பதைச் சொல்லித் தீர வேண்டிய கடமை எனக்கு இருப்பதாக நினைக்கிறேன். ரெவின்யூ போர்டை எடுத்துவிடக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன். ஜில்லா கலெக்டர்களுடைய பணிகளை ஒருமுகப் படுத்தி வழிகாட்டுவதற்கு நிர்வாகத் தலைமை அமைப்பு ஒன்று தேவைப்படுகிறது. சர்க்காரின் ராஜீயத் தலைவர்களுக்கும் ஜில்லா கலெக்டர்களுக்குமிடையே யாரும் இணைப்பாக இல்லாத நிலைமை நல்லதல்ல.

ரெவின்யூ போர்டுக்கு நெடுநாளைய அநுபவம் உண்டு. மிக முக்கியமான தகவல்கள் அதன்வசம் இருக்கின்றன. இன்னும் நெடு நாட்களுக்கு அவை கலெக்டர்களுக்குத் தேவைப்படும். ஐ.ஏ.எஸ். வர்க்கத்தினருக்கு இன்னும் அநுபவம் போதாது. பழைய ஐ. ஸி. எஸ். கலெக்டர்களுடைய தரத்தை அடைவதற்கு அநுபவ அறிவும், சம்பிரதாயத்தின் வலிமையும் மிக மிகத் தேவை. தரமும் கட்டுப்பாடும் ரெவின்யூ போர்டின் மேற்பார்வைக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும். மந்திரிகளின் மனம் போன போக்குக்கு அவற்றை உட்படுத்தலாகாது.

★

இந்திய முஸ்லிம்கள் தாய்நாட்டிடம் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் அதைக் கட்டாயப் படுத்துவது போல் சொல்கிறார்கள். இது எதிராளிக்கு எரிச்சலூட்டுவதாக இருக்கிறது. அதனால் கோருவதற்கு நேர்மாறான பலன் விளைகிறது. குழந்தை, தாயிடம் அன்பு கொள்வது சுபாவம். குழந்தையைப் பிரியத்துடன் தாய் நடத்தாவிடில் படிப்படியாகக் குழந்தையின் இயற்கையான அன்பு மறைந்து போய் நேர் எதிரான நிலைமை வந்துவிடுகிறது. அதட்டிக் கேட்டால் அன்பு கிடைக்காது. பிரியத்தைக் கொடுத்துத்தான் பிரியத்தைப் பெற வேண்டும். நியாயமாக நடத்தினால் மட்டும் போதாது. அதைவிட ஒரு படி மேலே செல்ல வேண்டும். இப்படி ஒரு படி மேலே சென்று காந்திஜியையும் ஜவாஹர்லாலையும் போல உழைப்பவர்களுக்கு 'முஸ்லிம் சார்பினர்' என்றும் தேச ஒருமைப் பாட்டுக்கு முட்டுக்கட்டைகள் என்றும் பட்டம் கட்டி விடுகிறார்கள்.

அன்பு அன்பை வளர்க்கிறது. ஒரு குழந்தை ஊனமுள்ளதாக இருந்தால் அதனிடம் அன்பு காட்டுவதுடன் இல்லாமல் ஒரு படி மேலே சென்று துணை புரிகிறோம். தாய்நாட்டில் ஹரிஜனங்களைச் சரியாக நடத்தவில்லை என்றால் அவர்களுக்குப் புகலிடம் தர வேறு தேசமேது? தாய்நாட்டில் தமக்கு மரியாதையில்லை, தாம் அன்புடன் நடத்தப்படவில்லை என்று முஸ்லிம்கள் நினைத்தால் அவர்களுடைய மனம் அயல்நாடுகளில் உள்ள தம் மதத்தினரை நாடக்கூடும்.

இந்திய முஸ்லிம் நம்மைப் பற்றி நல்லவிதமாக நினைக்க வேண்டுமாயின், அதற்காக நாம் சுறுசுறுப்புடன் உழைக்க வேண்டும். கட்டளையிட்டுப் பிரியத்தைச் சம்பாதித்து விட முடியாது. நாமே நமது செயல்களின் மூலம் அவர்களிடம் மாறுதலைத் தோற்றுவிக்க வேண்டும்.

குறுங்குடியில் குடிகொண்ட குருமூர்த்தி

'என்றும இரவும்பகலும் வரிவண்டிசை பாடக் குன்றின் முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே' என இப்பற்கை வளப்புக்காகப் போற்றப்படும் திருக்குறுங்குடி, நிலமகள் நாயகனான ஸ்ரீமந் நாராயணனுக்கு மிகவும் உகந்த திவ்யக்ஷேத்திரமாகும். நெல்லை மாவட்டத்தில் உள்ள இப்பழம்பெரும் பதி பலவிதங்களில் புகழ்கொண்டது. 'வேதம் தமிழ் செய்த' ஆழ்வார் திலகமாம் நம்மாழ்வார் அவதரித்த விசேஷத்தாலும், திருமங்கையாழ்வார் திருமேனி சம்பந்தத்தாலும், நான்கு ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்ட சிறப்பாலும் திருக்குறுங்குடி வணக்கத்துக்குரிய திருத்தலமாக விளங்குகிறது.

இந்த க்ஷேத்திரத்தில் மாட வீதியில், ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் தலைசிறந்த குரவரில் ஒருவரும், மாபெரும் ஞானபக்த கவியுமான ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் எனப்படும் ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கு ஒரு சந்நிதியுள்ளது. பல்லாண்டுகளுக்குமுன் ஸ்ரீ வேதாந்த ஸ்ரீநிவாஸ அய்யங்கார் என்பவரால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயம் மைசூர் ஸ்ரீ பரகால மடத்தின் ஆதீனத்தில் உள்ளது. தற்போது இதற்கு ஜீர்ணோத்தாரணம் செய்ய அவசியம் ஏற்பட்டுள்ளது. சத் காரியம் எதற்கும் கைகொடுத்து உதவும் டி.வி.எஸ். ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்களைப் போஷகராகக் கொண்டு இதற்கெனத் திருப்பணிக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. சந்நிதி விரைவிலேயே ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டு, ஆசாரிய சிரேஷ்டரான ஸ்ரீ தேசிகனுடைய திருஆராதனை, முறைப்படி நடந்து வரப் பக்தர்கள் உதவவேணும். பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ எஸ். நம்பி அய்யங்கார், பொருளாளர், தேசிகர் சந்நிதி சம்ப்ரோக்ஷணக் குழு, திருக்குறுங்குடி, திருநெல்வேலி மாவட்டம்.


சங்கர் சிமெண்ட்
தரம் திடம் நிரந்தரம்
இந்தியா சிமேண்ட்ஸ்
நாளைய இந்தியாவை நிர்மாணிக்க...
நாட்டின் வளத்தை நாடு முழுவதும் பரப்ப நாட்டின் சுபிட்சத்தை உறுதியுடன் மேம்படுத்த, இங்கன்னுனில் தொடர்ந்து சேவை புரிய எங்களை அர்ப்பணித்துக் கொள்கிறோம்.
SANKAR
I C
CEMENT
இந்தியா சிமெண்ட்ஸ்
லிமிடெட்.
175/1, மவுண்ட் ரோடு,
சென்னை-2.
தொழிற்சாலைகள் :
சங்கர்நகர் • சங்கரி
Criterion IC 2447



நாடகத்தில் நாட்டம்

இவருக்கு இதுவும் தெரியும்

பலர் ஈடுபட்டிருக்கும் ஒரு துறையில், ஒருவர், புகழ்பெற வேண்டுமானால், அவர் தமக்கென்று புதிய வழியொன்றை வகுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவரால் புகழ்பெற முடியும்.

இதைத் திரு ஒய். ஜி. பார்த்தசாரதி நன்கு உணர்ந்து, அமெச்சூர் நாடகங்களில் புதுமைகளைப் புகுத்தி, இகிலேயும் நகைச் சுவையையும் நிறைத்து, பலப் பல நாடகங்களை மேடை ஏற்றினார். எல்லா நாடகங்களும் ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெறவில்லை என்றாலும் பல சிறப்பாக நடைபெற்றன; நடைபெறுகின்றன. தொடர்ந்து நடைபெறப் போகின்றன!

மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த மண்டையம் வைணவர் குலத்தவர் ஒய். ஜி. பி. முழுக்க முழுக்கச் சென்னைவாசி!

பன்னிரண்டு வயது முதல், மாணவப் பருவத்திலிருந்து நாடகங்களில் நடிக்க ஆசைப்பட்டு, தீவிரமாகவே (தொழில் முறையல்லாத) அமெச்சூர் நடிகரானார்.

இன்று வயது ஐம்பத்திரண்டு!

'யுனைடெட் அமெச்சூர் ஆர்டிஸ்ட்' என்னும் நாடகக் குழுவைத் தொடங்கி, திறம்பட நடத்தி வருகிறார் ஒய். ஜி. பி. இந்த அமெச்சூர் குழு பதினெட்டு ஆண்டுகளாக (1952 முதல்) சென்னையிலும், வெளியூர்களிலும் நாடகங்களை நடத்தி வருகிறது.

"நாற்பது வருடங்களாக நாடக மேடையில், ஓராயிரத்துக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளில் நடித்திருக்கும் உங்களைச் சினிமா உலகம் விட்டு வைத்திருக்கிறதே! ஒரு சினிமாவில் கூட உங்கள் தோற்றத்தைக் காணோமே?" - அவரிடம் கேள்வி.

"ஓ, அதுவா! நான் ஒரு படத்தில்கூட நடித்ததில்லை. எனக்குப் பல தயாரிப்பாளர்களிடமிருந்து அழைப்பு வந்தது. ஆனால் நான்தான் ஏற்றுக் கொள்ளவில்லை...!" இது ஒய். ஜி. பி. கூறிய வியப்புக்குரிய பதிலாகும்.

திரைப்படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைக்காதா என ஆயிரக்கணக்கானவர்கள் ஏங்கும் இக்காலத்தில், ஒய். ஜி. பி.போன்றவர்களை, அரிதினும் அரிதாகத்தான் காண முடியும்! திரு பார்த்தசாரதி நாடகத் துறையில் மட்டுமல்ல, வணிகத் துறையிலும் தொடர்பு உடையவர்.

வணிகத்தின் ஜீவநாடியானது — ஏற்றுமதி இறக்குமதி அல்லவா?

இந்திய அரசின் வர்த்தகத் துறையைச் சேர்ந்த மேற்காணும் பிரிவில், உயர்ந்தபதவி வகிக்கிறார் — பொருளாதாரத்தைப் பற்றி நன்கு அறிந்த இந்த (ஆனர்ஸ்) பட்டதாரி.


சென்னை துறைமுகத்துக்கு எதிரில் உள்ள கஸ்டம் ஹவுஸ் கட்டடத்தில்தான் ஏற்றுமதிஇறக்குமதி அலுவலகமும் செயல்படுகிறது.

1954ல் 'அஸிஸ்டெண்ட் கண்ட்ரோலர்' பதவி வகிக்கத் தொடங்கி, 1960—ல் 'கண்ட்ரோலர்' ஆகப் பதவி உயர்வு பெற்று, இன்று டெபுடி சீப் கண்ட்ரோலர்' ஆக, பொறுப்புக்கள்மிகுந்த அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார் — அதிலும் முதல் பிரிவு அதிகாரியாக!




"காலையில் பத்து மணி அளவில் ஆபீஸ் மேஜையடியில் உட்கார்ந்தால், மாலை ஐந்து மணிக்கு ஆபீஸ் வேலை முடியும்வரை நான் அரசாங்க வேலையில் முழுக் கவனத்துடன் இருக்கிறேன். ஆபீஸ் கட்டடத்தை விட்டு வெளியே வந்த பிறகுதான் கலை உலகம்... அதாவது நாடக உலகம்!" என்கிறார் இந்த மூன்றெழுத்து அமெச்சூர் நாடக உலகப் பிரமுகர்!

- ஏ. சுவாமிநாதன்



வளத்தினைப் பெருக்கி
வறுமையை அகற்றிடுவோம்!



வளம் கொழிக்க,
மின்சக்தி உற்பத்திப் பணியில்

BHEL

1947, ஆகஸ்ட் 15 ... அன்றிலிருந்து வெகுவாக முன்னேறியுள்ளோம். ஆயினும் இன்றுவரை வறுமையினை முழுமையாக அகற்ற முடியவில்லை.

காரணம்? ... நாடோ மிகப் பெரிது. மக்களோ மிக மிக அதிகம். ஆரம்பத்தில் அடித்தளத்திலிருந்து முன்னேற வேண்டிய நிலை.

நாம் அயராமல் உழைத்து, தவறாமல் வளங்கள் அனைத்தையும் பயன் கொள்வோம்.

இந்த ஆக்கப்பணியில் திருச்சி பெல் நிறுவனமும் பங்குபெறுகிறது.

பயிர்வளம் செழித்து, தொழில் வளம் பெருகி பட்டிதொட்டி, பட்டினம், மருந்தகம் மற்றும் மனைகள் எல்லாம் இருளகன்று ஒளி மயமாகிட, வறுமை மாய்ந்திட தேவை மின்சக்தி.

அந்த மின்சக்தி உற்பத்திப் பணியில் ஈடுபட்டுள்ள அனல் மின் நிலையங்களுக்கு கனரக கொதிகலன்கள், உரங்கள்-ரசாயனங்கள் தயாரிப்பில் ஈடுபட்டோருக்கு நீராவிக் கொதிகலன்கள், விரிவடைந்து வரும் தொழில் துறைக்கு கன அழுத்த வால்வுகள் இவை யாவும் தயாரிக்கிறோம்.

அதிக உணவு, அடிப்படைத் தேவைகள், வேலை வாய்ப்பு ...

வறுமைக்கும் வளமைக்கும் தூரம் தான் எத்தனையோ ?

இதனை இணைக்கின்ற பணியில் பங்கு பெறும் பேறு பெற்றார் பெல் நிறுவனத்தார்.

பாரத் ஹெவி
எலக்ட்ரிகல்ஸ் லிமிடெட்
(இந்திய அரசின் ஓர் அமைப்பு)
ஹை பிரஷர் பாய்லர் பிளான்ட்,
திருச்சிராப்பள்ளி-14
பதிவு பெற்ற அலுவலகம்:
5, பார்லிமெண்ட் வீதி, புதுடில்லி-1

ராமாயணம்

ராஜாஜி

மழையெல்லாம் முடிந்து வனமும் வனத்தில் வசிக்கும் பிராணிகளும் மிக அழகுடன் பிரகாசித்து வருவதை ராமன் பார்த்து அரக்கன் கையில் அகப்பட்டுத் தவிக்கும் சிதையைப்பற்றி எண்ணி எண்ணித் துயரத்தில் ஆழ்ந்தான். தம்பியிடம் அவன் கூறினான்:

''உலகமெல்லாம் சௌந்தரியமும் மகிழ்ச்சியுமாக இருக்கிறது. சீதை எங்கேயோ தவித்துக் கொண்டிருக்கிறாள். நானோ இங்கே நன்றி மறந்த வானர ராஜனுடைய தயவை எதிர்பார்த்துக் கொண்டு சும்மா கிடக்கிறேன். ஆஹா! நான் சென்ற தண்டகாரண்யத்தை ஓர் உத்யானவனமாகக் கருதி என்னுடன் முள் மேலும் கல்மேலும் துள்ளிக் குதித்துச் சந்தோஷமாக நடந்து வந்தாளே. அவள் இந்தச் சமயத்தில் என்ன கஷ்டப்படுகிறாளோ! இந்த வானர ராஜனோ மதுபானத்தில் மூழ்கி, பெண்களோடு கூடி கிராம்மிய சுகத்தில் ஈடுபட்டு எனக்குத் தந்த வாக்கை முற்றிலும்



மறந்து விட்டான். இந்த வானர ராஜன் ஒரு கயவனாகத் தெரிகிறது. லக்ஷ்மணா! நீ உடனே கிஷ்கிந்தைக்குப் போய் வானர ராஜனைக் கண்டு சொல்: 'உன் அண்ணனை அனுப்பிய எம லோகத்தின் வாயில் திறந்து உனக்காகவும் காத்திருக்கிறது. தெரிந்து கொள். வாலி சென்ற வழி நீயும் போக விரும்புகிறாயா?' என்று நான் கேட்டதாக அவனுக்குப் பளிச்சென்று சொல்லிப் புத்தி புகட்டுவாய்.

''செய்த உபகாரத்தை மறந்தவன் அழிந்து போவான். மித்திரனை ஏமாற்றப் பார்ப்பவன் கதி அதோகதியாகும். ராமனுடைய வில்லும் அம்பும் தயாராக இருக்கின்றன என்று அவனுக்குச் சொல்.

''மாரி மாதங்கள் நான்கும் முடிந்து விட்டன. நான்கு மாதங்களும் ராமனுக்கு நான்கு யுகங்களாகக் கழிந்தன. நீயும் உனக்கு அடங்கியவர்களுமோ சந்தோஷமாகப் போகங்களை அனுபவித்து வருகிறீர்கள். ராமனுடைய கோபத்தை வளர்த்து வருகிறீர்கள். நாச மடைவதற்கு வழி தேடுகிறீர்கள் என்று சொல்வாய்.''

இப்படி ராமன் தன் கோபத்தையும் ஆத்திரத்தையும் சுக்ரீவனுக்குத் தெரியப் படுத்தச் சொல்லித் தம்பி லக்ஷ்மணனை அனுப்பினான்.

*   *

லக்ஷ்மணன் புறப்பட்டான். அண்ணனுடைய துயரத்தையும் நெருப்பைப் போன்ற கோபத்தையும் அப்படியே ஏற்று வாங்கிக் கொண்டு புறப்பட்டுப் போனான்.

உடனே ராமன் யோசிக்கலானான். லக்ஷ்மணனுடைய சுபாவ மறிந்தவனானபடியால் இது அபாயத்தில் முடியும் என்று எண்ணித் தம்பியைக் கூப்பிட்டு மறுபடியும் ராமன் பேசலானான்:

''சுக்ரீவனிடம் என் கோபத்தைச் சொல்லும்போது கடுஞ் சொற்கள் உபயோகிக்க வேண்டாம். என்னவாயினும் நாம் அவனைச் சிநேகிதனாகக் கொண்டு விட்டோம். அவனுடைய தவற்றை மட்டும் எடுத்துக் காட்டு'' என்று எச்சரித்து அனுப்பினான்.

லக்ஷ்மணன், ''அப்படியே!'' என்று சொல்லிச் சென்றான். ஆயினும் மகா கோபத்தோடுதான் கிஷ்கிந்தை வாயிலை அணுகினான்.

லக்ஷ்மணனுடைய கோபத் தோற்றத்தையும், கையிலிருந்த ஆயுதங்களையும் பார்த்து, வானரக் காவலாளிகள் ஏதோ விபரீதம் நடக்கும் போலிருக்கிறது, கோட்டையை ஜாக்கிரதையாகக் காக்க வேண்டும் என்று ஆயத்தமானார்கள்.

அவர்களுடைய இந்த நடவடிக்கையைப் பார்த்த லக்ஷ்மணனுக்கு



இன்னும் கோபம் அதிகரித்தது. சில வானரர்கள் ஒரே ஓட்டமாக ஓடி அந்தப்புரத்தி லிருந்த சுக்ரீவனுக்கு விஷயத்தைச் சொன்னார்கள். ''லக்ஷ்மணன் பெருங் கோபமாய் வில்லும் பாணமுமாக வந்து கொண்டிருக்கிறான். தடுத்தாலும் நிற்கவில்லை.''

வானர ராஜனோ கள்ளும் ஸ்திரீகளுமாக அந்தப்புரத்தில் மயக்கத்தில் கிடந்தான். வானரர்கள் சொன்னது, அவன் காதில் ஏறவில்லை.

ராஜ சேவகர்களுடைய உத்தரவின் பேரில் குகை வாயிலைச் சேனையாட்கள் பலமாக நின்று யாரும் உள்ளே பிரவேசிக்காமல் காவல் காத்தார்கள். இப்படி நிகழ்ச்சிகள் மேலும் மேலும் இளைய பெருமாளுக்குக் கோபம் மூட்டும் முறையில் வளர்ந்து கொண்டு போயின.

தடையை மீறி லக்ஷ்மணன் உள்ளே பிரவேசித்தான். முதலில் அங்கதனைக் கண்டான். வாலியின் குமாரன் அங்கதனைக் கண்டதும் லக்ஷ்மணனுடைய கோபம் ஓரளவு தணிந்தது.

''குழந்தாய்! போய் வானர ராஜனிடம் தெரியப்படுத்துவாய்! ராமசந்திரனுடைய துயரத்தால் தம்பி லக்ஷ்மணன் மிக வருத்தத்துடன் அரண்மனை வாயிலில் அரசனைப் பார்க்கக் காத்திருக்கிறான் என்று சொல்வாய்!'' என்றான்.

அங்கதன் அந்தப்புரம் போய் சுக்ரீவனிடம் விஷயத்தை மிக வினயமாய்த் தெரிவித்தான்.

ஆனால் கிராம்மிய மோகத்தில் மூழ்கியிருந்த சுக்ரீவனுக்கு இன்னும் மயக்கம் தெளியவில்லை. இதைக் கண்டு அங்கதன் மிகவும் வருத்தப்பட்டான். அந்தரங்க மந்திரிகளுடன் என்ன செய்வது என்று ஆலோசித்தான்.

ஹனுமான் உள்படச் சில மந்திரிகள் உள்ளே சென்று சுக்ரீவனுக்கு விஷயங்களை நன்றாக எடுத்துக் காட்டி அவன் புத்தி தெளிவடையச் செய்தார்கள்.

''நான் ஒரு பிசகும் செய்யவில்லையே? என் நண்பர்களாகிய ராம லக்ஷ்மணர்களுக்கு என்மேல் ஏன் கோபம்? யாரோ விரோதிகள் கோள் சொல்லி அவர்களுடைய மனத்தைக் கெடுத்திருக்க வேண்டும்'' என்றான் சுக்ரீவன்.

ஹனுமான், ''அரசனே! நான் சொல்லக் கடமைப்பட்டவன், சொல்கிறேன். கோபித்துக் கொள்ளக் கூடாது. ராமனுக்கு நாம் செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றாமல் தாமதம் செய்துவிட்டோம். ராமசந்திரனுடைய துயரத்தை நாம் மறந்து விட்டோம். இது நமக்கு அபாயமாக முடியும். ஆனபடியால் செய்ய வேண்டியதைச் செய்வீர். லக்ஷ்மணனிடம் மன்னிப்புக்கேட்டு, இனி தாமதப்படுத்தாமல் ராமனுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்'' என்றான்.

இதன்மேல் சுக்ரீவன் லக்ஷ்மணனை அழைத்து வரச் சொன்னான்.

லக்ஷ்மணன் சென்றான். கிஷ்கிந்தையின் அழகையும், உன்னத நாகரிக நிலையையும் பார்த்து வியந்தான். அழகிய தெருக்களின் வழிச் சென்று சுக்ரீவனுடைய அந்தப்புரத்துக்கு வெளியே நின்றான். உள்ளிருந்து மகிழ்ச்சி ஓசைகளும், ஆட்டமும், பாட்டமும் கேட்டு இவர்கள் தங்கள் கடமையை முற்றிலும் மறந்து விட்டு இப்படிப் போகத்தில் மூழ்கியிருக்கிறார்களே என்று கோபம் இன்னும் அதிகமாயிற்று. ஆயினும், ஸ்திரீகள் நிறைந்து கிடக்கும் அந்த இடத்துக்குள் போகக் கூச்சப்பட்டுத் தூர ஒரு மூலையில் நின்று வில்லின் நாணை இழுத்து ஒலி எழுப்பினான்.

அந்த ஒலி கிஷ்கிந்தா நகரத்தை நடுங்கச் செய்தது. நாண் ஓசையைக் கேட்டதும் சுக்ரீவன் பயந்து எழுந்து இளைய ராஜகுமாரன் உண்மையில், ஏதோ கோபமாக வந்திருக்கிறான் என்று அபாயத்தை உணர்ந்து கொண்டு தாரையைக் கேட்டுக் கொண்டான். அவளை முன்னதாகச் சென்று லக்ஷ்மணனைச் சமாதானப்படுத்தும்படி கேட்டுக்கொண்டான்.

தாரை லக்ஷ்மணனிடம் சென்றாள். அழகிலும், உலக விஷயங்களைப் பற்றிய சாமர்த்தியத்திலும் பேச்சு நயத்திலும் அவளுக்குச் சமானம் யாரும் இல்லை. அவள் லக்ஷ்மணனுக்குச் சொன்னாள்:

''வெகு நாட்கள் தரித்திரத்தையும் பகைவன் தொந்தரவையும் பொறுத்துக் கஷ்டப்பட்ட சுக்ரீவன் நீங்கள் சம்பாதித்துக் கொடுத்த ராஜ்ய சுகங்களை அனுபவித்து வருகிறான். போகத்தில் புத்தி மயங்கி விட்டான். அவன் குற்றம் எனக்குத் தெரியாததல்ல. நீங்கள் அவன் மேல் கோபம் கொள்ளலாகாது. எல்லாம் தெரிந்த நீங்கள் பொறுமை இழக்கலாகாது. மதுபானத்திலும், பிராக்ருத மயக்கத்திலும் மூழ்கிய சுக்ரீவனைப் பூரண அறிவைப் பெற்ற நீங்கள் மன்னிக்க வேண்டும். அவன் உங்களுக்குச் செய்ய வேண்டியதை மறந்து விடவில்லை. பல இடங்களிலுள்ள நம்முடைய வீரர்களை யெல்லாம் வந்துசேர உத்தரவு பிறப்பித்திருக்கிறான். அவர்கள் இன்றோ நாளையோ வந்து விடுவார்கள். பிறகு சீதையைத் தேடும் வேலையும் ராவணனை எதிர்த்து வெற்றி பெறும் வேலையும் நடைபெறும். சந்தேகப்பட வேண்டாம். அரசனைப் பார்க்க உள்ளே வரலாம்'' என்று அழைத்துச் சென்றாள். (தொடரும்)


காபியுடன் சுவைத்து மகிழ
பிரிட்டானியா மாரி
பிஸ்கட்டுகள்
BRITANNIA
MARIE
BISCUITS
BRITANNIA
MARIE
BISCUITS
பிரிட்டானியா மாரி பிஸ்கட்டுகள் மித இனிப்பானவை; மொரமொரப் பானவை; ஊட்டச் சத்துள்ளவை. மேலும் காபியுடன் உண்ண மிகச் சுவையானவை.
பிரிட்டானியா என்றுமே உயர்தரம்
BBC-1003

ரகுபதி ராகவ் மகாத்மா காந்தி

தமிழாக்கம்: ராஜாஜி

41

பாரம்பரிய முறையில் எனக்கு ரொம்ப நம்பிக்கை. ஹிந்து குடும்பத்தில் பிறந்தபடியால் நான் ஹிந்து சமயத்திலேயே இருந்துவருகிறேன். என்னுடைய ஆத்மிக வளர்ச்சிக்கு அது உதவாததாயின் நான் அதை ஒரு வருத்தமுமின்றி விட்டு விட்டு வெளியேறியிருப்பேன். என்னுடைய மனோ தர்மத்துக்கு உகந்தது அல்லதாயின், அதைத் தள்ளிவிட்டே யிருப்பேன். ஆராய்ந்து பார்த்திருக்கிறேன். நான் அறிந்த எல்லாச் சமயங்களுக்குள், விசால நோக்கம் கொண்டது ஹிந்து மதம்தான் என்பது என் உறுதி. சமய வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல் எல்லா மதத்தினரையும் நன்மதிப்போடு கௌரவிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது ஹிந்து சமயத்தைப்போல் வேறு எந்த மதத்திலும் இல்லை. கொள்கைகளைப் பற்றிய சுதந்திரம் ஹிந்து மதத்தில் சந்தேகமின்றிக் கிடக்கிறது. இந்த விசேஷம் என்னுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்கிறது. மற்ற சமயங்களைக் கண்டு ஹிந்து மதத்தினர் வெறுப்புக் கொள்ள மாட்டார்கள். அவற்றிலுள்ள நல்ல அம்சங்களை மதித்துத் தமதாக்கிக் கொள்ளவும் ஹிந்து சமயம் இடம் தருகிறது.

பிறரைத் துன்புறுத்தலாகாது என்கிற தர்மம் எல்லா மதங்களுக்கும் பொதுவாயினும் ஹிந்து மதத்தில் அஹிம்ஸைக்கு மிக உயர்ந்த ஸ்தானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அஹிம்ஸையே தர்மத்தின் சிறந்த அம்சமாக வைக்கப்பட்டிருக்கிறது. ஜெயின மதமும் பௌத்த மதமும் ஹிந்து சமயத்துக்குப் புறம்பானதாக நான் கருதுவதில்லை. மக்கள் மட்டிலுமல்ல, பிராணி வகை அனைத்தையும் ஒன்றாகக் கருதுவது ஹிந்து மதக் கொள்கை. அதன் சின்னமே பசுவுக்கு நாம் தரும் கௌரவமும் பூஜையும். எல்லாப் பிராணிகளையும் ஒன்றாகக் கருதி, பிறர் நோவைத் தன் நோவாகப் பாவிப்பது அஹிம்ஸா தர்மம். இதுவே பசு பூஜையின் பொருள். மனிதன் பசுவாகவும் புழுவாகவும் ஜென்மம் எடுப்பான் என்ற கொள்கையும் சர்வஜீவ சமத்துவத்தைக் குறிக்கிறது. ஹிந்து சமயத்தில் எல்லாவற்றிலும் சிறந்த அம்சம் வர்ணாசிரம தர்மம். உண்மையை நாடிய ரிஷிகள் உண்மை ஒன்றையே மதித்த நம்முடைய முன்னோர்கள் வர்ணாசிரம தர்மத்தைக் கண்டார்கள்.

(யங் இந்தியா 20-10-1927)

உன்னுடைய சமயம் என்ன என்று கேட்பவர்களுக்கு என்னுடைய சமயம் சநாதன ஹிந்து தர்மம் என்பேன். ஏனெனில்,

1. வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள் இன்னுமுள்ள ஹிந்து சாஸ்திரங்களையும் நான் அங்கீகரிக்கிறேன். கடவுள் அவதாரங்கள் எடுப்பதையும் புனர்ஜன்மக் கொள்கையையும் அங்கீகரிக்கிறேன்.
2. வர்ணாசிரம தர்மத்தையும் அங்கீகரிக்கிறேன். ஆனால் பழைய வேத முறையில்தான் அங்கீகரிக்கிறேன். தற்காலத்தில் வழக்கத்திலிருக்கும் கெட்டுப் போன முறையில் அல்ல.
3. பசு பூஜையை அங்கீகரிக்கிறேன். இதுவும் மக்கள் சாதாரணமாகச் செய்யும் பூஜை மட்டுமல்ல. மிக விரிந்த பொருளில் அதாவது எல்லாப் பிராணிகளையும் பூஜிக்கும் முறையில் நான் அதை அனுசரிக்கிறேன்.
4. மூர்த்தி பூஜையை நான் கூடாது என்று சொல்லமாட்டேன். அதுவும் நல்ல பூஜை முறையாகும்.

வேதங்களும் மற்ற சாஸ்திரங்களும் தெய்வத்தினின்று நேராக அடைந்தவையாகக் கருதுவார்கள். நான் அவ்வாறு சொல்ல மாட்டேன். ஹிந்துக்களுடைய வேதம் மட்டும் தெய்வீகம் என்றும், கிறிஸ்தவர்கள் இஸ்லாமியர்கள் பார்ஸியர்கள் இவர்கள் வேதமாகக் கருதும் சாஸ்திரங்களைத் தெய்வீகம் அல்ல என்றும் நினைக்க மாட்டேன். நம்முடைய வேதத்தைப் போலவே

பைபிளும், குர் ஆனும், செந்து ஆவெஸ்தாவும், தெய்வீகமே.

சாஸ்திரங்களை நான் அங்கீகரிக்கிறேன் என்றால் அதில் காணும் ஒவ்வொரு மந்திரமும் ஒவ்வொரு மொழியும் என்னைக் கட்டுப்படுத்தும் என்பதல்ல. மேலும் இந்த அபார சாஸ்திரப் புத்தகங்களையெல்லாம் நான் நேரில் படித்தா இருக்கிறேன்? இல்லை. ஆயினும், அந்த சாஸ்திரங்களின் முக்கிய தத்துவங்களை உண்மை என்று தெரிந்தே அங்கீகரிக்கிறேன். அந்த சாஸ்திரங்களில் காணும் மொழிகளுக்குப் பிறர் கூறும் பொருளை நான் சில சமயம் ஒப்புக் கொள்ளாமலும் இருக்கலாம். எவ்வளவு படித்தவர்களாயினும் அவர்கள் சொல்லும் சில வியாக்கியானங்களை நான் மறுக்கவும் கூடும். என்னுடைய விவேகத்தில் தர்ம உணர்ச்சிக்கு விரோதமாயிருப்பின் மறுப்பேன். இப்போதுள்ள மடாசாரியர்களும் சாஸ்திரம் ஓதிய பண்டிதர்களும் சொல்லும் அர்த்தத்தை ஒப்புக் கொண்டே தீர வேண்டும் என்று யாரேனும் சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டேன். கண்டிப்பாக மறுப்பேன். என்னுடைய அபிப்பிராயத்தில் நம்முடைய சாஸ்திரங்களைச் சரியாக எடுத்துச் சொல்லுகிறவர்கள் தற்போது மிகக் குறைவு. சாஸ்திர அறிவு பெரும் குழப்பத்தில் இருக்கிறது.

அஹிம்ஸா தர்மத்தைப் பூரணமாக நடத்தாதவன், சத்தியத்தின் பழுதற்ற வடிவத்தைக் காணாதவன், பிரம்மசரியத்தை வழுவாமல் நடத்தி பூரண சுத்தமடையாதவன், செல்வப் பற்றை முற்றிலும் விட்டு விட்டு விடுதலை அடையாதவன், சாஸ்திரம் உண்மையில் காண மாட்டான் என்பது வாக்கியம். இதைநான் முற்றிலும் அங்கீகரிக்கிறேன்.

ஹிந்து சம்பிரதாயத்தில் பரம்பரையாக வழங்கும் குரு—சிஷ்ய முறையை நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் இந்தக் காலத்தில் கோடிக்கணக்கிலுள்ள மக்களுக்குத் தகுந்த குரு கிடைக்க மாட்டான். படிப்பிலும் சீலத்திலும் குறைவற்ற சம்பத்தைப் பெற்ற ஆசாரியன் கிடைப்பது அரிது. இதனால் நம்முடைய சமயத்தின் அடிப்படைத் தத்துவங்களை நாம் அறிய முடியாது என்று எண்ணக் கூடாது. எந்த மதத்தின் அடிப்படைத் தத்துவங்களையும் எளிதிலேயே அனைவரும் காணலாம். அவ்வாறே ஹிந்து மதக் கொள்கைகளும். ஈசன் ஒருவன் உண்டு. பாப புண்ணியத்தின் பலனாக மறு ஜன்மம் உண்டு, முக்தி உண்டு. இது ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்த எந்தப் பாமரனுமே அறிவான். நான் ஒரு சீர்திருத்தக்காரன் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சீர்திருத்த உற்சாகத்தில் ஹிந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை எதையும் விட்டுவிட மாட்டேன்.

மூர்த்தி பூஜையை நான் தவறு என்று சொல்ல மாட்டேன் என்றேனல்லவா? அவனவனுடைய பழக்கவழக்கம் இந்த விஷயத்தில் மிக முக்கியமான அம்சம். சில விதமான உருவ வழிபாடுகள் சிலருக்குத்தான் பிடிக்கும். பிறருக்குப் பக்தியை உண்டாக்கமாட்டாது. அதனால் நாம் தவறான முடிவுக்கு வரலாகாது. ஏதேனும் ஒரு வடிவத்தையோ குறியையோ வைத்துத்தான் தெய்வ பூஜை செய்வது முடியும். அதற்குத்தான் 'லிங்கம்' என்று சாஸ்திரத்தில் பெயர். குறியேதும் இல்லாமல் பூஜை செய்வது உள்ளத்துக்குத் திருப்தி தராது. மூர்த்தி பூஜையை விலக்கிவிட்ட கிறிஸ்தவர்கள் ஏன் கோயிலுக்குப் போய்ப் பிரார்த்தனை செய்கிறார்கள்? வேறிடத்தில் பிரார்த்தனை செய்வது ஏன் போதாது ?

ஏதேனும் ஒரு லிங்கத்தை வைத்துக் கொண்டால் பூஜைக்கும் பக்திக்கும் உதவுகிறது. மூர்த்தியைப் பூஜை செய்யும் எந்தப் பாமர ஹிந்துவும் கண்களில் காணும் அந்த மூர்த்தியே கடவுள் என்று எண்ணுவதில்லை. காட்சிக்கு அடங்காத கடவுளைத் தியானிப்பதற்கு ஒரு சாதனமாகத்தான் எண்ணுகிறான். ஆகவே, மூர்த்தி பூஜை குற்றம் என்று கருதுகிறவர்களில் நான் ஒருவன் அல்ல.

நான் சொன்னதிலிருந்து ஒன்று தெளிவாகக் காணலாம். ஹிந்து மதத்தில் எவனையும் வேண்டாம் என்பதில்லை. உலகத்தில் தோன்றிய எல்லா நபிகளுக்கும் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் ஹிந்து மதத்தில் இடமுண்டு. பிரசாரம் செய்து மக்களை மதத்திலின்று மாற்றும் சம்பிரதாயம் அதில் கிடையாது. பாரத நாட்டில், காட்டிலும் மலையிலும் வசித்து வந்த பல குலத்தினரை ஹிந்து சமயம் தனதாக்கிக் கொண்டிருப்பது உண்மை. ஆனால் இதில் மதமாற்றம் ஒன்றுமில்லை. இயற்கை பரிணம முறையில் நடந்த நிகழ்ச்சியாகும். அவரவர் தாம் தாம் அறிந்த வகையில் தத்தம் தர்மத்தின்படி ஈசனை வழிபடலாம் என்பது ஹிந்து சமயத்தின் சிறந்த உபதேசம். எந்தப் புற சமயத்தோடும் சண்டை கிடையாது. சாந்தமாக எல்லாச் சமயங்களோடும் ஹிந்து சமயம் ஒத்து வாழும்.

(யங் இந்தியா 6-10-1921




பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பதினைந்தாம் அத்தியாயம்

இராஜோபசாரம்



கடம்பூர் சம்புவரையர் மாளிகையின் முன் வாசல் அன்று மாலை கண்டறியாத அற்புதக் காட்சிகளைக் கண்டது. கண்ணுக்கெட்டிய தூரம் ஜனங்கள் திரள் திரளாக நெருக்கியடித்துக் கொண்டு நின்றார்கள். ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் சிறுமிகளும் வயோதிகர்களும் அக் கூட்டத்தில் இருந்தார்கள்.

திடமாய்க் காலூன்றி நிற்கவும் முடியாத கிழவர்களும் கிழவிகளும் கோலூன்றி நின்றார்கள். தாங்கள் பிறரால் அங்குமிங்கும் தள்ளப்படுவதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் ஆதித்த கரிகாலரின் வீரத் திருமுகத்தைப் பார்க்கும் ஆர்வத்திலுல் தள்ளாடிக் கொண்டு நின்றார்கள். சிறுவர் சிறுமியர் தாங்கள் ஜனக் கூட்டத்தின் நடுவே நசுக்கப்படுவதைப் பொருட்படுத்தாமல் முண்டியடித்துக் கொண்டு முன்

னால் வர முயன்று கொண்டிருந்தார்கள். யௌவனப் பெண்கள் தங்களுக்கு இயற்கையான கூச்சத்தை அடியோடு கைவிட்டு அன்னிய புருஷர்களின் கூட்டத்தினிடையே இடித்துப் பிடித்துக்கொண்டு முன்னால் வரப் பிரயத்தனம் செய்தனர். யௌவன புருஷர்களோ, அத்தகைய இளம் பெண்களைச் சிறிதும் இலட்சியம் செய்யாமல், அவர்களின் மீது கடைக்கண் பார்வையைக்கூடச் செலுத்தாமல் இளவரசரை நன்றாகப் பார்க்கக்கூடிய இடங்களைப் பிடிப்பதிலேயே கவனம் செலுத்தினார்கள். அவர்களில் பலர் கடம்பூர் மாளிகைக்கு எதிரிலும் பக்கங்களிலும் உள்ள மரங்களின் மீதெல்லாம் ஏறிக் கொண்டிருந்தார்கள். இன்னும் அநேகர் அந்த மாளிகையின் வெளி மதில் சுவரின் பேரிலும் ஏற முயன்று, அரண்மனைக் காவலர்களால் கீழே இழுத்துத் தள்ளப்பட்டார்கள்.

பச்சைக் குழந்தைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு இளம் பெண்கள் எத்தனையோ பேர் அக்கூட்டத்தில் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டு நின்றார்கள். அழுத குழந்தைகளிடம் அவற்றின் தாய்மார்கள், ''கண்ணே! அழாதே! வீரத் தமிழகத்தின் மகா வீராதி வீரர் – 'வீர பாண்டியன் தலை கொண்ட' ஆதித்தகரிகால சோழர் வரப் போகிறார். அவரைப் பார்க்கும் பேறு பெற்றால் நீயும் ஒரு நாள் அவரைப் போல் வீரனாவாய்!'' என்று சொல்லிச் சமாதானப்படுத்த முயன்றார்கள். இம்மாதிரியே காதலர்கள் தங்கள் காதலிகளிடமும் தந்தைமார்கள் தங்கள் புதல்வர்களிடமும் ஆதித்த கரிகாலரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அந்த விதமாக ஆதித்த கரிகாலரின் வீரப் புகழ் நாடெங்கும் அக்காலத்தில் பரவி யிருந்தது. பன்னிரண்டாவது பிராயத்தில் போர்க்களம் புகுந்து கையில் கத்தி எடுத்துப் பகைவர் பலரை வெட்டி வீழ்த்தியவரும் சேவூர்ப் போர்க்களத்தில் பாண்டிய சைன்யத்தை முறியடித்து, வீர பாண்டியனைப் பாலைவனத்துக்கு ஓடிப் பாறைக் குகையில் ஒளிந்துகொள்ளும்படி செய்தவரும், பத்தொன்பதாவது பிராயத்தில் வீர பாண்டியனுடைய ஆபத்துதவிப் படையைச் சின்னா பின்னம் செய்து அவன் ஒளிந்திருந்த இடத்தைக் கண்டுபிடித்து, அவன் தலையை வெட்டிக் கொண்டு வந்தவருமான இளவரசரைப் பார்ப்பதற்கு யார்தான் ஆர்வம் கொள்ளாமல் இருக்க முடியும்?



இத்தகைய வீர புருஷரைப் பற்றிச் சென்ற மூன்று நாலு வருஷ காலமாகப் பற்பல வதந்திகள் உலாவி வந்தன. ஆதித்த கரிகாலருக்கு யுவராஜ பட்டாபிஷேகம் ஆன பிறகு சுந்தர சோழச் சக்கரவர்த்திக்கும் அவருக்கும் மனத்தாங்கல் வந்து விட்டது என்றும், ஆதித்த கரிகாலர் தமக்குப் பின் பட்டத்துக்கு வருவதைச் சக்கரவர்த்தி விரும்பவில்லை என்றும் சிலர் சொன்னார்கள். முன்னொரு காலத்தில் சோழ நாட்டு இளவரசன் ஒருவன் காஞ்சியில் தனி ராஜ்யம் ஸ்தாபித்துப் `பல்லவர் பெருங் குலத்தைத் தொடங்கி வைத்தது போல் ஆதித்த கரிகாலரும் காஞ்சி

யில் தனி அரசை ஏற்படுத்த விரும்புகிறார் என்றார்கள் சிலர். அவருடைய தம்பியாகிய அருள்மொழிவர்மனிடம் சக்கரவர்த்தி அதிக அன்பு காட்டிப் பட்சபாதமாக நடந்துகொள்வதால் ஆதித்த கரிகாலருக்குக் கோபம் என்றார்கள் வேறு சிலர். இன்னும் சிலர் இதை அடியோடு மறுத்துக் கரிகாலனையும் அருள்மொழியையும் போல் நேச பாவமுள்ள சகோதரர்கள் இருக்க முடியாது என்று சாதித்தார்கள். இளவரசருக்கு இன்னும் திருமணமாகாமலிருந்தது பற்றியும் பலர் பலவாறாகப் பேசினார்கள். அரசகுலத்து மங்கை



யாரையும் கரிகாலர் மணப்பதற்கு மறு தளித்து ஆலய பட்டர் மகளை மணந்து அரியாசனம் ஏற்றுவிக்க எண்ணியது தான் தந்தைக்கும் மகனுக்கும் வேற்றுமை நேர்ந்த காரணம் என்றும் சிலர் சொன்னார்கள். ஆதித்த கரிகாலருக்குச் சித்தப் பிரமை என்றும், பாண்டிய நாட்டு மந்திரவாதிகள் சூனிய வித்தையினால் அவரை அரைப் பைத்தியமாக்கி விட்டார்கள் என்றும், அதனாலேயே சக்கரவர்த்திக்குப் பிறகு அவர் சோழ சிங்காதனம் ஏறுவதைச் சிற்றரசர்கள் விரும்பவில்லை என்றும் சிலர் பேசிக் கொண்டார்கள்.

ஏது எப்படி இருந்தாலும், அந்த மகா வீரரைப் பார்ப்பதற்கு ஜனங்கள் அளவிலா ஆர்வம் கொண்டிருந்தார்கள். கடம்பூர் மாளிகைக்கு இளவரசர் கரிகாலர் விஜயம் செய்யப் போகிறார் என்ற செய்தி பரவியது முதலே சுற்றுப் பக்கங்களில் பெருங் கிளர்ச்சி உண்டாகி யிருந்தது. அன்று மாலை வரப் போகிறார் என்று தெரிந்த பிறகு அக்கம் பக்கத்தில் இரண்டு காத தூரம் வரையில் இருந்த எல்லா ஊர்களிலிருந்தும் மக்கள் வந்து திரண்டு விட்டார்கள்.

அந்தக் கூட்டத்தை ஜன சமுத்திரம் என்று சொல்வது மிகப் பொருத்தமாயிருந்தது. ஆயிரமாயிரம் ஜனங்களின் கண்டங்களிலிருந்து எழுந்த பேச்சுக் குரல்கள் உருத் தெரியாத ஒரே இரைச்சலாகிச் சமுத்திர கோஷத்தைப்போல் கேட்டுக் கொண்டிருந்தது. மாளிகையின் முன் வாசலுக்கு எதிரே இளவரசரும் அவருடைய பரிவாரங்களும் வருவதற்கு அரண்மனைக் காவலர்கள் வழி வகுத்து நின்றார்கள். பின்னாலிருந்த ஜனங்கள் வந்து மோதியபடியால் முன்னாலிருந்தவர்கள் நகர்ந்து வந்து அவ்வழியை அடைக்கப் பார்த்ததும், காவலர்களால் தள்ளப்பட்டு அவர்கள் மீண்டும் பின்னால் சென்றதுமான காட்சி, சமுத்திரக் கரையில் அலைகள் வந்து மோதிவிட்டுப் பின் வாங்குவதை யொத்திருந்தது.

மரத்தின் மேல் இருந்த ஒருவன் திடீரென்று "அதோ வருகிறார்கள்!" என்று கூவினான். "எங்கே? எங்கே?" என்று ஆயிரம் குரல்கள் எழுந்தன. ஒரு குதிரை அதி வேகமாக வந்தது. கூட்டத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல் புகுந்து பாய்ந்து வந்தது. குதிரையின் காலடியில் சிக்கிக் கொள்ளாமலிருக்கும்படி ஜனங்கள் இருபுறமும் நெருக்கி யடித்துக் கொண்டு வழி விட்டார்கள். "இளஞ் சம்புவரையன்!" - என்று கத்தினார்கள். ஆம்; வந்தவன் கந்தமாறன்தான்! கூட்டத்திலிருந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் கந்தமாறன் வேகமாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு போய்க் கோட்டை வாசல் அருகே நிறுத்திவிட்டுக் கீழே குதித்தான். அங்கே நின்று கொண்டிருந்த சம்புவரையரையும் பழுவேட்டரையரையும் பார்த்து வணங்கி விட்டு, "இளவரசர் வருகிறார். ஆனால் சித்தம் அவ்வளவு சுவாதீனத்தில் இல்லை. திடீர் திடீர் என்று கோபம் வருகிறது. முன்னெச்சரிக்கை செய்வதற்காகவே வந்தேன். நல்லபடியாக இராஜோபசாரம் செய்து வரவேற்க வேண்டும். அவர் ஏதாவது தாறுமாறாகப் பேசினாலும் பதில் சொல்லாமலிருப்பது நல்லது!" என்றான். இவ்விதம் கூறிவிட்டு அங்கே நிற்காமல் மேலே அண்ணாந்து பார்த்தான். முன் வாசல் கோபுரத்தின் மேன்மாடியில் அரண்மனைப் பெண்கள் காத்திருப்பது தெரிந்தது. உடனே கோட்டைவாசலில் புகுந்து உள்ளே சென்று, அங்கே ஒரு பக்கம் இருந்த மச்சுப் படிகளின் வழியாக மேலே ஏறிச் சென்றான்.

பெண்கள் இருக்குமிடத்தை அடைந்ததும் கந்தமாறனுடைய கண்கள் மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் நந்தினி தேவி இருக்குமிடத்தைத் தேடிக் கண்டு பிடித்தன. அவள் அருகில் சென்று, "தேவி! தங்கள் விருப்பத்தை நிறைவேற்றினேன். இளவரசரை அழைத்து வந்தேன். அதோ வந்து கொண்டிருக்கிறார். ஆனால் மதம் பிடித்த யானையைப் போல் இருக்கிறார். அவரை எப்படிச் சமாளிக்கப் போகிறோமோ, தெரியவில்லை!" என்றான்.

"ஐயா! அதைப் பற்றி என்ன கவலை? மதம் பிடித்த யானையை அடக்கி ஆள்வதற்குத் தங்கள் சகோதரியின் இரு கண்களாகிற அங்குசங்கள் இருக்கின்றன!" என்றாள் நந்தினி.

மணிமேகலை, "அக்கா! இது என்ன பேச்சு?" என்றாள்.

கந்தமாறன், "மணிமேகலை! பழுவூர் ராணி கூறுவதில் தவறு ஒன்றுமில்லையே! ஆதித்த கரிகாலரைப் போன்ற வீராதி வீரரைப் பதியாகப் பெறத் தவஞ் செய்ய வேண்டாமா?" என்றான்.

மணிமேகலை பதில் சொல்வதற்குள் நந்தினி குறுக்கிட்டு, "ஐயா! இளவரசருடன் இன்னும் யாரேனும் வருகிறார்களா?" என்று கேட்டாள்.

"ஆம்; ஆம்! பார்த்திபேந்திர பல்லவனும் வந்தியத்தேவனும் வருகிறார்கள்."

நந்தினி மணிமேகலையைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு, "எந்த வந்தியத்தேவன்? தங்களுடைய சிநேகிதன்

என்று சொன்னீர்களே, அவனா?" என்றான்.

"ஆம்; என்னைப் பின்னாலிருந்து குத்திக் கொல்லப் பார்த்த அந்தப் பரம சிநேகிதன்தான். அவன் எங்கிருந்தோ எப்படியோ வந்து குதித்து வெள்ளாற்றங்கரையில் எங்களோடு சேர்ந்து கொண்டான். இளவரசருடைய தாட்சண்யத்துக்காகப் பார்த்தேன்; இல்லாவிடில் அங்கேயே அவனை என் கத்திக்கு இரையாக்கியிருப்பேன்!" என்றான்.

மணிமேகலையின் முகம் சுருங்கிப் புருவங்கள் நெரிந்தன. "அண்ணா! அவர் உங்கள் முதுகில் குத்தியது உண்மையாக இருக்கும்பட்சத்தில் அவரை எதற்காக இந்த மாளிகைக்குள் வரவிட வேண்டும்?" என்றாள்.

"கண்ணே! நீ பேசாமலிரு! அதெல்லாம் புருஷர்களின் விஷயம். நேற்றைக்குச் சண்டை போட்டுக் கொள்வார்கள்; இன்றைக்குக் கட்டிப் புரளுவார்கள்!" என்றாள் நந்தினி.

கந்தமாறன் புன்னகை புரிந்து, "அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இளவரசரின் முகத்துக்காகப் பார்க்க வேண்டியதாயிற்று. ஓகோ! கூடை கூடையாகப் புஷ்பம் கொண்டு வந்து வைத்திருக்கிறீர்களே! நீங்கள் இங்கிருந்து பொழிகிற மலர் மழையினால் இளவரசரின் கோபம் தணிந்து அவர் சாந்தம் அடைந்து விடுவார்! அதோ வந்து விட்டார்கள்! நான் கீழே போகிறேன்" என்று சொல்லிவிட்டு, விடுவிடுவென்று மச்சுப் படிகளில் இறங்கிப் போனான்.

அந்த முன் வாசலின் மேல்மாடத்திலிருந்து பார்க்கும்போது கண்ணுக்கெட்டிய தூரம் பரந்திருந்த ஜன சமுத்திரத்தின் நடுவே, சுழிக் காற்றினால் ஏற்படும் நீர்ச் சுழலைப்போல் ஓரிடத்தில் தோன்றிக் கொண்டிருந்தது. அந்தச் சுழலின் மத்தியில் அகப்பட்டுக்கொண்ட நாவாயைப் போல் மூன்று குதிரைகளும் அவற்றின் மேல் வந்த வீரர்களும் சில சமயம் தோன்றினார்கள். மறு கணம் ஜன சமுத்திரத்தின் பேரலைகளினால் அவர்கள் மறைக்கப்பட்டார்கள்.

அவ்விதம் ஏற்பட்ட சுழல் மேலும் மேலும் பிரயாணம் செய்து கோட்டையின் முன் வாசலை நெருங்கிக் கொண்டிருந்தது. கடைசியில், கோட்டை வாசலுக்கே வந்துவிட்டது.

கோட்டை வாசலை அடைந்த மூன்று குதிரைகள் மீதும் வீற்றிருந்தவர்கள் ஆதித்த கரிகாலரும் பார்த்திபேந்திரனும் வந்தியத்தேவனும்தான்.

அவர்களைத் தொடர்ந்து வந்த யானை குதிரை பரிவாரங்கள் எல்லாம் வெகு தூரம் பின்னாலேயே அந்தப் பெரிய ஜன சமுத்திரத்தினால் தடை செய்யப்பட்டு நின்று விட்டன.

குதிரைகள் வந்து மாளிகை வாசலில் நின்றதும், ஒரு பெரிய முழக்கம் எழுந்தது. இருபது பேரிகைகள், இருநூறு கொம்புகள், முந்நூறு தாரைகள், ஐந்நூறு தம்பட்டங்களிலிருந்து எழுந்த அந்தப் பெரு முழக்கத்தைக் கேட்டு அந்த மாபெரும் ஜன சமுத்திரத்தின் பேரிரைச்சலும் ஒருவாறு அடங்கியது.

வாத்தியங்களின் பெரு முழக்கம் சிறிது நேரம் ஒலித்துவிட்டுச் சட்டென்று அடங்கி நின்றது.

அப்போது ஏற்பட்ட நிசப்தத்தில் கட்டியங் கூறுவோன் மேன் மாடத்தை அடுத்திருந்த ஒரு மேடை மீது நின்று இடி முழக்கக் குரலில் கூவினான்:

"சூரிய வம்சத்தில் பிறந்த மனு மாந்தாதா, அந்த வம்சத்தில் புறாவுக்காக உடலை அறுத்துக் கொடுத்த சிபிச் சக்கரவர்த்தி, சிபிச் சக்கரவர்த்திக்குப் பின் தோன்றிய இராஜகேசரி; அவருடைய புதல்வர் பரகேசரி, பசுவுக்கு நியாயம் வழங்குவதற்காகப் புதல்வனைப் பலி கொடுத்த மனுநீதிச் சோழன், இமயமலையில் புலி இலச்சினை பொறித்த கரிகால் பெருவளத்தான், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, பெருநற்கிள்ளி, குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், குராப்பள்ளி துஞ்சிய கிள்ளி வளவன், எழுபத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த கோப்பெருஞ் சோழர், இன்னும் இவர்கள் வழி வழித் தோன்றிய தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த பழையாறை விஜயாலயச் சோழர், அவருடைய குமாரர் ஸஹ்ய மலையிலிருந்து புகார் நகரம் வரையில் காவேரி நதி தீரத்தில் எண்பத்திரண்டு சிவாலயம் எடுப்பித்த ஆதித்த சோழர், அவருடைய குமாரர் மதுரையும் ஈழமும் கொண்டு, தில்லைச் சிதம்பரத்தில் பொன் மண்டபம் கட்டிய பராந்தகச் சோழ சக்கரவர்த்தி, அவருடைய குமாரர் இரட்டை மண்டலத்துக் கன்னர தேவன் படைகளை முறியடித்து ஆற்றூர்த் துஞ்சிய வீராதி வீரராகிய அரிஞ்சய தேவர், அவருடைய குமாரர் ஈழம் முதல் சீட்புலி நாடுவரை ஒரு குடை நிழலில் ஆளும் பழையாறைப் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி, அவருடைய மூத்த குமாரர் — கோப்பெரு மகனார் — வடதிசை மாதண்ட நாயகர்— யுவராஜ சக்கரவர்த்தி—வீரபாண்டியன் தலைகொண்ட ஆதித்த கரிகால சோழர் விஜயம் செய்கிறார்! பராக்! பராக்!" என்று அக்கட்டியம் கூறுவோன் கூறி முடித்ததும் மழை பெய்து இடி இடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது.

உடனே அவன் அருகிலிருந்த இன்னொரு கட்டியக்காரன், ''கொல்லிமலை மன்னன் — ஒரே அம்பில் சிங்கத்தையும் கரடியையும் மானையும் பன்றியையும் சேர்த்துத் தொளைத்த வீரன் வல் வில் ஓரி — அவனுடைய பரம்பரையில் வழி வழித் தோன்றிய ராஜாதி ராஜ ராஜ மார்த்தாண்ட வீர கம்பீர சம்புவரையன் — சோழ சக்கரவர்த்தி குலத்திற்கு என்றும் துணைவன் — வீர நாராயண ஏரியின் காவலன் — ஐயாயிரம் வீரப் படையின் தண்ட நாயகன் — தனது சிறு அரண்மனையில் எழுந்தருளியிருக்குமாறு கோப்பெருமகனார் ஆதித்த கரிகால சோழரை மன மொழி மெய்களால் உவந்து வரவேற்கிறான்! சோழகுலத் தோன்றலின் வரவு நல்வரவு ஆகுக!'' என்று கூவினான்.

அவன் அவ்விதம் பேரிடி போன்ற குரலில் கூறி முடித்ததும் மேல் மாடியிலிருந்து மலர்மாரி பொழிந்தது. ஆதித்த கரிகாலனும் வந்தியத் தேவனும் அண்ணாந்து பார்த்தார்கள். அங்கே இருந்த பல பெண்களின் சுந்தர முகங்களுக்கு மத்தியில் வந்தியத் தேவனுக்கு மணிமேகலையின் மலர்ந்த புன்னகையுடன் கூடிய முகம் மட்டும் தெரிந்தது. வந்தியத் தேவனும் ஒரு கணம் புன்முறுவல் செய்தான். உடனே தன் காரியம் எவ்வளவு தவறானது என்பதை உணர்ந்தவன் போல் வேறு திசையை நோக்கினான்.

அதே சமயத்தில் மேலே நோக்கிய ஆதித்த கரிகாலனின் முகத்தில் முன்னை விடக் கடுகடுப்பு அதிகமாயிற்று. அவன் குதிரை மீதிருந்து கீழே குதித்தான்.

மற்ற இருவரும் குதிரை மீதிருந்து இறங்கினார்கள்.

இதற்குள் மறுபடியும் வாத்தியங்களின் கோஷம் முழங்கத் தொடங்கி விட்டது. சற்று அடங்கியிருந்த ஜன சமுத்திரத்தின் ஆரவாரப் பேரொலியும் மீண்டும் பொங்கி எழுந்து விட்டது.

விருந்தாளிகளும் அவர்களை வரவேற்பதற்கு வாசலில் நின்றவர்களும் கோட்டை வாசலுக்குள் புகுந்தார்கள். உடனே கோட்டை வாசலின் கதவுகள் படார், படார் என்று சாத்தப்பட்டன.

ஆதித்த கரிகாலன் திரும்பிப் பார்த்துவிட்டு, ''ஏன் இவ்வளவு அவசரமாகக் கதவைச் சாத்துகிறீர்கள்? தஞ்சைக் கோட்டையில் என் தந்தையைச் சிறை வைத்திருப்பது போல் என்னையும் இங்கே சிறை வைக்கப் போகிறீர்களா, என்ன? என்னுடன் வந்த பரிவாரங்கள் என்ன ஆவது?'' என்று கேட்டான்.

இரு கிழவர்களும் சில கண நேரம் திகைத்துப் போய் நின்றார்கள்.

பழுவேட்டரையர் முதலில் சமாளித்துக்கொண்டு ''கோமகனே! இந்தச் சோழ சாம்ராஜ்யத்தில் உள்ள லட்சோப லட்சம் ஜனங்களின் அன்பு நிறைந்த உள்ளங்களே தங்களையும் தங்கள் தந்தையையும் சிறைப்படுத்தியிருக்கின்றன. தனியாகச் சிறை வைப்பது எதற்கு?'' என்றார்.

''இளவரசே! தங்களுடைய தரிசனத்துக்காக வந்திருக்கும் பெருந்திரளான மக்கள் இந்தச் சிறிய குடிசைக்குள் புகுந்தால் என்ன ஆவது? அவர்கள் வெளியில் நிற்கும்போது அக்கம் பக்கம் உள்ள தோப்புகள் எல்லாம் குரங்குகள் அழித்த மது வனம்போல் ஆகிவிட்டன. ஜனக் கூட்டம் கலைந்ததும் தங்களுடன் வந்த பரிவாரங்களை உள்ளே அழைத்து வருகிறோம். அது வரையில் தங்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்ய இங்கே பணியாளர்கள் பலர் இருக்கிறார்கள்.....'' என்றார் சம்புவரையர்.

இச்சமயம் கோட்டை வெளி வாசலில் ஜனங்களின் ஆரவாரம் அதிகமானது போலக் கேட்டது.

கரிகாலன் கந்தமாறனிடம், ''முன் வாசல் மேல் மாடிக்குப் போக வழி எங்கே?'' என்று கேட்டான்.


கந்தமாறன் மச்சுப் படிகள் இருந்த இடத்தைச் சுட்டிக் காட்டியதும் கரிகாலன் அந்தப் பக்கம் நோக்கி விடுவிடுவென்று நடந்து சென்றான். கந்தமாறனும் வந்தியத்தேவனும் பார்த்திபேந்திரனும் உடன் சென்றார்கள்.

சம்புவரையர், பழுவேட்டரையரைப் பார்த்து, ''இது என்ன? வழியோடு போகிற சனியனை விலைக்கு வாங்கியது போல் வாங்கிக் கொண்டோமே? இவனுடைய மூளை சரியாயிருப்பதாகவே தோன்றவில்லையே? சின்னப் பிள்ளைகளின் பேச்சைக் கேட்டு இந்தக் காரியத்தில் தலையிட்டோம்!'' என்றார்.

''அப்படி என்ன மோசம் வந்துவிடப் போகிறது? காரியம் நடந்தால் நடக்கட்டும்; நடக்கா விட்டால் போகட்டும்'' என்றார் பழுவேட்டரையர்.

''காரியத்தைப் பற்றியே நான் சொல்லவில்லை. நம் வீட்டில் இருக்கும்போது ஏதாவது ஏடாகூடமாக நடக்கக் கூடாது அல்லவா? நிமித்தம் ஒன்றும் சரியாக இல்லை; அவனோ மதம் பிடித்த யானையைப் போல் இருக்கிறான். முகத்தின் கடுகடுப்பையும் நாக்கில் விஷத்தையும் பார்த்தீர்கள் அல்லவா?''

''சில நாட்கள் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமையாயிருக்க வேண்டியதுதான். அந்தப் பல்லவன் பார்த்திபேந்திரன் அவனைக் கட்டுக்குள் வைத்



தண்ணீர் பீரங்கி !

பால்டிக் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டால் எல்பி ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்து ஹாம்பர்க் நகருக்குள் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு விடும். இவ்வித வெள்ளப் பெருக்கிலிருந்து ஹாம்பர்க் நகரைப் பாதுகாக்க மூன்று பிரும்மாண்டமான தண்ணீர்ப் பீரங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. வினாடிக்கு 12 கன மீட்டர் தண்ணீர் வீதம் இந்தத் தண்ணீர் பீரங்கிகள் உறிஞ்சி வெளியேற்றிவிடும். - யூ.பி.எஸ்.

இருக்க உதவியா விருப்பான். இன்னொரு துஷ்டச் சிறுவன் பின்னோடு வந்திருக்கிறானே, அவனைத்தான் எனக்குப் பிடிக்க வில்லை. அவன் ஒற்றன் என்றுகூட எனக்குச் சந்தேகம். முன்னால் நாம் கூட்டம் போட்ட அன்றைக்குக்கூட அவன் இங்கு வந்திருந்தான் அல்லவா? நேற்று மாலை இந்தக் கோட்டைக்கு வெளியில் மரத்தின் மறைவில் நின்றிருந்தவனும் அவன்தான்!''

''அவன் என் மகனுடைய சிநேகிதன் அல்லவா? ஆகையால் அவனைப் பற்றிப் பயமில்லை. இப்போது எதற்காகப் பெண்கள் இருக்கும் இடத்துக்கு அவசரமாகப் போகிறார்கள்? நாமும் போவோமா?''

இச்சமயம், மச்சுப் படி வரையில் போன பார்த்திபேந்திரன் திரும்பி வந்து, இரு பெரும் குறுநில மன்னர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தை அணுகினான். சம்புவரையர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன.

''ஜயா! இளவரசர் விஷயத்தில் உங்களுக்கு வேறு என்ன சந்தேகம் இருந்தாலும், பெண்கள் சம்பந்தமான சந்தேகம் மட்டும் வேண்டியதில்லை. பெண்களை அவர் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை...'' என்று சொன்னான்.

பழுவேட்டரையர் புன்னகையுடன், ''அப்படியானால் அவரை நாம் இங்கே அழைத்ததன் நோக்கம் எப்படி நிறைவேறும்?'' என்று கேட்டார்.

''அது சம்புவரையர் திருமகளின் அதிர்ஷ்டத்தையும் சோழ சாம்ராஜ்யத்தின் அதிர்ஷ்டத்தையும் பொறுத்தது.''

''பார்த்திபேந்திரா! மணிமேகலையின் அதிர்ஷ்டம் ஒரு புறம் இருக்கட்டும். வரும்போதே எதற்காக இளவரசர் இவ்வளவு கடுகடுத்த முகத்துடன் வருகிறார்? எதற்காக இப்படி விஷமமாகப் பேசுகிறார்? அவரை நீ எப்படியாவது இங்கிருந்து சமாதானமாக அழைத்துப் போனால் போதும் என்று தோன்றுகிறது!'' என்றார் சம்புவரையர்.

''வெள்ளாற்றங்கரை வரையில் இளவரசர் கூடுமையாகவும் குதூகலமாகவும் வந்தார். பின்னர் இந்த வந்தியத் தேவனும் வைஷ்ணவன் ஒருவனும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஏதோ சொல்லி யிருக்க வேண்டும். அதுமுதல் இளவரசரின் குணம் மாறியிருக்கிறது.''

''நாங்களும் அப்படித்தான் நினைத்தோம். இப்போது என்ன செய்யலாம்? அந்தத் துஷ்டப் பையனும் உங்களோடு வந்திருக்கிறானே?''

''நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நான் எல்லாம் சரிப்படுத்தி விடுகிறேன். அந்தப் பையனுடன் எனக்கும் ஒரு சண்டை இருக்கிறது. அதை நான் சமயம் பார்த்துத் தீர்த்துக்கொள்கிறேன்'' என்றான் பார்த்திபேந்திரன்.

* * *

கரிகாலனும் மற்ற இருவரும் முன்வாசல் மேன் மாடத்துக்குச் சென்ற போது அங்கிருந்த பெண்கள் திரும்பிப் படியில் இறங்கிவரும் சமயமாயிருந்தது.

கரிகாலன் கந்தமாறனைப் பார்த்து, ''நண்பனே! தாய்மார்களை யெல்லாம் நமக்காக இங்கு வந்து காத்திருக்கும்படி செய்யலாமா? அது பெருந் தவறு. நாம் அல்லவா அவர்கள் இருக்கும் இடம் சென்று நமது வணக்கத்தைச் செலுத்த வேண்டும்!'' என்று கூறிவிட்டுப் பெண் மணிகளுக்கு வணங்கி வழி விட்டு நின்றான். ஒவ்வொருவராக இறங்கியபோது கந்தமாறனிடம் யார் யார் என்று கேட்டுத் தெரிந்து கொண்டான். நந்தினியைப் பார்த்ததும், ''ஓ! பழுவூர் இளைய பாட்டி அல்லவா? உண்மையாகவே வந்திருக்கிறீர்களா? மிகவும் சந்தோஷம்!'' என்றான். நந்தினி ஒன்றும் சொல்லாமல் அவனைத் தன் கூரிய கண்களால் பார்த்து விட்டுச் சென்றாள்.

அப்பார்வையின் திட்சண்யத்தால் கரிகாலனுடைய உடம்பு சிறிது நடுங்கிற்று. மறு கணமே அவன் சமாளித்துக் கொண்டு, பின்னால் வந்த மணிமேகலையைப் பார்த்து, ''ஓகோ! இவள் உன் தங்கை மணிமேகலையாக இருக்கவேண்டும். சித்திரத்தில் எழுதிய கந்தர்வ கன்னிகையைப் போல் இருக்கிறாள். இவளுக்கு விரைவில் ஒரு நல்ல மாப்பிள்ளையைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும்!'' என்றான். மணிமேகலை வெட்கத்தினால் குழிந்த கன்னங்களுடன் வந்தியத்தேவனைக் கடைக் கண்ணால் பார்த்து விட்டு மட மட வென்று கீழே இறங்கினாள்.

பெண்கள் எல்லாரும் சென்ற பிறகு கரிகாலன் அந்த மேல் மாடத்தின் முகப்புக்குச் சென்று நின்றான். வாசலில் அப்போதுதான் கலையத் தொடங்கியிருந்த ஜனக் கூட்டத்தினிடையே மறுபடியும் பேராரவாரம் எழுந்தது. ஜனங்கள் திரும்பிக் கோட்டை வாசலண்டை வரத் தொடங்கினார்கள்.

அந்த மேல் மாடத்தை யொட்டி தனியாக நீண்டு அமைந்திருந்த மேடையில் கட்டியம் கூறுவோன் நிற்பதைக் கரிகாலன் கவனித்தான். அவனைச் சமிக்ஞையினால் அருகே வரும்படி அழைத்தான். வந்தவுடன் ஜனங்களுக்குச் சில விஷயங்களை அறிவிக்கும்படி கூறினான். கட்டியம் கூறுவோன் திரும்பிச் சென்று பேரிகையைச் சில தடவை முழக்கினான். பின்னர் ஜனங்களைச் சமிக்ஞையினால் பேசாதிருக்கும்படி கேட்டுக் கொண்டான். ஆதித்த கரிகாலரின் விருதுகளில் சிலவற்றை விடுத்துச் சிலவற்றை மீண்டும் கூறிவிட்டு, ''அத்தகைய சோழகுலக் கோமகனார் இந்தக் கடம்பூர் மாளிகையில் ஒரு வாரம்—பத்து நாட்கள் வரை தங்கியிருப்பார். சுற்றுப்புற முள்ள ஊர்களுக்கெல்லாம் விஜயம் செய்வார். அப்போது அந்தந்த ஊர் மக்களை நேரில் கண்டு அவரவர்களுடைய குறைகளையெல்லாம் கேட்டு அறிந்துகொள்வார்!'' என்று கூவினான்.

அவ்வளவுதான்; இதுவரையில் அந்த ஜனக் கூட்டத்தில் எழுந்த ஆரவாரமெல்லாம் நிசப்தம் என்று சொல்லும் படியாக அவ்வளவு பெரிய பேரிரைச்சல் கிளம்பியது. குதூகலக் குரல்களும் கரகோஷ ஓசையும் சேர்ந்து கலந்து எழுந்து சுற்றுப் பக்கம் வெகு தூரம் சென்று வீரநாராயண ஏரியிலிருந்து எழுபத்து நாலு கணவாய்களின் வழியாகப் பாய்ந்த தண்ணீர் வெள்ளத்தின் ஓசையும் அமுங்கி விடும்படி செய்தன.

சம்புவரையரும் பழுவேட்டரையரும் பார்த்திபேந்திரனும் அவர்கள் முன்னால் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார்கள். ஆதித்த கரிகாலன் அவர்கள் நின்ற இடத்தை நெருங்கியதும், ''பார்த்திபேந்திரா! ஏது நீ இங்கேயே நின்று விட்டாய்? இந்தக் கிழவர்களுடன் சேர்ந்து நீயும் சதியாலோசனை செய்யத் தொடங்கி விட்டாயா?'' என்று கேட்டான்.

கிழவர்கள் இருவரும் திடுக்கிட்டுக் கரிகாலனுடைய முகத்தைப் பார்த்தார்கள். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டிருந்தது.

சம்புவரையர் சிறிது சமாளித்துக் கொண்டு, ''கோமகனே! சற்று முன் சிறை என்றீர்கள். இப்போது சதி என்கிறீர்கள். இந்தக் குடிசையில் தாங்கள் விருந்தாளியாகத் தங்கியிருக்கும்போது தங்களுக்கு அணுவளவேனும் தீங்கு நேராது என்று ஆணையிட்டுக் கூறுகிறேன். அவ்விதம் நேருவதற்கு முன்னால் என் உடலிலிருந்து உயிர் பிரிந்து போயிருக்கும்!'' என்றார்.

''ஐயா! எனக்குத் தீங்கு நேரும் என்று நான் அஞ்சுவதாக எண்ணினீர்களா? ஒரு லட்சம் பாண்டிய நாட்டுப் பகைவர்களின் மத்தியில் இருக்கும் போதே எனக்குத் தீங்கு நேரும் என்று நான் அஞ்சியதில்லை. என் அருமைச் சிநேகிதர்களின் மத்தியில் இருக்கும் போது அஞ்சுவானேன்? ஆனால் தங்களுடைய இந்த மாளிகையைக் குடிசை என்று மட்டும் கூற வேண்டாம்! ஆகா! இதைச் சுற்றியுள்ள மதிள் சுவர்கள் எவ்வளவு உயரம்? எவ்வளவு கனம்? தஞ்சாவூர்க் கோட்டை மதிளை விடப் பெரியதாகவல்லவா இருக்கிறது? எந்தப் பகைவர்களை முன்னிட்டு இவ்வளவு பந்தோபஸ்தாகக் கோட்டை கட்டியிருக்கிறீர்கள்?'' என்றான் கரிகாலன்.

''இளவரசே! எங்களுக்கென்று தனிப் பகைவர்கள் யாரும் இல்லை. சோழ குலத்தின் பகைவர்கள் எங்கள் பகைவர்கள்; சோழ குலத்தின் நண்பர்கள் எங்களுக்கும் நண்பர்கள்.''

''தங்கள் வாக்குறுதி எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. இதைத் தங்கள் குமாரன் கந்தமாறனிடமும் சொல்லி வையுங்கள். என்னுடைய நண்பனாகிய வாணர் குலத்து இளவரசனைக் கந்தமாறன் தன்னுடைய பகைவன் என்று கருதி வருகிறான். இது பெரும் பிழையல்லவா?'' என்று ஆதித்த கரிகாலன் கூறியபோது, கந்தமாறன் தலையைக் குனிந்து கொண்டான். (தொடரும்)



ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கிவிட்டன

இந்திரா பார்த்தசாரதி



7

அந்தக் கிராமத்தில் நவநாகரிக உடையில் அமிர்தமும், நித்யாவும் வரவே அவர்களுக்குச் சௌத்ரி பிரஸாத் உபசாரம் செய்தார். பிறகு ''ஆப்லோக் ப்ராமண் ஹை.....?'' என்று கேட்டார் சௌத்ரி.

''க்யூ(ங்)?'' என்று பதிலுக்கு வினவினான் அமிர்தம்.

''ஹா(ங்)ஜி....'' என்றாள் நித்யா.

''அச்சாஜி!'' என்று சொல்லிவிட்டு, பண்டிட்ஜி வீட்டிலிருந்து குடிக்கத் தண்ணீர் கொண்டு வரும்படி ஒரு சிறுவனைச் சௌத்ரி ஏவினார்.

அப்துல் முகமெல்லாம் பல்லாக வந்தான். அவன் நித்யா தன்னை வந்து பார்ப்பாள் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டான். அவனுக்கு அமிர்தத்தை அறிமுகப்படுத்தி வைத்தாள் நித்யா. அவர்கள் இருவரையும் அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினான் அப்துல்.

அப்துல்லுக்குக் கொஞ்சம் ஆங்கிலம் தெரியும் என்று அறிந்த அமிர்தம் கேட்டான்: ''உங்கள் வீட்டிலிருந்து நாங்கள் தண்ணீர் குடிக்கக் கூடாதா? பண்டிட்ஜி வீட்டிலிருந்து தான் குடிக்க வேண்டுமா?''

அப்துல் அரைகுறை ஆங்கிலத்தில் பதில் சொன்னான்: ''பழைய மரபுகளைக் காப்பாற்றி வரும் இக்கிராமத்தில் புதுப் பிரச்னைகளைக் கிளப்பித் தயவுசெய்து குழப்பம் விளைவிக்க வேண்டாம். ஹிந்து — முஸ்லிம் தகராறு ஒன்றுமில்லாமல் இப்படியே நூறு வருஷங்களாக இருந்து வருகிறது இந்தக் கிராமம்.''

''எவ்வளவு முஸ்லிம் வீடுகள் இங்கே இருக்கின்றன?'' என்று கேட்டான் அமிர்தம்.

''பத்து.... அது கிடக்கட்டும்.... வாருங்கள், கிராமத்தைச் சுற்றிப் பார்ப்போம்.....''

முஸ்லிம் வீடுகள் சற்று ஒதுக்குப்புறமாக இருந்தன. இதைப் பற்றி அமிர்தம் வினவியபோது அப்துல் கூறினான்: ''இங்குள்ள ஹிந்துக்கள் எல்லோரும் மாமிசம் சாப்பிடாதவர்கள்...'' மாமிசம் சாப்பிடுகின்றவர்களும், மாமிசம் சாப்பிடாதவர்களும்

ஒரே இடத்தில் எப்படி இருக்கமுடியும்? இது விவேகம் கற்றுக் கொடுத்த பாடமா? அல்லது அப்துல் இதைத் தீவிரமாக நம்புகின்றானா என்று அமிர்தத்துக்குப் புரியவில்லை.

''உங்க அல்ப அரசியல் பிரச்னைகளை இங்கே கொண்டு வராதிங்கோ!'' என்று மறுபடியும் அவன் ஏதோ கேட்க ஆரம்பித்த போது, இடைமறித்தாள் நித்யா.



நித்யா பேசிக்கொண்ட பாவனை அவனுக்குப் பிடிக்கவில்லை. அப்படியானால், சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைப்பற்றி அவளுக்கு எந்த விதமான அபிப்பிராயமும் இல்லை என்பது அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது.

''நீயே ஹரிஜனா பிறந்திருந்தால் என்ன செய்திருப்பே?'' என்றான் அமிர்தம் சற்று உஷ்ணமாக.

''அந்தப் பிரச்னை தோன்றும்போது அதைச் சமாளிக்க எனக்குத் தெரியும்'' என்றாள் நித்யா ஆங்கிலத்தில்.

அதற்குப் பிறகு அமிர்தம் அவளிடம் அலிகார் திரும்பும் வரையில் பேசவே இல்லை.......

* * *

''சாப்பிடவரல்லியா?''

திலகத்தின் குரல் மிகவும் சுபாவமாக ஒலித்தது. இவளா சற்று முன்னால் அப்படியொரு கூப்பாடு போட்டாள்? மிஸஸ் ஐயரின் வருகை, ஓரளவு அவன் விரும்பிய பயனைத் தந்திருக்கிறது.

'வேண்டாம்' என்று சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்த அமிர்தம், ஒரு வேளை இது புதிய முஸ்தீப்புக்குக் காரணமாகலாம் என்று பதில் கூறாமல் சாப்பிட எழுந்தான்.

அவன் சாப்பிடுவதற்காக நாற்காலியில் உட்கார்ந்த போதுதான் அதைக் கவனித்தான்; திலகம் பவுடர் போட்ட முகத்துடன் புதுப் புடவை கட்டியிருந்தாள்!

அடுத்த நாள் காலையில் எழுந்ததும் அவன் நினைவுக்கு வந்தது. — அன்று திலகம் சினிமா போகப் போகிறாள். அவன் சுவரிலிருந்த கடிகாரத்தில் மணியைப் பார்த்தான். ஏழு. திலகம் சமைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை வாசனையிலிருந்து அறிந்தான்.

இலகம் சினிமாவுக்குப் போவது ஒரு விதத்தில் நல்லதுதான். அந்தப் பெண் பானு. அவள் வீட்டிலிருக்கும் போது டெலிபோன் செய்தால் பல சிக்கல்கள் ஏற்படலாம். அவள் அநேகமாகக் காலையில்தான் டெலிபோன் செய்யக் கூடும்.

''இன்னும் எழுந்திருக்கலையா?''

இலகம் குளித்து விட்டுப் பிரமாதமாக அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். தமிழ் சினிமா பார்க்க அவ்வளவு உற்சாகம், பரபரப்பு.

அமிர்தம் எழுந்திருந்தான். நேற்று நடந்தது அனைத்தையும் மன்னித்து விடத் தயாராக இருந்தது போலிருந்தது அவள் பாவனை.

''நீங்களும் வர்றீங்களா ?''

''எங்கே ?''

''சினிமாவுக்கு....''

''சினிமாவுக்கா...? டிக்கட் கிடைக்காது.....''

''வாங்களேன், பார்ப்போம்...''

''நிச்சயமா கிடைக்காது....''

'இது என்ன புதுத் தொல்லை?' என்று தோன்றிற்று அவனுக்கு.

''அப்பொ நானும் போகலை.....''

''இதென்ன, அவங்ககிட்ட வரேன்னு சொல்லிட்டு....''

''உடம்பு சரியில்லேன்னு ஃபோன் செய்துட்டாப் போச்சு....''

''அப்பொ எதுக்காக இவ்வளவு சீக்கிரம் எழுந்து, குளிச்சு, அலங்காரம் செய்திட்டு நிக்கறே?'' அமிர்தம் 'டூத் பிரஷ்ஷி'ல் பேஸ்டை'த் தடவிக் கொண்டே, இந்தக் கேள்வியைக் கேட்டான்.


''போகணுங்கிறீங்களா?''

''அவசியம்....''

''நான் வீட்டிலிருந்தால் தொல்லையா இருக்குதா?....'' துண்டை மேலே போட்டுக் கொண்டு, பல் விளக்கப் போனவன், அவளைத் திரும்பிப் பார்த்தான். 'அவளுக்குத் தெரிந்து விட்டதா?'

''வாட் நான்சென்ஸ்...? என்ன சொல்லறே நீ?''

''போ போன்னு என்னை ஏன் இப்படி விரட்டறீங்க?''



''இதோ பாரு.... நீ போனால் போ, போகாட்டி இரு. நான் எதைச் சொன்னாலும் வேறு எதையோ நான் மனசில் வைச்சுக்கிட்டுப் பேசறதாக நினைக்கிறே.''

நியாயமான கோபம் வந்தவன் போல் அவன் பேசினாலும், ஒருவேளை அவள் போகாமல் இருந்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவனுக்கு ஏற்பட்டது.

''நேத்தே அவங்ககிட்டே 'நான் வரல்லே'ன்னு சொல்லியிருக்கலாம்... இப்போ கடைசி நிமிஷத்திலே வரல்லேன்னு சொல்றது நல்லாயில்லே.... நான் அவ்வளவுதான் சொல்லலாம்.''

''சாப்பாடெல்லாம் செய்து வச்சிட்டேன்.....''

''அப்போ போ....''

அப்பொழுது டெலிபோன் ஒலித்தது. திலகம் டெலிபோனை எடுக்கப் போனாள்.

அப்பொழுது அவனுக்குத் தோன்றிற்று: 'ஒருவேளை பானுவாக இருந்தால்....?'

''ஹலோ....''

திலகம் அவனைப் பார்த்தாள். 'அட, கடவுளே! பானுதானோ?... தொலைந்தது. மறுபடியும் நேற்றிரவு சம்பவங்கள் தான்...!'

''தயாராயிட்டேன், மாமி... இதோ வந்துட்டேன்......''

'நல்ல வேளை, மிஸஸ் ஐயர்தான் போலிருக்கிறது.'

''இதோ பாருங்க....டிஃபன், காப்பியெல்லாம் மேஜையின் மேல் கொண்டு வச்சுடறேன்.... அப்புறம் பசிச்சா, சாப்பாட்டை எடுத்துப் போட்டுக்கிட்டுச் சாப்பிடுங்க.... வேணும்னா அதையும்.. ''

''ஒண்ணும் வேணாம்.... நீ புறப்பட்டுப் போ. அவங்க காத்துக்கிட்டு இருப்பாங்க....''

அவள் போகும்போது ஒரு செயற்கையான புன்னகையுடன் கேட்டாள்: ''யாரையாவது வரச் சொல்லியிருக்கீங்களா ?''

அவன் மிகுந்த கோபத்துடன் அவளை முறைத்துப் பார்த்தான்.

''இப்படிப் பேசறதுக்கு மன்னிச்சுடுங்க.... உங்களை நம்பறேன்....''

திடீரென்று அவளிடம் அவனுக்கு ஓர் அநுதாப உணர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக எரிச்சலும் உண்டாயிற்று. இதென்ன பண்பாடு வேண்டியிருக்கிறது, திருமணப் பிணைப்பில் ஒரு தவிர்க்க முடியாத தன்மைக்குக் காரணமான பண்பாடு...? கணவன், மனைவி என்பதற்கு முன்னால், ஆண், பெண் என்பதுதானே தர்க்க ரீதியாக ஒப்புக் கொள்ள வேண்டிய கருத்து?—

அப்பொழுது டெலிபோன் மணி ஒலித்தது. பாதிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் வாசற்கதவைத் தாளிட்டுவிட்டு டெலிபோனைக் கையில் எடுத்தான்.

''அமிர்தம் பேசறேன்!''

''பானு.... குட்மார்னிங்....''

''குட் மார்னிங்.... நீ ஃபோன் செய்வேன்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன்......''

''அப்படியா....? மாமி இல்லியா?''

''சினிமாவுக்குப் போயிருக்கா.... பைதிவே 'மாமி, மாமி'ன்னு சொல்லாதே.... அது என்னை வயசானவன் மாதிரி காட்டறது!''

பானு சிரித்தாள். ''உங்களுக்கு எவ்வளவு வயசாறது?.....''

அமிர்தம் கொஞ்சம் திடுக்கிட்டான். 'எதற்காகக் கேட்கிறாள்? என்னை மட்டம் தட்டவா?'

''ஏன் பேசாம இருக்கீங்க? சொல்லக்கூடாதா? நீங்களும் என்ன பொம்பளைட்டியா ?''

''ஆகட்டும். பத்துக்குள்ளே ஒரு நம்பர் சொல்லு.''

''நான் சின்ன வயசில் குழந்தைப் பத்திரிகையெல்லாம் படிச்சதில்லே.... தயவுசெய்து இப்பொவும் வேணும்...''

அமிர்தம் சிரித்தான். ''சரி, எனக்குப் பதினேழு வயசிலே கல்யாணம் ஆகியிருந்தால் உன் வயசிலே ஒரு பொண்ணு இருக்கும்.... போதுமா?''

''உங்களையே வருத்திக்கிறதா அர்த்தமா ?''

அமிர்தத்துக்கு முகத்தில் அறைந்தாற் போலிருந்தது. 'கெட்டிக்காரப் பெண்..... இவளிடம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும்....'

''அது கிடக்கட்டும்... இப்போ எதுக்கு ஃபோன் செய்தே?....''

''என் வார்த்தையைக் காப்பாத்தினேன்.....''

''என்ன வார்த்தை ?''

''போன் செய்யறேன்னேன், செய்துட்டேன்....''

''சரி, வச்சுடறயா?''

''ஏன் கோபப்படறீங்க, யார் மேலே கோபம் உங்களுக்கு?''

அதுதான் அவனுக்கும் புரியவில்லை.

''நீ சாயந்திரம் ஃப்ரீதானே?''

''ஹூம்....''

''புத்தா பார்க், அல்லது வேறெதாவது இடம் போகலாமா? உன்னோட கொஞ்சம் பேசணும்....''

மன்னனின் மாண்பு



சிங்கம்டா!

உலகத்தின் ஒரு மூலையில் ஒரு காடு. மக்கள் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். ஒரு நாள் பெரிய சிங்கம் கிராமத்தில் புகுந்து ஒரு மனிதனைச் சாப்பிட்டது! பிறகு மூன்று ஆட்கள் இரையாயினர். மூன்று வேட்டைக்காரர்கள் காட்டில் சிங்கத்தை வேட்டையாடச் சென்றார்கள். திரும்பவில்லை. உடனே அரசன் உலகம் முழுவதும் தூதுவனை அனுப்பி, "யாராவது தைரியத்துடன் முன் வந்து சிங்கத்தைத் தீர்த்துக்கட்ட வேண்டும்" என்று தெரிவிக்கச் சொன்னான்.

சட்டை பாண்டும், சூரியனை மறைக்கத் தொப்பியும் அணிந்து இங்கிலீஷ்காரர்கள் வந்தார்கள். வந்ததும் வராததுமாகத் தேநீர் தயாரித்தார்கள். அவர்கள் தேநீர் தயாரிக்கும் வேளையில் அவர்களைச் சிங்கம் விழுங்கிவிட்டது.

அடுத்து ஜெர்மானியர் வந்தார்கள். புத்தகங்களில் சிங்கங்களைப் பற்றிப் படித்து ஆராய்ச்சி செய்து வரை படம் போட்டு, எப்படிச் சிங்கத்தைக் கைப்பற்றுவது என்று திட்டம் போட்டார்கள். அவர்கள் வரை படம் தயாரிப்பதற்குள் சிங்கம் அவர்கள் வாழ்க்கையை முடித்து விட்டது.

அடுத்தபடியாகப் பிரெஞ்சுக்காரர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவன் துப்பாக்கியைச் சிங்கத்தின் மீது நீட்டி நின்றான். திடீரென்று அவனுக்கு மரியாதைப் பண்பு நினைவுக்கு வந்தது. "உங்களுக்குப் பிறகுதான்!" என்று தன் தோழனை வணங்கி அவரை முதலில் சுடச் சொன்னான். "இல்லை; இல்லை! உங்களுக்குப் பிறகுதான்!" என்று தோழனும் வணங்கினான். இப்படிப் பிரெஞ்சுக்காரர்கள் பணிந்து கொண்டிருந்த போது சிங்கம் பாய்ந்து, தன் வேலையை முடித்துக் கொண்டது.



இதன்பின் அமெரிக்கர்கள் வந்தார்கள். அவர்களிடம் அற்புதமான பெரிய துப்பாக்கிகள் இருந்தன. அந்தத் துப்பாக்கிகளுக்கு மெருகு ஏற்றுவதில் அவர்கள் மூழ்கியிருந்த சமயத்தில் சிங்கம் முந்திக் கொண்டுவிட்டது.

கடைசியாக ஒரு மெக்ஸிகோ இளைஞன் வந்தான். அவன் அழகும் இளமையும் மிக்கவன். அவனது பெயரே சிங்கம்! அவன் வந்ததும் காட்டில் ஒரு பெரிய 'கான்வெக்ஸ்' நிலைக்கண்ணாடியை வைத்தான். சிங்கம் வந்து தன் பிரதிபிம்பத்தைப் பார்த்தது. "ஆ! நான் எவ்வளவு பெரிய பயங்கரமான சிங்கம்!" என்று வீரத்துடன் பாய்ந்து நாலு மனிதர்களைக் கொன்றது.

அரசனுக்குப் பெருங் கோபம் வந்தது. காரியத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டான் என்று நினைத்தான். "கொஞ்சம் பொறுங்கள், அரசே!" என்று வேண்டினான் சிங்க இளைஞன்.

அடுத்த நாள் சாதாரணக் கண்ணாடியை மரத்தில் சாய்த்து வைத்தான். தான் பழைய வயதான சிங்கம் என்று கண்ணாடியில் பார்த்துத் தெரிந்து கொண்டு ஒரு வயதான மிருகத்தை மட்டும் ஏப்பம் விட்டது. மூன்றாம் நாள் மெக்ஸிகோ இளைஞன் 'கான்கேவ்' வடிவம் படைத்த கண்ணாடியை வைத்தான். சிங்கம் வந்து பார்த்தபோது ஒரு பூனைக்குட்டிபோல் அந்தக் கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டது. உடனே அது கூனிக் குறுகிப் போயிற்று. மெக்ஸிகோ வாலிபன் வந்து ஒரு பேப்பர் பையில் சிங்கத்தைப் போட்டு அரசனிடம் எடுத்துச் சென்றான்!

அரசன் மிகப் பெரிய விருந்து வைத்துக் கொண்டாடினான். மெக்ஸிகோ இளம்சிங்கம் அளவற்ற பணத்துடன் மெக்ஸிகோ திரும்பினான்.

— மெக்ஸிகோ நாடோடிக் கதை — பி. எஸ். மணி

சிறிது நேரம் மௌனம்.... பிறகு கேட்டாள்: "இதுக்கு நான் என்ன பதில் சொல்லணும்னு எதிர்பார்க்கிறீங்க?"

"உண்டு, இல்லேங்கிற பதில். எதுக்கும் தயாராய் இருக்கேன்....... அந்தப் பிரச்னையை உன்னிடமே விட்டுட்டேன்!"

பானு சிரித்தாள்.

"எதுக்குச் சிரிக்கிறே?"

"சில சமயம் நீங்க தியாகி மாதிரி பேசறது வேடிக்கையா இருக்கு...."

'பேசுபவள் யார் பானுவா, அல்லது நித்யாவா?.... நித்யாவும் நிச்சயம் இப்படித்தான் பேசியிருப்பாள், தான் சொன்னதைக் கேட்டு... அவள் தலை அப்பொழுது இலேசாக இடது பக்கம் சாய்ந்து, கண்களும் சிரித்துக் கொண்டிருக்கும்.....'

"மன்னிக்கணும். ஏதோ மனசிலே தோணினதைச் சொல்லிட்டேன்."

பானுவின் குரல் கேட்டதும் அமிர்தம் சொன்னான்: "இல்லே! இல்லே! நீ இப்படியே பேசு, அதுதான் என்னுடைய விருப்பமும்!"

"சரி... அப்போ சாயந்திரம் வீட்டுக்கு வந்து அழைச்சுண்டு போங்கோ."

"வீட்டுக்கு வரலாமா?"



நீல ரோஜா

ரோஜாவில் சுமார் பத்தாயிரம் வகைகள் உள்ளன. இவற்றில் பல நிறங்கள் உள்ளன. ஆனால் இதுவரை நீல ரோஜா இருந்ததே கிடையாது. இந்தக் குறையும் இப்போது தீர்ந்து விட்டது. ரஷ்யாவைச் சேர்ந்த ''கிளிமென்கோ'' என்பவர் நீல ரோஜாவைச் சமீபத்தில் பயிர் செய்து வெற்றி கண்டிருக்கிறார்.

தகவல் : சம்பத்குமார்
ஆதாரம்: ''சோவியத் யூனியன்''

''ஏன் வரக்கூடாது?''

அவள் குரலிலிருந்த நிதானமும் அழுத்தமும் அவனை வியப்படையச் செய்தன.

''ஆகட்டும்! நான் அஞ்சு மணிக்கு வரேன்....''

''தாங்க்யூ.....''

அவன் சாப்பிடத் திரும்பிச் சென்ற போது, ஆறி உலர்ந்து போயிருந்தது தோசை. அந்த மன நிலையில் அவனுக்குப் பசிக்கவும் இல்லே. தோசையை அப்படியே எடுத்துக் கொண்டு போய்க் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டுக் கைகளைக் கழுவிக் கொண்டு வந்தான்.

திலகம் வந்த போது அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். மணி அடித்தது ஏதோ கனவில் கேட்பது போலிருந்தது. அவள் கதவையும் பலமாகத் தட்டியபிறகுதான் எழுந்திருந்து வந்தான்.

உள்ளே வந்த திலகம் சுற்றுமுற்றும் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்த்துக்கிட்டு நிக்கறே?''

''யாரானும் இருக்காங்களான்னு தான்.... கதவைத் திறக்க ஏன் இத்தனை நேரம்.....?''

''கட்டிலுக்குக் கீழெல்லாம் குனிஞ்சு நல்லா பாரு.... உனக்குப் பைத்தியந் தான் பிடிச்சுடுச்சு....''

திலகம் கைப் பையை மேஜையின் மேல் வைத்துவிட்டு, சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

''படம் எப்படின்னு கேட்கமாட்டேங்கிறீங்களே....?''

''படம் எப்படி?''

''முதல் தரம்! பொண்டாட்டி இருக்கறப்போ இன்னொருத்தியைச் சுத்திக்கிட்டு அலையற ஆம்பளைங்களுக்கு நல்ல சூடு.''

''என்ன ஆவுது ?''

''பொண்டாட்டியைப் படுத்தின பாட்டுக்கு எங்கெங்கேயோ போய்க் கஷ்டப்பட்டு, மறுபடியும் பொண்டாட்டிகிட்டேயே வந்துடறான்....''

''அதுதான் அவனுக்குத் தண்டனையா ?''

திலகம் அவனைக் கோபத்துடன் பார்த்தாள். ''ஏன் இப்படிப் பேசறீங்க?... பொண்டாட்டி பிடிக்காட்டி எதுக்காகக் கல்யாணம் செய்துக்கிட்டீங்க ?''

''ஏன் உனக்குக் கொஞ்சங்கூட நகைச்சுவையே இல்லே?''

''இல்லாட்டி போகட்டும், சாப்பிட வாங்க......''

சாப்பிட்டு முடிந்தவுடன் அவன் சோபாவில் ஒரு புஸ்தகத்துடன் உட்கார்ந்ததும், திலகம் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். வாய் நிறைய வெற்றிலைச் சிவல்.

''அது போகட்டும்... எனக்கு ஒரு வாரமா பைத்தியம் பிடிச்சதா நினைச்சுக்குங்க. எல்லாத்தையும் மறந்துடுங்க'' என்றாள் திலகம்.

திடீரென்று அவள் பக்கத்தில் வந்து உட்கார்ந்து இதைச் சொன்னது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை மிஸஸ் ஐயரிடம் இதைப் பற்றி விவாதித்து, அவள் ஏதேனும் உபதேசம் செய்திருக்கக் கூடுமோ ? —

அவன் பேசாமலிருப்பதைக் கண்டதும், அவன் தோள் மீது சாய்ந்து கொண்டே அவள் கேட்டாள்: ''இன்னிக்கு எங்கேயாவது போவோமா?''

''எங்கே?''

''புத்தா பார்க், ஒக்லா... எங்கேயாவது....''

அவனுக்குச் சற்று அதிர்ச்சியாக இருந்தது. அவளுக்கு ஏதாவது தெரியுமா? அவளை உற்றுப் பார்த்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீங்க, நெசமாத்தான் கேட்கிறேன்....''

அவன் கை இலேசாக அவள் தலையை வருடியது.

''இன்னொரு நாள் போவோம்....''

''ஏன், இன்னிக்கு என்ன?''

''இன்னிக்கா? சாயந்திரம் பானர்ஜி வீட்டுக்குப் போறேன்.... ஒரு சின்ன 'ட்ரிங்க்' பார்ட்டி....''


எப்பொழுதாவது அவன் நண்பர்களோடு குடிப்பதைத் திலகம் கட்டுப் படுத்துவதில்லை. இது அவள் அவனுக்குத் தந்திருந்த சலுகை.

''வரல்லேன்னு சொல்லிடுங்களேன்.''

''அது எப்படி முடியும்? அவனுக்கு ஏதோ பிரமோஷன் கிடைச்சதுன்னு 'பார்ட்டி'... இன்னும் யாரோ இரண்டு பேரைக் கூப்பிட்டிருக்கான்...... போகாட்டி நல்லா இருக்காது....''

தன்னால் இவ்வளவு இயல்பாகவும் கூச்சமில்லாமலும் பொய் சொல்ல முடியுமென்பது அவனுக்கே வியப்பைத் தந்தது.

(தொடரும்)



சக்தி பிறக்குது மூச்சினிலே!



☐ பிரிட்டனில் எடின்பரோ மெடோபாங்க் ஸ்டேடியத்தில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின்போது மெய்சிலிர்க்க வைத்த காட்சிகளில் சிலவற்றை இங்கு பார்க்கலாம்.

☐ 110 மீட்டர் தாண்டுதல் ஓட்டப் பந்தயத்தில் டேவிட் ஹெமிரி (வலது கோடி) வெற்றி பெற்ற சமயம் தோற்றவர்களைத் திரும்பிப் பார்க்கவும் அவருக்கு நேரம் இருக்கிறது!

☐ அயர்லாந்து போல்வால்ட் சாம்பியன் மைக் புல் தங்கப் பதக்கத்தைப் பெற்றார். 5.1 மீட்டர் உயரம் தாண்டிப் புதிய ரிகார்ட் ஏற்படுத்தினார்.

☐ கென்யா ஓட்டப் பந்தய வீரருக்கு ராணி எலிஸபெத் தங்கப் பதக்கம் சூட்டுகிறார்.





- 1500 மீட்டர் பெண்மணிகள் ஓட்டம் பந்தயத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்ரீமதி ரீட்டா ரிட்லி (472) முதல் பரிசு பெற்றார். நியூஸிலாந்தைச் சேர்ந்த ஸில்வியா (இடது) கீழே விழாமல் இருந்திருந்தால் முடிவு வேறு விதமாய் இருந்திருக்கும்.


- வேல்ஸ் ஆட்டக்காரரின் டேவிஸ் தூரம் தாண்டலில் 26' - $5\frac{1}{4}$" தாவி வெற்றிக் கொடி நாட்டினார்.

- நூறு மீட்டர் (பட்டுப் பூச்சி பாணி) நீச்சல் போட்டியில் வென்ற டையேன் லான்ஸ்லேக்கு டீம் மானேஜர் அளிக்கும் பரிசு!










□ 24·3 செகண்டில் 200 மீட்டர்கள்! வெகு வேகமாக ஓடி வாகை சூடிய மேரி பீட்டர்ஸின் வெற்றிக் களிப்பைப் பாருங்கள்!

□ இந்திய உயரம் தாண்டல் சாம்பியன் பீம்சிங் எடின்பரோ மெடோபாங்க் ஸ்டேடியத்தில் தீவிரப் பயிற்சியில் மூழ்கியுள்ளார்.

□ மூன்று தடவை தங்கமெடல் சூடிய ஹாபி மார்ட்டின் 'மிடில் ஹெவி வெயிட் போட்டி'யில் 'ஹாட்ரிக்' அடித்திருக்கிறார்.

□ 'டிரிபிள் ஜம்ப்' மன்னர் மொஹிந்தர் சிங்கின் தீவிர பயிற்சி.

□ காமன்வெல்த் போட்டிகளில் இந்தியா மல் யுத்தத்தில் ஐந்து தங்கப் பதக்கங்களைப் பெற்றது. அவற்றில் பதினான்கு வயது இளைஞன் வேத பிரகாஷின் தங்கப் பதக்க வெற்றி பெருமைக்குரிய சாதனையல்லவா?





சிதம்பர ரகசியம்

கதை: கோமதிசுவாமிநாதன்


சித்திரம்: ராஜு

3




சிறிது நேரத்தில்...
என்னங்க பெரியவரே! எத்தனை வருஷத்துச் சமையல்னு இப்படிச் சொல்றீங்க! ஒவ்வொருத்தரா இந்த வீட்டுல வந்துக் கிட்டு இருப்பாங்க போலிருக்கு.
பெரியவர்ன்னு கிட்ட முழங்குவாங்களா? சும்மா சின்னசாமின்னே கூப்பிடு! நானும் உன்னைப் போலே ஒரு தொழிலாளி தானே! வரவேண்டிய வங்க எல்லாம் வந்துட்டாங்க!
சாப்பாடு தயார்! விருந்தாளிங்களை மொத்தமாக் கூப்பிட்டுருங்க! 'டியூட்டி' அவர் 'லே டியூட்டி'! 'ரெஸ்ட்' அவர் 'லே ரெஸ்ட்'! அதுதான் கொள்கைகளில் பெஸ்ட்!
ஆகட்டும். அவங்களை யெல்லாம் ஒன்றாக மேசைக்குக் கூட்டிக் கிட்டு வர்றேன்
சாப்பாட்டு அறையில்...
இந்த சூழ்நிலை அழகைப் பார்த்து மண் வாசனை நிறைந்த கவிதைகள் எழுதலாம்னு நினைச்சேன். கூடவே பெண் வாசனையும் வீசும் போலிருக்கே! இவள் தான் என் இன்னொரு மாமா மகளா?
எத்தனையோ வாசனை பற்றிச் சொல்கிற அவருக்கு என் சமையல் வாசனை மட்டும் எட்டலையே! ரங்கதுரை சார்! சாம்பார் எப்படி?
நல்ல கேள்வி அது! இன்னும் சங்கீதம் பாட ஆரம்பிக்கலே!
சாப்பாடு முடிந்ததும் ஒரு ரகசியத் திட்டம் உருவாகிறது...
ரங்கதுரை! புதுசா முளைத்திருக்கிற இந்த ராஜாராமன் ஏதோ சிக்கல்களை உண்டாக்குவான் போலிருக்கே!
உன்னைப் பார்த்து அசட்டுத் முழிக்கிறான். கொஞ்சம் பொறு! அந்தக் கழுதையை ஒரேயடியாய்த் தூக்க ஏற்பாடு செய்யறேன்.
தொடரும்

துள்ளும் குழந்தைகள் நன்கு வளர்ந்திட
ருசித்துப் பருகட்டும் போர்ன்விடா!



ஓடி விளையாடும் குழந்தைகளுக்கு தினசரி உணவிலிருந்து கிடைக்கும் சக்தி போதுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அவர்களுக்கு சக்தி கிடைக்கிறதோ அதே வேகத்தில் அது பள்ளிக்கூடத்திலும், விளையாடும் போதும் செலவழிந்து விடுகிறது. இழக்கும் சக்தியை மீட்டுத் தந்து குழந்தைகளைத் துள்ளும் ஆரோக்கியத்துடன் வளர்க்க, தினமும் ஒரு கப் போர்ன்விடா கொடுங்கள். தம் மக்கள் நலம் கருதும் தாய்மார்கள் அனைவரும் இதை ஆமோதிப்பார்களே!

பால், சர்க்கரை, மால்ட், கோகோ இவையாவும் திட்டமாகக் கலக்கப்பட்டதும், போஷாக்குச் சத்து நிறைந்ததுமான ஒரு இனிய பானம் போர்ன்விடா. ஆம், இது ஒரு காட்பரீஸ் தயாரிப்பு!



சக்திக்கும் வலிமைக்கும்—மற்றும் தீஞ்சு

காட்பரீஸ் போர்ன்விடா.

Bensons/10391/TAM

போராட்டங்கள்

ர.சு.நல்லபெருமாள்



3. பேச்சு எங்கள் மூச்சு

பஸ் நிற்கும் இடத்தை நோக்கி இருவரும் நடந்து கொண்டிருந்தார்கள்.

''சாயங்காலம் வந்தாயாமே?'' என்று முரளி கேட்டான்.

''அந்தப் பக்கமாக வந்தேன். கண்ணை உறுத்துவதுபோல் 'பாரதமணி' என்னும் பெயர்ப் பலகை தொங்கிக் கொண்டிருந்தது. உள்ளே வந்தேன்'' என்றாள் சாரதா.

''ஓ..'பாரதமணி' கண்ணை உறுத்தப் போய்த்தான் வந்தாயா? வேறு காரணம் ஒன்றும் இல்லையா?''

''ஊஹூம்.''

''அப்படியானால், வாசலில் நின்றே அந்தப் பெயர்ப் பலகையைப் பார்த்து

விட்டுப் போயிருக்கலாமே?'' என்றான் முரளி. அவன் குரலில் சிறிது ஏமாற்றம் தொனித்தது.

''உள்ளே நீங்கள் இருந்தாலும் இருக்கலாம் என்று நினைத்தேன்.''

''பரவாயில்லே, என்னையும் நினைத்துக் கொண்டாயே!''

''ஏன்?''

''உன்னுடைய அவசரத்திலும் பரபரப்பிலும் என்னைப் பற்றிய நினைவு உன் மனத்தில் எங்கே தங்கப் போகிறது என்று நினைத்தேன்'' என்று கூறிவிட்டு அவன் முகத்தைப் பார்த்தான். அவள், தூரத்தில் வரும் பஸ்ஸைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''சாரதா, என்னுடைய பத்திரிகைக்கு ஓர் உதவி ஆசிரியர் வேண்டும்... அந்தப் பொறுப்பை நீ ஏற்றுக் கொள்வாயா?'' என்று கேட்டான் முரளி.

''ஏன்? நாம் இப்போது போடும் சண்டை போதாதென்று எப்போதும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சதா சண்டை போட்டுக் கொண்டிருக்கலாம் என்கிறீர்களா?'' என்று கேட்டுவிட்டுச் சிரித்தாள் சாரதா.

'' தூரத்தில் இருக்கப் போய்ச் சண்டை போடுகிறோம். நெருங்கி வந்து விட்டால் நிலைமை மாறிவிடும்'' என்ற முரளி அவளை ஆர்வத்துடன் பார்த்தான். அவள் முகத்தில் எவ்வித சலனமும் இல்லை. இப்போது வேலைப் பளு அதிகமாயிருக்கிறது. நீ வந்தால், எனக்கு எவ்வளவோ உதவியாயிருக்கும்.'' – முரளியின் குரல் கெஞ்சியது.

''ஏன்? உதவி ஆசிரியர் வேலைக்கு வேறு ஆள் கிடைக்கவில்லையா?''

''ஆளுக்குப் பஞ்சமில்லை. ஆனால் நான் விரும்பும் நபரே எனக்குக் கிடைத்தால்.... சம்மதமா, சாரதா?'' என்று கேட்டு ஆவலோடு அவளைப் பார்த்தான்.

''யோசித்துச் சொல்லுகிறேன்.''

''சரி, உன் இஷ்டம்'' என்று கூறிப் பெருமூச்சு விட்டான் முரளி.

பஸ் வந்ததும் இருவரும் ஏறினார்கள். பஸ்ஸில் கூட்டம் நெரித்துக் கொண்டிருந்தது. அத்தனை பேரும் மைதானத்



துக்குத்தான் போய்க் கொண்டிருந்தார்கள். சற்றுத் தூரம் போய் பஸ் நின்றதும், ஒரு பெண்மணி ஏறினாள். எங்கோ அலுவலகத்தில் வேலை பார்க்கிறாள் போலிருக்கிறது. கையில் டம்பப் பை இருந்தது. குதிகாலைத் தூக்கும் செருப்பு அணிந்திருந்தாள். புடவை, இடைக்குக் கீழே இறங்கியிருந்தது. அவளுக்கு பஸ்ஸில் உட்கார இடம் இல்லை. சுற்றும் முற்றும் பார்த்தாள். வேறு வழியின்றி மேலே உள்ள கம்பியைப் பிடித்துக் கொண்டு நின்றாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன், அவளுக்கு இடம் அளிக்க எழுந்தான். ஆனால், அவனோடு அமர்ந்திருந்த அவன் நண்பன், அவனுடைய சட்டையைப் பிடித்து இழுத்தான்.

''நிற்கட்டுமே. நின்றால் என்ன? ஆண் நிற்கலாம்; பெண் நிற்கக் கூடாதா?''

''ஐயோ, பாவம்.''

''நீ சும்மா இருடா. ஆண்களும் பெண்களும் சமம். அந்தச் சமத்து



வத்தை நீ ஏன் கெடுக்கிறாய்? அரசியல் நிர்ணயச் சட்டத்தை அவமதிக்காதே.''

இந்தப் பேச்சு பஸ்ஸில் உள்ளவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. எல்லாரும் ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

முரளி, தனக்கு எதிரே அமர்ந்திருந்த சாரதாவைப் பார்த்துப் புன்னகை செய்தான். சாரதாவோ எரிச்சலினால் முகத்தைச் சுளித்தாள்.

முரளி, தன் இடத்திலிருந்து எழுந்து அந்தப் பெண்ணை உட்காரும்படி கூறினான். அவள் உட்கார்ந்து கொண்டாள்.

''மிஸ்டர்! நீங்கள் அரசியல் நிர்ணயச் சட்டத்தை அவமதித்துவிட்டீர்கள்'' என்றான் அந்த இளைஞன். எல்லாரும் சிரித்தார்கள்; முரளியும் சிரித்துக் கொண்டான். ஆனால் அந்தப் பஸ்ஸில் இருந்த நவநாகரிகப் பெண்களால் மட்டும் சிரிக்க முடியவில்லை.

மைதானத்துக்குப் பக்கத்தில் பஸ் நின்றதும் முரளியும் சாரதாவும் இறங்கி நடந்தார்கள்.

''பஸ்ஸில் பேசினானே, அவனுக்குக் காரசாரமாகப் பதில் கொடுக்க நினைத்தேன்'' என்றாள் சாரதா.

''என்னவென்று?''

''உன்னுடைய அக்காளோ, தங்கையோ வந்தால் இப்படிப் பேசுவாயா? என்று கேட்டிருக்க வேண்டும்.''

''தன்னுடைய குடும்பத்துப் பெண்கள் அப்படி அவளைப் போல் அடக்கமில்லாமல் உடை அணிந்து, தெருவில் திரிவதில்லை என்று அவன் பதில் கூறிவிட்டால் என்ன செய்வாய்?'' என்றான் முரளி.

நன்றாக இருட்டி விட்டது. எதிரே தெரிந்த பரந்த வெளியில் மக்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். கூட்டத்தை விட்டுச் சற்று விலகி, புல் தரையில் அமர்ந்தார்கள். சற்றுத் தூரத்தில் அமைந்திருந்த மேடையில் பலர் அமர்ந்திருந்தார்கள். மேடையைச் சுற்றி நிறைய டியூப் லைட்டுகள் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

அன்று பொதுவுடைமைக் கட்சியின் மாபெரும் தலைவரான வேதமூர்த்தியின் பேச்சைக் கேட்கத்தான் அவ்வளவு கூட்டம் கூடியிருந்தது.

வேதமூர்த்தியின் மேடைப் பிரசங்கம் நாடு முழுவதும் பிரசித்தமாயிருந்தது. மேடைப் பேச்சை ஒரு கலையாகவே உபாசித்து, கேட்பவர்களைப் பரவசப் படுத்தும் ஆற்றலைப் பெற்றவர். அவருடைய கொள்கையை ஏற்றுக்கொண்டாலும், கொள்ளா விட்டாலும், அவருடைய அடுக்குமொழியிலும், சொற்களைச் சரளமாகக் கையாளும் பாங்கிலும், சொல்வது பொய்யாயிருந்தாலும், அதை அழுத்தமாகச் சொல்லி உண்மையென நம்ப வைத்துவிடும் திறமையிலும் மயங்கி வரும் கூட்டத்துக்கு அளவே கிடையாது. கேட்டுக் கேட்டு அலுத்துப் போன விஷயமாயிருந்தாலும்கூட, அவர் மேடை ஏறிவிட்டால், அதே விஷயத்தைக் கேட்கும் போது, கேட்பவர்களிடம் எத்தனையோ விதப் புதுப் புது உணர்வுகளை உண்டாக்கி விடுவார். வேதமூர்த்தியின் ஒவ்வொரு சொல்லும் கேட்கக் கேட்க இனிமையாக இருக்கும். பேச்சு முடிந்து மக்கள் திரும்பும்போது, தலை கிறுகிறுப்பது போலிருக்கும். ஆனால் தனித்திருந்து அவர் பேசியதை நினைவு படுத்திப் பார்த்தால் கோவையாக, மனத்தில் இடம் பெற்ற விஷயங்களாக எதுவும் அகப்படாது.

இதுதான் வேதமூர்த்தியின் தனிப்பட்ட திறமை! கேட்கும்போது வெறியை ஊட்டி, தனிமையில் சிந்திக்கும்போது சிந்தனைக்குள் சிக்காமல் தப்பிக்கும் திறமையில்தான் வேதமூர்த்தியின் பேச்சின் பெருமையே அடங்கியிருக்கிறது.

அவருடைய தத்துவத்தில், பேச்சில், கம்பீரமான உருவத்தில், குறுந்தாடியில் தலைமையில் மயங்கிக் கிடக்கும் இளைஞர்களுக்கும் பாட்டாளிகளுக்கும் கணக்கே இல்லை.

அந்த மாபெரும் சொற்பொழிவாளரின் பேச்சைக் கேட்கத்தான் அத்தனை கூட்டம், மைதானம் முழுதும் நிரம்பியிருந்தது.

மேடையில் முதலில் யாரெல்லாமோ பிரசங்கம் செய்தார்கள். கூட்டம், அதையெல்லாம் கவனிக்கவில்லை. வந்திருந்த கூட்டம் வேதமூர்த்தியின் பேச்சுக்காக அல்லவா காத்திருந்தது! பொறுமை இழந்த சிலர் சீட்டியடிக்க ஆரம்பித்தார்கள். எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்தபடி சாரதாவும், முரளியும் வெளிச்சம் அதிகம் இல்லாத இடத்தில் அமர்ந்திருந்தனர்.

தோளில் காமிராவைத் தொங்க விட்டபடி, சாமிநாதன் அவர்களைக் கடந்து சென்றான். சில அடிகள் தள்ளிச் சென்றவன், ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தான். அமர்ந்திருப்பது முரளிதானா என்பதை இருட்டில் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

''சாமிநாதன்! இப்போதுதான் வந்தாயா?'' என்று கேட்டான் முரளி.

''நீங்கள்தானா? சந்தேகமாயிருந்தது. நான் அப்போதே வந்து விட்டேன் சார்!'' என்று கூறிக்கொண்டே முரளியின் பக்கத்தில் வந்தான் சாமிநாதன்.


ஆடவர்களுக்கு
அரவிந்த் அளிக்கும்
அருமையான வேட்டிகள்!
நீங்கள் நாடுவது மதிப்பும் தரமும்
ஆனால், அரவிந்த் வேட்டிகளையே
தேர்ந்தெடுப்பீர்!
மென்மையான மல்லிலிருந்து
தயாரிக்கப்பட்ட இந்த வேட்டிகள்
சகாய விலையில் கிடைக்கின்றன.
நீண்டகாலம் உழைக்கின்றன.
இப் பிரபல வேட்டிகளின்
பெயர்கள்: ப்ளாடினம்
மற்றும்
ராஜா ஸ்பெஷல்.
அரவிந்த்
மில்ஸ் லிட்.,
ரெயில்வேபுரா போஸ்ட்,
கரோதா ரோடு,
அகமதாபாத்-2.
Arvind Mills Ltd.
LALBHAI GROUP
interpub/A2/TM

கீழைக் கதைகள்



'குடம் என்ற உடற்கோட்டை, அதற்குள் இருப்பதாகத் தோன்றும் ஆன்மா. ஆன்மா தன் ஆதிசத்துடன் கலக்கும்போது சம்சார சாகரம் இற்று விடுகின்றது.'

3. நிலா

அழகின் வாயிலில் மிதக்கும் முழு நிலா. போதி மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார் ஞானி. எதிரில் வந்து நின்றான் ஜடாமுடிதாரி.

விசாரணை செய்யும் தொனியில், 'உடம்பு என்ற இப் பாண்டம் அழிந்த பிறகு என்ன சம்பவிக்கின்றது?' என்றார் ஞானி.

'அதுவே உன் மனத்தினை உலைதல் செய்யும் வினா. விடை நாடிப் பயணம். புறப்படு!'

'நீங்கள்தான் கடவுளா?'

'அப்படி நான் சொல்லவில்லை. அஃது உன் நம்பிக்கையைப் பொறுத்தது....' ஜடாமுடிதாரி நடக்கத் தொடங்கினான்.

'நான் கடவுள் நம்பிக்கையற்றவன்' என்றார் ஞானி.

'அந்த நம்பிக்கையின்மை கூட ஒருவகை நம்பிக்கை தானே?....வா....'

இருவரும் ஓரிடத்தை அடைந்தனர். அவ்விடத்தில் பத்துப் பெரிய நிறைகுடங்கள் வரிசையாக இருந்தன. முழு நிலாவின் பூரண பிம்பங்கள் நீந்தி மகிழும் சாயலில் அந்தக் குடங்களில் அழகு வழிந்தது. ஞானி சிந்தனையில் ஆழ்ந்தார்.

'பார்த்தாயா? குடங்களும் சந்திரன்களும்!'

'பார்த்தேன். பத்துக் குடங்களும் பத்துச் சந்திரன்களும்!' என்றார் ஞானி பரவசத்துடன்.

ஜடாமுடிதாரி குடம் ஒன்றைக் காலால் இடறினான். பானை உடைந்தது. நீர் நிலத்தில் சிந்தியது. சந்திர பிம்பம் மாயமாக மறைந்தது.

''இப்பொழுது?''

'ஒன்பது....'

'பத்தாவது சந்திர பிம்பம் எங்கே? குடத்துடன் உடைந்ததா? நீருடன் சிந்தியதா?' எனக் கேட்டு ஜடாமுடிதாரி சிரித்தான்.

ஞானிக்கு ஒன்றும் புரியவில்லை. மௌனமே அவராகி வானத்தைப் பார்த்தார்.

வானத்தில் ஏக சந்திரன் பவனி வந்து கொண்டிருந்தான்.

'அன்றேல், வானத்திலுள்ள சந்திரனிடத்தேயே அந்த பிம்பம் சென்றடைந்துவிட்டதென நினைக்கிறாயா?'

ஞானி பதிலளிக்கவில்லை. நிலத்தைக் குனிந்து பார்த்தார்.

'குடங்களிலே தெரிபவை ஒரு சத்தின் பல்வேறு அசத்துத் தோற்றங்கள் என்பதாவது புரிகின்றதா?'

ஞானியின் உள்ளத்தில் நிறைவு விளைந்தது.

'குடம் என்ற உடற்கோட்டை. அதற்குள் இருப்பதாகத் தோன்றும் ஆன்மா. ஆன்மா தன் ஆதி சத்துடன் கலக்கும்பொழுது சம்சார சாகரம் இற்று விடுகின்றது. அதுவே நித்தியம்....' எனக் கூறிய ஜடாமுடிதாரி சிரித்தான்.

ஞானியின் முகத்திலும் சிரிப்பு வெடித்துக் கிளம்பியது.

'ஏன் சிரிக்கின்றாய்?' - ஜடாமுடிதாரியின் கேள்வி.

'ஆன்மாவின் ஈடேற்றம் விளங்காதது. என் வழி சித்த பரிசுத்தம்' என்றார் ஞானி.

'உனது பார்வை பாதி தூரமே....'

ஞானி திரும்பிப் பார்க்காமலே போதி மரத்தை நோக்கி நடக்கத் தொடங்கினார்.

ஆனால், அன்று வைசாக பௌர்ணமியல்ல!

— எஸ். பொன்னுத்துரை

''மேடையில் நிறையப் பேர் பேச வேண்டியிருக்கிறதோ?'' — முரளி சலிப்புடன் கேட்டான்.

''அடுத்ததாக உங்கள் நண்பர் சிவராமன் பேசப் போகிறார். அதற்குப் பிறகு வேதமூர்த்திதான்.''

''ஓ...! சிவராமனும் பேசுகிறாரா?'' என்று குறுக்கிட்டுக் கேட்டாள் சாரதா. அவளை அந்த மங்கிய ஒளியிலும் ஊடுருவிப் பார்த்தான் சாமிநாதன்.

''சரி, நீ போ'' என்றான் முரளி. சாமிநாதன் மேடையை நோக்கி விரைந்தான்.

சற்று நேரத்தில் கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது. மேடையில் வேதமூர்த்தி எழுந்து, 'மைக்'குக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். அவனுடைய தோளில் ஒரு கையைப் போட்டு அணைத்தவாறு பேசத் தொடங்கினார் வேதமூர்த்தி.

''தோழர்களே...!''

வேதமூர்த்தியின் குரலைக் கேட்டதும் கூட்டத்திலிருந்த சலசலப்பு நின்று நிசப்தம் நிலவியது. எல்லோரும் ஆவலுடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

அழகாக வெட்டி விடப்பட்டிருந்த தாடியை ஒரு முறை தடவி விட்டுக் கொண்டு பேசினார் வேதமூர்த்தி.

''இதோ நிற்கும் தோழர் சிவராமனை உங்களுக்குத் தெரியும். நம்முடைய கட்சிக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும் மிகச் சுறுசுறுப்புடன் தேனீ மாதிரி சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இதுவரை கட்சிக் கூட்டத்திலும், மாநாட்டுக் கூட்

டத்திலுமே பேசி வந்த இந்தத் தோழர் இன்று முதன் முறையாகப் பொதுக் கூட்டத்தில் பேச வந்து நிற்கிறார். இரண்டு ஆண்டுகளுக்கு முன் எம். ஏ. வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், அவர் உள்ளத்தைக் கவர்ந்தது கல்லூரியும் அல்ல, வனிதையரின் காதலும் அல்ல. இவரது கட்டழகும், கவர்ச்சியும் இவரைக் காதல் வலையில் சிக்க வைத்துச் சோம்பேறித் தனத்தில் இவரைத் தள்ளி விடவில்லை. கன்னியரின் கண் வீச்சில் கருத்திழந்து, காதல் கவி பாடி, இன்பப் போதையிலே நிலைமறக்கத் துடிக்கும் இளமைக்கு அறிவை அடகு வைத்துவிடவில்லை. அப்போது இவரது நெஞ்செல்லாம் நிறைந்திருந்தது பொதுவுடைமைக் கோட்பாடுகள்தாம்! கட்சிக்காகவே, கட்சியின் லட்சியப் பாதையில் பயணத்தைத் தொடங்குவதற்காகவே கல்லூரியை விட்டு விட்டு நம்மிடையே வந்துவிட்டவர் இந்த இளைஞர். பட்டத்தையும், பதவியையும் அற்பமாக எண்ணிய சிலர். கடலில் எத்தனையோ சிப்பிகள் கிடக்கின்றன. ஆனால், முத்து அபூர்வமாகத்தான் கிடைக்கிறது. அத்தகைய ஒரு நல் முத்தை உங்களுக்கு அளித்திருக்கிறேன்....'' என்று கூறிவிட்டுச் சிவராமனை அணைத்தவாறே முன் பக்கமாக இழுத்து மைக்குக்கு முன்னால் நிறுத்திவிட்டுப் பின்னால் நகர்ந்து சென்றார் வேதமூர்த்தி.

கூட்டம் அமைதியில் ஆழ்ந்திருந்தது. சாரதா, வியப்புடன் மேடையை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிவராமன் பேச ஆரம்பித்தான்:—

''தோழர்களே! தலைவர் அவர்கள் முத்தை உங்கள் முன்னிலையில் போட்டுவிட்டார்கள். அதை எடுத்து என்ன செய்ய வேண்டும் என்னும் பிரச்னை உங்களைச் சேர்ந்தது. தூரவும் எறியலாம்; ஆபரணமாக அணியவும் செய்யலாம். உங்களுக்கு எது இஷ்டமோ அதைச் செய்யுங்கள். உங்கள் முடிவை நான் ஏற்கத் தயாராக இருக்கிறேன். ஒன்று நிச்சயம். நீங்கள் எறிந்தாலும் அணிந்தாலும், முத்து அதனுடைய தன்மையை இழந்துவிடாது. நான் கொண்டிருக்கும் லட்சியக் கொள்கைகளும் என்னை விட்டுப் போகாது...''

கூட்டத்தில் கைதட்டல் பலமாயிருந்தது. சாரதாவும் தன்னைமறந்து கைதட்டினாள். முரளி, எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

''இவ்வளவு அருமையாகப் பேச எங்கே கற்றுக் கொண்டார்?'' — மிக்க வியப்புடன் கேட்டாள் சாரதா.

''இந்தக் கட்சிக்காரர்களுக்குப் பேசக் கற்றுக் கொடுக்க வேண்டாம். தானாகவே வரும். பேச்சுத்தான் இந்தக் கட்சியின் முக்கிய ஆயுதம்'' என்றான் முரளி.

''கல்லூரிக் கூட்டங்களில் கூடப் பேசப் பயந்தவரா, இப்படி இவ்வளவு பெரிய கூட்டத்தில் சரளமாகப் பேசுகிறார்? நம்ப முடியவில்லையே!''

''கட்சியின் இரகசியக் கூட்டங்களில் பேசச் சொல்லிப் பயிற்சி அளித்திருப்பார்கள்..... அதோ, வேதமூர்த்தி மேடைக்கு வந்து விட்டார்'' என்று சுட்டிக் காட்டினான் முரளி.

எல்லாருடைய கவனமும் மேடையின் மீது பாய்ந்தது. மேடையின் மீது நின்றவாறு சுற்று முற்றும் ஒரு முறை பார்வையை வீசினார் வேதமூர்த்தி. பிறகு 'மைக்'கைத் தம் உயரத்துக்கு ஏற்றவாறு சற்று உயர்த்திக் கொண்டார்.

''தோழர்களே! இப்போது பேசிய சிவராமனின் பேச்சில் அனைவரும் லயித்திருந்ததைக் கவனித்தேன். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் உங்களுடைய சிந்தனையைக் கிளறி விட்டதையும் உணர்ந்தேன். அரை மணி நேரத்துக்கு உங்கள் அனைவரையும் தன் பேச்சின் சக்தியால் கட்டிப் போட்டுவிட்ட விந்தையைக் கண்டேன். இது சிவராமனின் கன்னிப் பேச்சு...''

கூட்டத்தில் பலத்த ஆரவாரம் எழுந்தது. வியப்பொலிகள் எங்கும் பரவின.

''ஆமாம்... ! தன்னுடைய முதல் முயற்சியிலேயே இவ்வளவு தூரம் வெற்றியை நிலைநாட்டிவிட்ட கவர்ச்சி மிக்க இந்த இளைஞர் இந்தக் கட்சியின் வெற்றிக் கொடியையும் விரைவில், இங்கு நாட்டி விடுவார் என்பதில் ஐயமே இல்லை....''

கைதட்டல் விண்ணை அதிர வைத்தது. சாரதாவும் பலமாகக் கைதட்டினாள். பிறகு முரளியைப் பார்த்தாள். அவன் புன்முறுவலுடன் அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். சலசலப்பு அடங்கியது.

வேதமூர்த்தியின் பேச்சு முதலில் மந்த கதியில் தென்றலைப் போல் நடைபோட்டது. போகப்போக வேகம் கூடியது. வேகம் கூடக் கூட, வெறி ஏறியது. சொற்களால் வலை கட்டி அத்தனைபேரையும் அதனுள் அடக்கிக் கொண்டிருந்தார். மக்கள் மயங்கி விழுந்து கிடந்தனர். ஒரு மணி நேரம் அந்தப் பிராந்தியத்தில் புயல் அடித்தது, பேய் மழை கொட்டியது. ஊடே ஊடே தென்றல் வீசியது, பனி கொட்டியது; குயிலின் குரலும் கேட்டது, சிங்கத்தின் கர்ஜனையும் ஒலித்தது.

(தொடரும்)

க்ளாக்ஸோ மில்க் ஃபுட் குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்க்கிறது





உங்கள் செல்வமும் ஒரு க்ளாக்ஸோ குழந்தை தானே?

குழந்தையின் ஆரம்ப வாழ்வை ஆரோக்கியமாகத் துவக்குகிறது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்; காரணம், குழந்தைக்கு ஊட்டமளிப்பதற்கான எல்லாச் சத்துக்களையும் கொண்டது க்ளாக்ஸோ மில்க் ஃபுட்... அவனது எலும்புகளை உறுதியாக்கி, தசைகளையும் இரத்தத்தையும் வளர்க்கிறது அது. இந்தியாவில் முதன் முதலாகக் குழந்தைகளுக்கான பாலுணவைத் தயாரித்தவர்கள் அளிப்பது—க்ளாக்ஸோ மில்க் ஃபுட்

Creative Unit-160 Tam

காணக் கிடைக்காத தங்கம்

அத்தியாயம் பத்தொன்பது

திடுக்குற்று விட்டான் அருணகிரி. இவ்வளவு நேரம் 'தம்பி, தம்பி' என்றும், 'வாங்க, போங்க' என்றும் மரியாதையாகப் பேசிக் கொண்டிருந்தவள் இப்போது 'ஐயா' போட்டு ஒருமையில் பேசுகிறாளே என்று எண்ணி இன்னும் அதிகப் பீதியடையலானான்.

நீலாம்பாள் அவனைக் கண்களைச் சுழற்றி ஒரு பார்வை பார்த்தாள். அந்தப் பார்வை அவனை மேலும் பயமுறுத்தியது.

செம்பு நீரை எடுத்துக் கொண்டு சாப்பிட்ட கையைக் கழுவுவதற்காகத் தெரு வாசலுக்குப் போனான். அங்கே கதவு சாத்தித் தாழிடப்பட்டு விட்டிருந்தது.

''சும்மா அங்கேயே கை கழுவிக்கிட்டு வாய்யா! எனக்குத் தூக்கம் வருது!'' என்று இரகசியக் குரலில் சற்றே குழறலாகக் கூறினாள் நீலாம்பாள்.

அரக்கப் பரக்கக் கையைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்த அருணகிரி, ''அப்ப நான் புறப்படட்டுமாம்மா?'' என்று அசட்டுச் சிரிப்புடன் கேட்டான்.

''என்னது! போக[illegible] போறயா?... மணி என்ன தெரியுமா? மூணு! இதுக்கு மேலே நீ எங்கே போய் என்ன பண்ணுவே? சும்மா இன்னைக்கு ராப்பொழுது இங்கேயே படுத்துக் கெடந்துட்டுப் போய்யா!''

இந்த ஒரே விநாடியில் அவளது நோக்கம் முழுவதையும் புரிந்து கொண்ட அருணகிரியின் உடல் நிலை கொள்ளாமல் படபடத்தது. பொறி



யில் சிக்கிக்கொண்ட எலிபோல் திக்கித் திணறித் திருதிருவென்று விழித்தான்.

நீலாம்பாள் அவனை ஏறிட்டுப் பார்த்து ஒரு மயக்குப் புன்னகை பூத்துவிட்டுக் கொஞ்சங்கூட அச்சமோ நாணமோ இன்றி அவன் கையைப் பிடித்து இழுத்துத் தரையில் உட்கார வைத்து விட்டுச் சுவரில் மாட்டித் தொங்கிய விளக்கை அணைக்கப் போனாள்.

அருணகிரிக்கு எங்கிருந்துதான் அத்தனை ஆவேசத் துணிச்சல் வந்ததோ, தெரியவில்லை. அவன் சடாரெனத் துள்ளி எழுந்து பின் வாசல் வழியே வெளியில் ஓடிவிடப் பாய்ந்தான். அப்படிப் பாய்ந்து சென்றவன், யாரோ மெல்ல விம்மிப் பொருமியழும் ஒலி கேட்டுத் திடுக்குற்று நின்று பரபரப்புடன் பார்த்தான்.

அங்கே, அந்தக் குறுகலான வராந்தா மூலையில் ஒடுங்கி உட்கார்ந்து குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள் ஓர் இளம் பெண்.

யார் அந்தப் பெண்? சந்தேகமில்லை; கனகாவேதான்! அப்படியானால் கனகா, நீலாம்பாளின் மகளா?

வானமே இடிந்து தன் தலையில் வீழ்ந்தாற் போல் பலத்த அதிர்ச்சிக்குள்ளாகி நடுநடுங்கிவிட்ட அருணகிரி, மறுகணம் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே ஓடி, அவ்விட்டைச் சுற்றிக் கொண்டு தெருவில் இறங்கி ஓட்டமும் நடையுமாக விரையலானான்.

மறுநாள் காலை எட்டு மணி இருக்கும். மில்லர் ஏரிச் சாலைப் பாலத்தின் அடியில் கிடந்த ஒரு பெரிய பாறையின் மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த அருணகிரி, வெயிலின் சுரீலென்ற உறைப்பினால் திடுக்குற்றுக் கண் விழித்து எழுந்தான்.


நேற்றிரவு அந்த நீலாம்பாளின் வீட்டிலிருந்து வெளியே ஓடி வந்த அவன் அந்த நேரத்தில் தன் வீட்டுக்குச் செல்ல அஞ்சியவனாய்க் கால் போன போக்கில் எங்கெங்கோ சுற்றியலைந்து, மேலும் சுற்றத் தெம்பு இல்லாமல், சோர்ந்து களைத்து உணர்விழந்த நிலையிலே இங்கு வந்து படுத்து இவ்வளவு நேரமும் சவம் போல் தூங்கிக்கொண்டிருந்துவிட்டு இப்போது எழுந்தான். சுற்றுமுற்றும் பார்த்ததுமே ஒருவிதத் திகில் அவனைப் பற்றிக் கொண்டது.

பரபரப்புடன் தன் வீட்டை நோக்கி நடந்தான். பாதித் தூரம் சென்றபின், வீட்டுக்குப் போக வேண்டாமே என்று அவனுக்குத் தோன்றியது. தன்னையே ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டான். சட்டை, கால்சராய் எல்லாம் மண்ணும் புழுதியுமாக அழுக்கேறிக் கிடந்தன. இந்நிலையில் வீட்டுக்குப் போனால் முத்தம்மா என்ன நினைப்பாள்? அவள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிச் சமாளிக்க முடியுமா ? இது ஒருபுறம் இருந்தாலும், அந்தப் பெண் நிர்மலா இவனை இந்தத் தலைவிரி கோலத்தில் பார்த்து விட்டால் ?—

போன வழியே திரும்பி நடந்தான் அருணகிரி. பார்சி கோயிலுக்குப் பக்கத்தில் முக்கோண வடிவிலே இருந்த ஒரு சிறு பூங்காவிலே புகுந்து குழாயில் முகம், கை, கால்களைக் கழுவிக் கொண்டு வெளியே வந்து ஓர் ஆசாமியிடம் மணி கேட்டான். எட்டரை என்று தெரிந்தது.

தினமும் சரியாக எட்டுமணிக்கெல்லாம் அவன் சைக்கிள் ரிப்பேர்க் கடையில்




LIFEBUOY
for health
LIFEBUOY SOAP
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
லைப்பாய் ஸ்நானம்-
பொழுதெல்லாம் தூய்மை-
புத்துணர்வோடு புதுமைப்
பொலிவு... பூரிக்கும் ஆரோக்கிய
நல்வாழ்வு- அளிப்பது லைப்பாய்.
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்

இருந்தாக வேண்டும். ஓர் ஐந்து, பத்து நிமிடங்கள் தாமதமாகப் போனாலும் ஏழுமலே கண்டபடி திட்ட ஆரம்பித்து விடுவான். இன்றோ மணி எட்டரை யாகி விட்டது. இந்த அரைமணி நேரத் தாமதத்தை அவன் பொறுப் பானா ?

பயத்தால் மனம் 'திக், திக்' என்று அடிக்க, சைக்கிள் கடையை நோக்கி விரைந்தான் அருணகிரி.

''இதோ, வராரே, ராஜாவூட்டுக் கன்றுக்குட்டி!.... வாடா, வா !'' என்று எகத்தாளமாக வரவேற்றான் ஏழுமலே.

''கொஞ்சம் நேரமாயிடுச்சுப்பா ! கோபிச்சுக்காதே!'' என்று பணிவுச் சிரிப்புடன் சொல்லிக் கொண்டே சட்டையைக்கூடக் கழற்ருமல் அவசரம் அவசரமாக வேலேயில் இறங்கிவிட் டான் அருணகிரி.

மங்கிடாப் நிழலில் ஒரு மடக்கு நாற்காலியைப் போட்டு உட்கார்ந் திருந்த ஏழுமலே, அருணகிரியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

தான் எதிர்பார்த்த அளவுக்குத் தன் முதலாளி தன்னைத் திட்டாமல் விட்டு விட்டது அருணகிரிக்கு ஆச்சரியமா யிருந்தது. எனினும், இதோடு விஷயம் முடிந்து போகும் என்று அவன் நிம்மதி அடைந்து விடவில்லே. எந்த நிமிடமும் ஏழுமலேயின் வசவுத் தாக்குதல் ஆரம்பமாகும் என்று எதிர்பார்த்தபடி சுறுசுறுப்பாக வேலேகளேச் செய்து கொண்டிருந்தான்.

''டேய், சோங்கு! இங்கே வாடா!''

தலே குனிந்து உட்கார்ந்து ஏதோ காரியத்தில் ஈடுபட்டிருந்த அருணகிரி நிமிர்ந்து, ''என்னுப்பா ?'' என்று கேட்டான்.

''இங்கே வாடான்னு !'' என்று அதட்டினன் ஏழுமலே.

கையிலிருந்த ஸ்பானரைக் கீழே போட்டு விட்டு எழுந்து நின்றான் அருணகிரி.

''பார்த்தா பூனேபோல இருக்கிறே. செய்யற காரியமெல்லாம் படா கில்லாடித்தனமா இருக்குதே!'' என்று வியப்புக் கலந்த கேலிக் குரலில் கூறி ஒரு கோணல் சிரிப்புச் சிரித்தான் ஏழுமலே. ''ஆமா; யாரோ ஒரு பொண்ணே ராத்திரி தள்ளிக்கினு போயிட்ட யாமே, நிசந்தானு?'' என்று கண் சிமிட்டிக் கேட்டான்.

அருணகிரியால் முதலில் இந்தக் கேள்வியைப் புரிந்து கொள்ளவே முடிய வில்லே. பச்சைக் குழந்தை போல் பேந்தப் பேந்த விழித்த அவன், ''என் னுப்பா, நீ என்ன சொல்றே ?'' என்று குழறினன்.

''அய்ங்! படா ஷோக்கா ஆக்ட் பண்றயே நைனு !'' என்று கிண்ட லாகக் கழுத்தை நொடித்துச் சிரித்தான் ஏழுமலே. ''ஏண்டா, டேய்! உன்னே மாதிரி பொறுக்கிப் பசங்க எத்தினிபேர் என்கிட்ட வந்து தாக்குப் பிடிக்க முடி யாம ஓடிப் போயிருக்கிறானுங்க தெரி யுமா? நீ என்னடான்னு என்னேயே டபாய்க்கப் பார்க்கறே... ம்?''

அருணகிரிக்குக் கோபம் வந்தது. ஆனல் அதை வெளிக் காட்டாமல் அடக்கிக் கொண்டு, ''விஷயத்தைச் சொல்லுப்பா! என்ன சமாசாரம் ?'' என்று அமைதியாகக் கேட்டான்.

''அதான் சொல்லிட்டேண்டா ! அதுக்கு நீ பதில் சொல்லு?''

''என்ன கேட்டே ?''

''மறுபடியும் சொல்லவா?... யாரோ ஆயா வேலே செய்யற ஒருத்தியைச் சிநேகம் பிடிச்சு அவள் வீட்டுக்குப் போய் வந்துக்கிட்டு இருந்தியாம்; அவ ளும் உன்னே நம்பி ஏமாந்து உனக்குச் சோறு போட்டு, செலவுக்குப் பணம் காசும் கொடுத்துக்கிட்டு இருந்தா ளாம். நேத்து ராத்திரி குடிச்சுட்டுப் போய் அவள் வீட்டிலே கலாட்டா பண்ணியாம். அப்புறம் அவளோட வயசுக்கு வந்த ஒரு பெண்ணே ஏமாத்திக் கூட்டிக்கிட்டுப் போய் எங்கேயோ மறைச்சு வைச்சிருக்கிறயாம்....''

ஏழுமலே சொல்லி முடிப்பதற்குள் அருணகிரி குறுக்கிட்டு, ''இல்லேப்பா! பொய்! அவ்வளவும் பொய்!'' என்று பீதிப் பதற்றத்துடன் குழறினன்.

''சும்மா கமால் காட்டாதே ராஜா! எல்லாம் எனக்குத் தெரியும்'' என்று கூறிச் சிரித்த ஏழுமலே, ''என்னேயாடா பொய்க்காரனுக்கிறே? கொஞ்சம் முன் னுடி அந்தப் பொம்மனட்டியே இங்கே வந்து எல்லாத்தையும் என்கிட்ட சொல்லி அழுதாடா ! நீ மட்டும் அப்ப இங்கே இருந்திருந்தால் அவள் உன் குடலேப் பிடுங்கி மாலேயாப் போட்டுக் கிட்டு இருப்பாள்; அத்தினி ஆவேசமா ஓடியாந்தாள். நல்ல வேளே, நீ தலே காட்டாம தப்பிச்சுக்கிட்டே! ஏண்டா, டேய், பிடிச்சதுதான் பிடிச்சே; உனக்கு சைஸா, சின்னதா பார்த்துப் பிடிச் சிருக்கக் கூடாது? போயும் போயும் அம்மாம் பெரிசாவா பிடிப்பே? அது வும் அந்த ஒரு வைப்போடு இருந் திருக்கக் கூடாதா? பகவோட கன்றை யும் புடிக்க ஆசைப்பட்டுட்டியே! இந்த வயசிலே அவ்வளவு திமிராடா உனக்கு? இரு, இரு! அவள் உன்னேச் சும்மா விடமாட்டாள் போலிருக்குது. இப்ப

நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இருக்கிறான். அவனுடைய பொண்ணைக் காணோமாம். நீதான் அவளை எங்கேயோ தூக்கிக்கிட்டுப் போய் வைச்சிருக்கிறயாம். உன்னைப் பிடிச்சு விசாரிக்கச் சொல்லிப் புகார் கொடுக்கப் போறானாம். இன்னும் கொஞ்ச நேரத்திலே இங்கே போலீஸ் வந்தாலும் வரும்....''

ஏழுமலை சொல்லிக் கொண்டிருக்கும் போதே அங்கு ஒரு சைக்கிள் வந்து நின்றது. பள்ளிக்குப் புறப்பட்ட கோலத்தில் நிர்மலாதான் அந்தச் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்திருந்தாள்.

''பின் சக்கரத்திலே காற்று இல்லை. சீக்கிரம் அடிச்சுக் கொடுக்கணும்; நேரமாச்சு'' — அருணகிரியைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டே இவ்வாறு சொன்னாள் நிர்மலா.

''போ, ராஜா! மத்ததையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்; முதல்லே அந்தச் சைக்கிளுக்குக் காத்தாம் அடிச்சுக் கொடுத்துட்டு வா!'' என்றான் ஏழுமலை நமட்டுச் சிரிப்புடன்.

அளவு கடந்த பயத்தால் மூச்சு விடவும் முடியாமல் திக்கித் திணறிய படி நின்று கொண்டிருந்த அருணகிரிக்கு இப்போது அங்கே நிர்மலா வந்திருப்பதைப் பார்த்ததும் மரண வியர்வையே வழிந்து கொட்டலாயிற்று.

'உண்மையில் இவள் தன் சைக்கிளுக்குக் காற்று அடித்துக் கொள்ளவா இங்கு வந்திருப்பாள்? நிச்சயம் அப்படி இருக்காது. நேற்றிரவு என்னிடம் ஏதோ கடிதம் கொடுப்பதற்காக அந்தக் கார் ஷெட்டுக்கு வந்திருப்பாள். பிறகு அவுட் — ஹவுஸ் வராந்தாவிலும் போய்ப் பார்த்திருப்பாள். நான் இல்லாதுபோகவே இன்று பொழுது விடிந்ததும் என் அக்காவிடம் விசாரித்திருப்பாள். நேற்றிரவு முழுக்க நான் வரவில்லை என்று அவள் சொல்லியிருப்பாள். அதனால் தான் என்னை இங்கு பார்த்து விட்டுப் போக, சைக்கிளுக்குக் காற்று அடிக்கும் சாக்கில் இவள் வந்திருக்கிறாள்.' —

தலை நிமிரவே சக்தியற்றவனாய்த் தள்ளாடித் தள்ளாடி நடந்து போய்க் காற்றுத் துருத்தியை எடுத்து வந்து அவளின் சைக்கிள் சக்கரத்தில் இணைத்து விட்டுக் காற்று அடிக்க ஆரம்பித்தான்.

அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனோ அவளைப் பார்க்கவே இல்லை. உடம்பில் பலமே இல்லாத நோயாளி போல் தொய்ந்து துவண்டு மிக மிக நிதானமாய்க் காற்றடித்தான். அவனுடைய கவனம் சக்கரத்தின் டயரிலோ, காற்றுத் துருத்தியிலோ செல்லவில்லை; எங்கோ கனவுலகில் சஞ்சரிப்பவன் மாதிரி துருத்தியின் கைப் பிடியை இஷ்டத்துக்கும் இழுத்து இழுத்து அடித்துக் கொண்டிருந்தான்.

கிர்ரெனச் சுழன்று வந்த ஒரு ஸ்பானர் அவனது வலது கால் முட்டியைப் படீரென்று தாக்கவே, 'ஹா' என்ற அலறலுடன் துடித்துப் பதறி நிமிர்ந்தான்.

''சோமாறி கய்தே! டயர் வெடிக்கிற அளவுக்குக் காத்து ஏறிப் போச்சு; இன்னும் ஏன்டா கண்ணை மூடிக்கிட்டு அடிக்கிறே, கஸ்மாலம்!'' என்று சீறினான் ஏழுமலை.

அவனுடைய அந்த முரட்டுத்தனமான செயலையும் கூச்சலையும் கேட்டு நிர்மலா பயந்து வெலவெலத்துப் போனாள். அருணகிரியைப் பரபரப்புடன் பார்த்த அவள், தன் கையிலிருந்து பத்துக் காசைத் தரையில் எறிந்து விட்டுச் சரேலெனச் சைக்கிளைத் தள்ளி ஏறிக் கொண்டு விரைந்து சென்று விட்டாள்.

காற்றுத் துருத்திக் குழாயை வலது கையில் பிடித்தபடி, அடிபட்ட முட்டியை இடது கையால் தடவி விட்டுக் கொண்டே ஏழுமலையைக் கொஞ்ச நேரம் இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான் அருணகிரி. மறுகணம், கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடி, ''அயோக்கிய நாயே! என்னை அடிக்கிறதுக்கு நீ யாரடா?'' என்று ஆத்திரத்தால் வெடித்த அழுகைச் செருமலுடன் தன் கையிலிருந்த காற்றுத் துருத்திக் குழலைச் சுழற்றி ஏழுமலையின் பிடரியில் ஓங்கி ஒரு போடு போட்டான்! அதோடு விடாமல் பம்ப்பை எறிந்து விட்டுத் தன் முஷ்டியை மடக்கி அவன் முகத்தில் நாலு குத்துகளும் விட்டான்.

இந்த எதிர்பாராத தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் நாற்காலியிலிருந்து அப்படியே தரையில் விழுந்து விட்டான் ஏழுமலை. மறுபடியும் அருணகிரி தன்னை அடித்து நொறுக்கிவிடுவானோ என்று பயந்து போன அவன், விழுந்த அதே வேகத்தில் தட்டுத் தடுமாறி எழுந்தான். அதற்குள் அருணகிரி அங்கிருந்து பிடித்தான் ஓட்டம்!

கண் மண் தெரியாமல் ஓடிய அவன் நேரே கன்ட்டோன்மென்ட் ஸ்டேஷனில் வந்து நின்றான். அதே சமயம், பெங்களூர் சிட்டியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்ட ரயில் வண்டி அந்த ஸ்டேஷனில் வந்து நின்றது.

அருணகிரி தன் கால்சராய் ஜேபியில் கைவிட்டுத் துழாவினான். நேற்றிரவு



நீலாம்பாள் கொடுத்த இருபது ரூபாயில் சினிமா டிக்கெட் வாங்கினது போக மிச்சம் பதினைந்து ரூபாயும் சில்லறையும் இருந்தன. அந்தப் பணத்தில் சென்னை — சென்ட்ரலுக்கு ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டு ஓடிப் போய் ரயில் பெட்டியொன்றில் ஏறி உட்கார்ந்தான்.

வண்டி கிளம்பியது.

*   *   *

சொர்ணத்தம்மாளுக்கு மனம் குளிர்ந்தது. ஒன்றரை ஆண்டுக்கு மேல் தன்னை விட்டுப் பிரிந்திருந்த தன் அருமை மகன் அருணகிரி அன்று திடீரென்று வீட்டில் வந்து நுழைந்ததைக் கண்டு மகிழ்ச்சியால் அப்படியே வாய் அடைத்துப் போனாள். கொஞ்ச நேரம் அவள் ஒன்றுமே பேசவில்லை. அப்புறம், ''வாப்பா!.... அக்கா, அத்தான், பிள்ளைகள் எல்லாரும் சௌக்கியமா?'' என்று மட்டும் கேட்டாள்.

''இருக்கிறாங்கம்மா!'' என்றான் அருணகிரி. அதற்கு மேல் அவனும் ஒன்றும் பேசவில்லை.

தன் பிள்ளை வீடு வந்து சேர்ந்தது பற்றிச் சொர்ணத்தம்மாளுக்குக் கொள்ளை சந்தோஷம்தான். அதன் பயனாய் அவளது குடிசையின் மண் சுவரில் மாட்டப்பட்டிருந்த முருகன் படத்துக்கும் அன்று ஒரு முழம் பூ கிடைத்தது. ஆனால் பிள்ளையாண்டான் கட்டின துணியோடு கையை வீசிக் கொண்டு வந்து நின்றதுதான் அவளுக்கு வியப்பும் குழப்பமுமாகி விட்டன.

'இங்கிருந்து கொண்டு போன தன் துணிமணிப் பெட்டியைக் கூட இவன் எடுத்து வரவில்லையே! முத்தம்மாவிடமோ, அவளின் கணவனிடமோ ஏதாவது தகராறு பண்ணிக் கொண்டு ஓடி வந்து விட்டிருப்பானோ?'

இம்மாதிரி இன்னும் பல கேள்விகள் அவளுடைய மனத்தை உருட்டிப் புரட்டிக் கொண்டிருந்தாலும் அவனிடம் எதுவுமே கேட்கவில்லை. கேட்டால் கோபித்துக் கொண்டு முன்போல் எங்காவது ஓடிவிடுவானோ என்ற பயம் அவளுக்கு. ஆனால் அவன் வந்த மறுநாளே தன் மகள் முத்தம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதி விவரம் கேட்டாள். அதற்கு அவளிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. தன் தம்பி தன்னிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப் போனது பற்றிஅவள் மிகவும் கோபமாய் இருக்கிறாள் போலும்.

அருணகிரி வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கும் சேதியை அறிந்து அவனுடைய மாமா கண்ணுச்சாமியும், அத்தை ரஞ்சிதமும் அவனைப் பார்க்க வந்தார்கள். ஏதேதோ கற்பனைகள் செய்து கொண்டு வந்த அவர்கள் அவன் இருந்த கோலத்தைப் பார்த்து நிலைமையை உடனே ஊகித்துக் கொண்டார்கள். ஒருவரையொருவர் ஏமாற்றத்துடன் நோக்கி உதட்டைப் பிதுக்கிக் கொண்டாலும் உள்ளூறச் சந்தோஷமே அடைந்தார்கள். பிள்ளையாண்டானுக்குப் பெரிய மனித தோரணையில் கொஞ்சம் புத்திமதிகள் சொல்லிவிட்டு எழுந்து போனார்கள்.

சொர்ணத்தம்மாளுக்கு இது பெரிதும் அவமானத்தை அளித்தது. ஆனாலும் என்ன செய்வது? தன் உணர்ச்சிகளை எவ்வகையிலும், எவரிடமும் வெளிக் காட்ட முடியாமல் உள்ளுக்குள்ளேயே புழுங்கிக் குமைந்தாள் அவள்.

அருணகிரி சென்னைக்கு வந்தபின் இங்கே உள்ள எந்த சைக்கிள் ரிப்பேர் கடையிலும் வேலைக்குப் போகவில்லை. அவனுக்கு அந்த எண்ணமே இருப்பதாகவும் தெரியவில்லை. காலையில் சாப்பிட்டு விட்டு வெளியே கிளம்பிப் போய் மாலை இருட்டுகிற சமயம்தான் வீடு திரும்பி வருவான். வந்த பின்னும் தன் அம்மாவிடமோ, மற்றவர்களிடமோ எதுவும் பேச மாட்டான். ஏதாவது கேட்டால் மட்டும் இரண்டொரு வார்த்தைகளில் பதில் சொல்வான். இரவு இரண்டு மூன்று மணி வரையில்



படித்துக் கொண்டிருப்பான். மறுநாள் காலை வழக்கம் போல் வெளியே போய் விடுவான்.

பெற்றவளால் பிள்ளையின் இந்தப் போக்கைப் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவளின் ஜீவனம் ஒரே ஓர் எருமை மாட்டின் கறவையில்தான் நடந்து கொண்டிருந்தது. தபாலாபீஸ் சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்திருந்த பணம் முழுவதும் கரைந்து போய்ப் பல மாதங்களாகிவிட்டன. எனவே, இப்போது தாயும் மகனுமாக அந்த ஓர் எருமையின் பால் வருமானத்தில் மட்டும் உண்டு, உடுத்து, நாட்களைக் கடத்துவதென்பது சிரம சாத்தியமாகிவிட்டது.

வீடு வந்து சேர்ந்த பிள்ளையாண்டான் பொறுப்புணர்ந்து ஏதாவது வேலை பார்த்து நாலு காசு சம்பாதித்துக் கொடுப்பான் என்று ஆவலுடன் எதிர்நோக்கியதற்கு முற்றிலும் மாறாக அவன் வீட்டு விவரம் பற்றிக் கொஞ்சமும் கவலையின்றி — அதைக் கண்டும் காணாதவன் மாதிரி இருந்து கொண்டு— வீணே ஊரைச் சுற்றி நாட்களைக் கடத்தி வருவது சொர்ணத்தம்மாளுக்குப் பொறுக்க முடியாமல் போயிற்று. ''ஏம்ப்பா, அருணகிரி! இப்படியே எத்தனை நாட்கள்தான் சும்மா இருக்கப் போறே?'' என்று கேட்டுவிட்டாள்.

''அதுதான் எனக்கும் தெரியலேம்மா.... !'' என்றான் அருணகிரி சாதாரணமாக.

சொர்ணத்தம்மாளுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது ''என்னடா, தெரியலே? எங்காவது ஒரு வேலை பார்த்துச் செய்யக் கூடாதா?''

''கிடைச்சால்தானேசெய்யறதுக்கு?''

''நாலு இடம் சுத்தியலைஞ்சு கேட்டால்தானே கிடைக்கறதுக்கு?''

''அந்த நாலு இடம் எதுன்னு சொல்லேன் ?''

''ஏதாவது ஒரு சைக்கிள் ரிப்பேர்க் கடையிலே போய் வேலை கேட்கிறது!''

''எனக்கு அந்த வேலை பிடிக்கலே.''

''அதைத்தானே கத்துக்கிட்டு வந்திருக்கிறே ?''

''வேற விதி இல்லாமெ கத்துக்கிட்டேன் !''

''நல்ல விதி வருகிற வரையிலும் அதையே செய்யறது.''

''உனக்கு இஷ்டமிருந்தால் சோறு போடு; இல்லேன்னு போடாதே ! போட்டுட்டு இந்த மாதிரி பேசாதே!''

''என்னடா இது, ஞாயத்தைச் சொன்னு அதைக் காதில் வாங்காமெ ஏடாகூடமா திரும்பறே?''


''ஆமாம்மா! இன்னும் கொஞ்ச நாளைக்கு என்னை என்போக்கிலே இருக்கவிடு. எல்லாரையும் போல நீயும் எதனுச்சும் கெடுபிடி பண்ணினயோ, நான் மறுபடியும் எங்காவது ஓடிப் போயிடுவேன்.''

பயந்து அதிர்ந்து விட்டாள் சொர்ணத்தம்மாள். (தொடரும்)

பறக்கும் அணில்

பறக்கும் அணில், பறவைபோல் இறக்கையுடன் ஜம்மென்று பறக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்களோ ஏமாற வேண்டியதுதான்; பெயர்தான் பறக்கும் அணில் என்று. ஆனால் உண்மையில் இந்த அணில்கள் பறப்பதில்லை. இவற்றை ஆங்கிலத்தில் 'Gliders' என்று கூறுகிறார்கள். மெல்லிய ஜவ்வுத் தோல் உடலின் இரு பக்கங்களிலும் முன்னங்கால்களுக்கும், பின்னங் கால்களுக்கும் இடையே பரவியுள்ளது. இதையே 'இறக்கை' என்று சொல்லலாம்.

மரத்தின் மேலிருந்து கீழே இந்த அணில் வெகு வேகமாக வழுக்கிக் கொண்டு வந்துவிடும். அப்படிச் சறுக்கும்போது ஜவ்வுத் தோலை விரித்துத் தன் கால்களை அகற்றி வைத்துக் கொண்டிருக்கும். ஆகவே கீழே விழுந்து விடாமல் இருக்கிறது. கீழே இறங்குவதற்கு முன்னால் தன் தேகத்தைச் சமன் செய்து சரிபார்த்துக்கொண்ட பிறகே இறங்கும். இப்படிச் சரிபார்க்க இது தன் வாலை உபயோகிக்கிறது. வௌவாலைப் போன்று அல்லது பறவையைப் போன்று இதனால் பறக்க முடியாமல் போனாலும் கூட சுமார் எண்பது அடி தூரம் சறுக்கியே நகரும் திறமை கொண்டது. இதற்குத் தான் இதன் ஜவ்வு போன்ற பாகம் உதவுகிறது.



பகல் நேரத்தில் இந்தப் பறக்கும் அணில் ஓய்வாக இருக்கும். மரங்கொத்தி ஒன்றால் உண்டாக்கப்பட்ட துளையே இதன் இருப்பிடமாகும். மரப் பட்டைகளினால் அழகிய கூடு கட்டி, அதில் மரப் பட்டைகளும் 'லைக்கன்' எனப்படும் தாவர வகைகளையும் கொண்டு அழகிய படுக்கை ஒன்று உருவாக்குகிறது. இப்போது இதற்கு வீடு தயாராகி விட்டது! இனி பல வருடங்கள் வரை கவலையற்று இதில் வாழ்ந்திருக்கும்.

ஆபத்துச் சமயங்களில் குட்டிகளையும் எடுத்துக் கொண்டு அடுத்தடுத்த மரங்களுக்குத் தைரியமாகத் தாவி வெகு தூரம் சென்றுவிடும் திறமை உண்டு.

இவற்றைச் சுலபமாகப் பிடிக்க முடியாது. பிடிப்பதால் பயனும் இல்லை. ஆனால் மற்றப் பறவைகளுக்கோ மிருகங்களுக்கோ வைத்திருக்கும் கண்ணிகளில் விழுந்து வேட்டையாடுபவர்களின் பொறுமையைச் சோதிக்கும். பூச்சிகளை இவை பிடித்து உண்பதால், மனிதனுக்கு இவ்விதத்தில் உதவியாக இருக்கின்றன. — எஸ். சாரதாம்பாள்

ஓர் முதல் தரமான சந்தர்ப்பம்

உங்கள் சிறு தொழிலை தொடங்க எம்ஐஐசி நிதியுதவி

விவரங்களுக்கு உடனே அணுகவும்:

மதராஸ் இண்டஸ்டிரியல் இன்வெஸ்ட்மெண்ட்
கார்பொரேஷன் லிமிடெட்.
எல். எல். ஏ. பில்டிங்ஸ்,
150-A, மவுண்ட் ரோடு, மதராஸ்-2.

எம்ஐஐசி

இதயபூர்வமான
நிதியுதவி

Criterion-MIIC-2402



காவல் துறை கண்ட காந்தி

சுபஸ்ரீ



❋ காவல்துறைக்காரர் கண்களால் மகாத்மாவைப் பார்க்கும் கோணம்.

❋ சேவாக்கிராம மண்ணில் தேச பக்தி மட்டும் பயிராகவில்லை. காதலும் அரும்பிற்று.

ஹைதராபாத் எக்ஸிபிஷன் மைதானத்தில் கண் சிமிட்டிய விளக்குகளின் வண்ண ஒளியில் கவர்ச்சியான கடைகள் எல்லோரையும் வரவேற்றன. வெள்ளக் கூட்டத்தின் மொய்ப்பினிடையே அதிக நடமாட்டம் இல்லாதிருந்தது 'காந்திஜி தரிசன ஸ்டால்' ஒன்றுதான். பாபுஜி சம்பந்தமான புகைப்படங்களை ஏறே தாறேன் என்று மாட்டி ஒரு ஸ்டால் என்று பெயர் செய்திருந்த அந்த இடத்தில் அதிக ஆட்கள் வராததில் ஆச்சரியமில்லை. காந்தி நூற்றாண்டு கொண்டாடி அரசாங்கமும், மக்களும் களைத்து விட்டனர் போலும்! வாசலில் அமர்ந்திருந்த வாலண்டியர் ஒரு 'சூடான' தெலுங்கு மலிவுப்பதிப்பில் மூழ்கி யிருந்தான்.

முறுக்கிவிடப்பட்ட மீசையுடனும், கையில் பிரம்புடனும் இருந்த உயரமான மனிதர் மட்டும் எனது தனிமையைப் போக்க அந்த ஸ்டாலில் கூட உலவினார். படங்களைக் கண்டு கலங்கிய அவரது கண்களை நான் கவனித்தேன். அவர் புன்முறுவல் செய்தார்.

''நீங்கள் பழைமைத் தேசியவாதியாக இருக்க வேண்டும்'' என்றேன். (தேசியவாதியில் பழைமை என்ன, புதுமை என்ன? காங்கிரஸ் பிளவுபட்டாலும் பட்டது நமக்கு எதிலுமே இரட்டைத் தோற்றமா?)



"அந்தப் பெருமை எனக்கு இல்லை. நான் ஒரு ரிடையர்டு போலீஸ் இன்ஸ்பெக்டர். நான் வார்தா போலீஸ் ஸ்டேஷனில் பணி ஆற்றினேன். இதோ இந்தப்படம் பாருங்கள். பாபுஜியின் சேவாசிரமக் குடில் இதுதான். எத்தனை முறை அங்கு சென்றிருக்கிறேன்..." பீறிட்டு வரும் உணர்ச்சி வெள்ளத்தை அடக்கிக்கொள்ள அவரது விரல்கள் சிகரெட் பாக்கெட்டை எடுத்தன. அடுத்த நிமிஷம் மோஹனக் காந்தியின் சிரிப்பின் விளைவோ என்னவோ மீண்டும் பையில் போட்டுக் கொண்டு விட்டார்.

"அரசாங்கத்தின் பிரதிநிதியாக அண்ணலுடன் மோதிக் கொள்ளும் போராட்ட அனுபவங்கள் நிகழ்ந்திருக்குமே! ஒரு போலீஸ்காரர் — காந்திஜி தொடர்புகளை அறிய விரும்புகிறேன்; வாருங்கள் ஒரு பானம் பருகிக்கொண்டே நினைவுகூரலாம்..." என்று அடுத்த கடைக்கு அழைத்தேன்.

வயதை மீறிய கம்பீரமான நடை; புன்சிரிப்பை மிகைப்படுத்தும் மீசை. அழுத்தமான குரலில் அவர் ஆரம்பித்தார்:

"இன்று புனித யாத்திரைத் தலமாக இருக்கிறது சேவாக்கிராமம். அன்று முடிவற்ற மனித சமுத்திரம் அங்கு அலைபாய்ந்துகொண்டிருந்தது. தரிசிக்க விரும்பும் பக்தர்கள்; கருத்துக் கோரி வருபவர்கள்; வெளிநாட்டுப் பிரமுகர்கள்; உள்நாட்டு அரசியல்வாதிகள்; சமூகத் தொண்டர்கள்; பத்திரிகைப் பிரதிநிதிகள்...அன்று சாதாரணமாக நடமாடிக் கொண்டிருந்த எத்தனையோ தொண்டர்கள் இன்று தேசியத் தலைவர்களாகத் திகழ்வதைக் காண்கிறேன்..."

சிகரெட் புகைக்கத் தொடங்கி விட்டார்.

"'குவிட் இந்தியா' எழுச்சிக்கு முன்பாக நான் வார்தா ஸ்டேஷன் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தேன். கசப்பான கடமைகளைச் செய்து முடிக்க எத்தனையோ முறை காந்திஜியை அணுகியிருக்கிறேன். தொண்டரைக் கைது செய்ய, ஆசிரமவாசிகள் குடிலைச் சோதனை போட, அரசியல்வாதிகளின் சில தஸ்தாவேஜுகளை அபகரிக்க... இப்படிப் பல நிகழ்ச்சிகள். ஒவ்வொரு முறையும் மகாத்மா எனது இக்கட்டான நிலைமைக்குப் பச்சாத்தாபப்பட்டு ஒத்துழைப்பார். அவரால் போலீஸ்காரர் வேலை எளிதாகிவிடும். பார்க்கப் போனால் அவரே தம்மை 'ஒரு மாபெரும் போலீஸ்காரர்' என்று அழைப்பார். அவ்வளவு ஒழுங்குமுறை; கட்டுப்பாடு!

"நாக்பூரிலிருந்து எனக்கு டெலிபோன் வந்தது. 'வைஸ்ராயின் ரயிலைக் கவிழ்க்கச் சதி செய்யும் ஒரு புரட்சிக்காரன் ஆசிரமத்தில் புகல் அடைந்திருக்கிறான். தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பது எஸ். பி. யின் ஆணை. நான் ஆசிரமத்துக்கு விரைந்தேன்.

யார் யாரையோ விசாரித்தேன். பலனில்லை. இறுதியில் அண்ணலையே சரணடைவது என்று முடிவு செய்தேன். இத்தகைய ஒரு சந்தேகத்தைத் தேசப் பிதாவிடம் தெரிவிப்பதற்கே கூச்சமாக இருந்தது. ஆனால் சத்திய புருஷன் தயங்காமல் எனக்குப் பதில் சொன்னார்.

''சற்று முன்பு காந்திஜியைத் தரிசித்து விட்டு மனைவி குழந்தைகளுடன் ஜி. டி. எக்ஸ்பிரஸ் பிடிக்கப் புறப்பட்டுச் சென்றாரே—அவர்தான் அந்த மனிதர்! வார்தா ரயில் நிலையத்தாருடன் நான் தொடர்பு கொள்ள ஆசிரம டெலிபோனை உபயோகிக்கவும் அண்ணல் அனுமதி தந்தார்.

''அத்தகைய சத்தியத்தின் உத்தம ஸ்வரூபத்தை இனி தரிசிக்க முடியுமா?'' என்று சிரித்தபடி கூறினார். குளிர்பானத்தின் நுரை அடங்கிக் கிடந்தது. மீண்டும் தொடர்ந்தார்.

''மகாத்மாவின் மாலைப் பிரார்த்தனை நிகழ்ச்சிக்குப் பெரும்பாலும் நான் செல்வேன். அணிவது போலீஸ் உடையாக இருந்தாலும் அகத்தில் மனிதன்தானே!

''ஜப்பானிய பிக்ஷு ஒருவர் பிரார்த்தனையை ஆரம்பித்து வைப்பார். அதற்கு முன்னால் பிரார்த்தனை அழைப்புக்கு மணி அடிப்பவன் யார் தெரியுமா?

''ராம்பாத் என்ற போலீஸ்காரன்! ஸி. ஐ. டி. டியூட்டியில் அவனை ஆசிரமத்திலேயே அமர்த்தியிருந்தோம். ஆனால் சாந்தஸ்வரூபியின் ஆகர்ஷணை காந்தியில் அவன் மயங்கி விட்டான். ஆசிரமவாசிகள் தங்களிடையே ஒரு கான்ஸ்டபிள் இருந்து கொண்டு சர்க்காருக்கு ரகசியங்களைத் தெரிவிப்பது பற்றி ஆட்சேபித்தனர். சத்திய வடிவம் என்ன கூறிற்று என்கிறீர்கள். 'நம்முடைய ரகசியங்கள் அம்பலமானவையே. மேலும் ராம்பாத் நல்லவன்' என்று சாந்தப்படுத்தினார்.

''ராம்பாத் என்ன செய்வான் தெரியுமா? காந்திஜியின் ஆசிரமத்துக்கு வெளியே அமர்ந்து ராட்டையில் நூல் நூற்பான். வெளிநாட்டினர் அதைப் புகைப்படம் எடுத்து 'சேவை செய்யும் ஒற்றன்' என்று விநோதத் தலைப்புடன் வெளியிட்டார்கள்.

''1942ம் ஆண்டு; ஆகஸ்ட் 8ந் தேதி; காந்திஜி கைதானபோது ராம்பாத் குமுறினான். சர்க்கார் செயலைக் கண்டு சினந்தான்; சீறினான்; ராஜிநாமாக் கடிதம் எழுதி அனுப்பி விட்டான். அரசாங்கம் அவனைக் கைது செய்து ஒன்பது மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தது. பாரதம் சுதந்திரம் பெற்ற பிறகு மீண்டும் அவனை வேலையில் அமர்த்தியது!

''காந்திஜி எழுப்பிய சுதந்திரக்கனல் எப்படி வேலை செய்தது என்பதற்காகவே அவன் கதையைச் சொன்னேன். அன்று போலீஸ் உடையிலேயே ஒரு தேசபக்தன்; இன்று தேசபக்தப் போர்வையிலே சுயநல உருவங்கள்!''

சிகரெட்டின் சாம்பலை அவரது விரல்கள் தட்டி விட்டன!

எதிர் மேஜையில் ஓர் இளம் தம்பதியர் வந்து அமர்ந்தனர். அவர்களைப் பார்த்ததும், ''ஆசிரமத்தில் இத்தனை கட்டுப்பாடுகளுக்கிடையில் காதலும் அரும்பாமல் இல்லை. உங்களுக்கு சுரேஷ் கதையைச் சொல்லாமல் என்னால் பிரிய முடியாது.'' என்றார் அவர்.

சுரேஷ் ஒரு வங்காளி. இருபத்தைந்து வயது இருக்கலாம். நல்ல உயரம்; சிவந்த மேனி; அழகன்; அகன்ற நெற்றி; கண்களில் சுதந்திர வேட்கை ஒளி வீசிற்று. ஆனால் அவனது வாழ்க்கையிலே இருள் படிந்த சோகம் ததும்பிக் கிடந்தது.

சின்னஞ் சிறு வயதிலேயே அவனுக்கு விடுதலை நாட்டம் வந்து விட்டது. பலாத்காரத்தில்தான் வெள்ளையனை வெளியேற்ற முடியும் என்று நம்பித் துப்பாக்கிப் பிரயோகம், ரயில் வண்டிகளைத் தாக்குதல் போன்ற சாகஸச் செயல்களில் ஈடுபட்டான். பதினேழு வயது அரும்பியபோது தண்டிக்கப்பட்டு அந்தமானுக்கு அனுப்பப்பட்டான். அங்கு விஜயம் செய்த புனர் நிர்மாணக் கமிஷன் ஒன்று அவனது வயதைக் கருதி இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது.

திரும்பியதிலிருந்து உத்தியோகம் இல்லை; உள்ளத்தில் அமைதி இல்லை; அவை போதாது என்று வங்க சர்க்கார் அவனை மாகாணப் பிரஷ்டம் செய்தது. ஐக்கிய மாகாணம் சென்றான். அங்கும் அதே கதி. இறுதியாகச் சேவாக்கிராமத்தில் சரணடைந்தான். அவனது கொந்தளிக்கும் உள்ளம் சாந்தி அடையும் தருணத்தில் மீண்டும் சர்க்கார் ஆணை வந்தது.

அவனைச் சேவாக்கிராமத்திலிருந்தே—சென்டிரல் மாகாணத்திலிருந்தே — வெளியேற்றும்படியான சர்க்கார் உத்தரவை அவனுக்கு 'ஸர்வ்' செய்யும் பொறுப்பு எனக்கு விழுந்தது. ஒரு சகோதரனுக்கு அநீதி வழங்கும் சோகம் என் மனத்தை அப்பிக் கொண்டது.

சேவாக்கிராமக் குடிலில் வெள்ளை உடையில் காட்சியளித்த சுரேஷிடம் அரசாங்கக் கட்டளையை நீட்டினேன். படித்துப் பார்த்த அவன் கண்கள் சிவந்தன; உதடுகள் துடித்தன. காகித உத்தரவைத் தூக்கி எறிந்தான். நான் பொறுமை இழக்கவில்லை. பெற்றுக் கொண்டதற்குக் கையெழுத்திட வேண்டினேன். 'தூ' என்று மண்ணில் உமிழ்ந்தான். நான் நிதானம் தவறவில்லை. அண்ணலிடம் தெரிவித்தால் இதற்கு முடிவு காண்பது எளிது என்று என் உள் மனம் கூறிற்று.

அண்ணல் என்னதான் அலுவலாக இருந்த போதிலும் ட்யூட்டி ஆபீஸர்களுடன் ஒத்துழைத்தார் என்பது என் அனுபவம். அரசியல்வாதிகள் அவரது பேட்டிக்குத் தவம் கிடக்கலாம். ஆனால் போலீஸ்காரர்கள் 'டாண்' என்று நுழைந்துவிடலாம்.

விஷயத்தைக் கேட்ட காந்திஜி சுரேஷைக் கூப்பிட்டு அனுப்பினார். சில நிமிஷங்களுக்கு முன்பு புலிபோலப் பாய்ந்தவன் பூனைபோல் கையெழுத்திட்டான்; அமைதிக் கடலின் முன்னே!

ஆனால் காந்திஜி அத்தோடு விட்டுவிடவில்லை. அப்போது ஹோம் மெம்பராக இருந்த ஸர் ரெஜினால்டு மாக்ஸ்வெல்லுக்கு உடன் கடிதம் எழுதினார்.

'பரிதாபத்துக்குரிய ஒரு வாலிபனை இவ்வாறு மூலைக்கு மூலை விரட்டுவது முறையல்ல; சுரேஷ் இப்போது திருந்திய இளைஞன்; ஆசிரமத்தில் அமைதியான வாழ்க்கை நடத்துபவன்' என்று சான்றிதழ் கொடுத்தார்.

வெல்டிங் ஒரு மூன்றெழுத்து வார்த்தை

அதற்குச் சிறிது விளக்கம் தேவை


அந்த மூன்று எழுத்துக்கள் ஐஓஎல் என்பது தெளிவு. ஏனெனில் ஐஓஎல் (இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட்) வெல்டிங் தொழில் நுட்பத்தில் முன்னேற்றத்துக்கு எப்போதும் முன்னோடியாக இருந்து, இந்த நாட்டில் புதிய வெல்டிங் உத்திகளை புகுத்தியுள்ளது. அதே சமயத்தில் ஐஓஎல் நம் நாட்டிலேயே பலவகை வெல்டிங் சாதனங்களையும் அதற்குச் சம்பந்த முள்ள வேறு பொருள்களையும் செய்துள்ளதோடு வேறு எங்கும் உள்ள சிறந்த தொழில் நுட்பவாதிகளுக்குச் சமமான வெல்டிங் தொழில் நுட்பவாதிகள் பலரையும் பயிற்றுவித்துள்ளது.

இன்று நாட்டின் ஒவ்வொரு பெரிய தொழில் பிரதேசத்திலும் 60-க்கும் அதிகமான தொழிற் கூடங்கள், அலுவலகங்கள், டிப்போக்கள், கம்பிரஸிங் நிலையங்களை நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒரு விரிவான விநியோகிப்புப் பணியையும் அது செய்து வருகிறது. வெல்டிங் சம்பந்த மாக எழக்கூடிய எந்த ஒரு பிரச்னையையும் தீர்த்து வைக்க இந்தியா முழுதும் ஐஓஎல் தொழில் நுட்ப நிபுணர்களும், சர்வீஸ் இன்ஜினியர்களும் பணியாற்றுகின்றனர்.


வெல்டிங் துறையில் முதல்வர்கள் :

IOL

ஆறு கைகள் இருந்தாலும் போறாது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டீஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாரிக்கிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் கால்பங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமிகூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால் சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில் அதில் ஒரே சமயத்தில் மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்**கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதியுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.**

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

பெயர்கள் வேறானாலும் ப்ரீத், பிரஸ்டிஜ் இரண்டும் ஒன்றே. இந்தியாவில் பிரஸ்டிஜ், ஏற்றுமதிக்கு ப்ரீத்.

> புகழ்பெற்ற ப்ரீத் ஸ்டீம் இட், ஸ்கில்லெட், ஸாஸ்பான் - சமையல் விரைவாகவும் எளிதாகவும் முடிய இவைகள் உதவுகின்றன.

டிடி (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

அப்போது காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம். இருப்பினும் அவரது உறுதிமொழிகளைச் சர்க்கார் சத்தியவாக்காக ஏற்றுக் கொண்டு வெளியேற்றும் ஆர்டரை வாபஸ் வாங்கிக் கொண்டது.

பலாத்காரச் செயல்களில் வேரூன்றி இருந்த அந்த வாலிப உள்ளத்துக்கு அண்ணலின் அஹிம்ஸைக் கொள்கைகளையும் ஆசிரமத்தின் அமைதி வாழ்க்கையையும் ஏற்பது சிரமமாக இருந்தது. அவனது கவனத்தை வேறு வழியில் திருப்பினால் உள்ளம் அமைதியுறும் எனத் தெளிந்த அண்ணல் அவனை ஆசிரமப் புத்தகசாலையைக் கண்காணிக்க அருளினார்.

நூல்நிலையம், ஆசிரம முக்கியக் குடில்கள் வரிசையிலிருந்து ஒதுங்கி ஒரு தனியான இடத்தில் இருந்தது. சுரேஷுக்கு மற்றொரு பணியும் அளிக்கப்பட்டது. மீனு என்ற வங்கத்து வாலைக் குமரிக்கு அவன் லைப்ரரி விடுதியில் வயலின் பயிற்சி அளிக்க வேண்டியது. நாதோபாசனையில் நாசவேலைகளை மறந்துவிடுவான் என்று போலும்!

அமைதியான சூழ்நிலை; அழகும் இளமையும் பொருந்திய பெண்; மயக்கும் இசை. இதுகாறும் தேசபக்தி ததும்பிய இதயத்தில் முதல் முதல் காதல் அரும்பிற்று. இரும்புத் தந்தியில் இதமான 'வில்' ஸ்பரிசித்தபோது இனிய கீதம் பிறந்தது; சுரேஷின் இரும்பு மனத்திலும் காதல் சுடர் விட்டது.

ஒரு நாள் சுரேஷ் மகாத்மாவை அணுகி மீனுவிடம் தனக்குள்ள அன்பைத் தெரிவித்து மணக்கும் விருப்பத்தையும் வெளியிட்டான். இல்லறத்தில் பிரும்மச்சரியத்தை அனுஷ்டித்த அண்ணல் முறுவலித்தார்.

'மீனுவை வரவழைத்துக் கேட்கிறேன். அவள் இசைவு தெரிவித்தால் அவளது பெற்றோர்கள் அனுமதி கோரலாம்.'

கைராட்டினம் சுழன்று பஞ்சு நூலாகிக் கொண்டிருந்தது. பயந்து பயந்து மீனு பாபுஜி ஆசிரமத்துக்குள் நுழைந்தாள்.

அண்ணல் அமைதியாக விசாரித்தார்.

பளபளத்த கண்கள் நீரை உகுத்தன; மீனு ஓவென்று குமுறி அழுதாள். விம்மலிடையே அவள் தனக்கு அத்தகைய சிந்தனை இல்லையென்று வெளியிட்டாள்.

அவள் பயந்து சொன்னாளா அல்லது உண்மையிலேயே அவளது உள்ளத்தில் விருப்பம் இல்லையா என்பது எனக்கு இன்றும் புரியாத புதிராகவே இருக்கிறது. இப்பொழுது எனக்கு ஒரோரு சமயம் தோன்றுகிறது. பெண்ணின் உள்ளம் மென்மையானது; ஆசிரமத்தில் இருந்த அமிர்த கௌர் போன்ற தேச சேவிகள் மூலம் விசாரித்திருந்தால் உண்மை வெளிப்பட்டு இருக்குமோ என்னவோ என்று. காந்திஜி தம்மைப் போலவே எல்லாரும் சத்தியத்தைக் கூச்சமின்றித் தரிசனம் செய்ய வேண்டும் என விரும்பினார்.

திங்கட்கிழமை விடிந்தது. அன்று காந்திஜிக்கு மௌன தினம். சுரேஷ் வந்து வணங்கினான்.

ராட்டினம் ரீங்கரித்தது.

மீனுவின் மறுப்பைக் காந்திஜி எழுதி சுரேஷுக்குத் தெரிவித்தார்.

வாலிபம் சினந்தது; நிலை இழந்தது!

சுரேஷின் நரம்புகள் புடைத்தன; உத்வேகத்தோடு மளமளவென்று எழுதித் தள்ளினான்.

'நான் மீனுவை அடக்கமான அன்புப்பெண் என்று நம்பியிருந்தேன். இன்று அவள் கழிசடை என்று புரிந்து கொண்டேன். அவளைக் கொலை செய்வேன். போலீஸைக் கூப்பிடுங்கள்.'

சரேலென்று சுரேஷ் வெளியேறினான்.

ராட்டினம் அமைதியாக ரீங்கரித்தது.

மறுநாள் காந்திஜி சுரேஷை அழைத்து அமைதியுடன் பேசி அறிவுரைகள் கூறினார். பலாத்காரச் செயலில் இறங்குவதில்லை என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

மீனுவின் தகப்பனாருக்குக் குடும்பத்துடன் கல்கத்தா சென்றுவிடும்படி காந்திஜி கட்டளை பிறப்பித்தார். பிரிவினால் பையனின் உணர்ச்சிக் கொந்தளிப்புத் தணிந்து மனம் சாந்தியுறும் என பாபுஜி எண்ணினார். அவர்களை வார்தா ஸ்டேஷனில் நான் வழி அனுப்பினேன். மீனுவின் அகன்ற கண்கள் என்ன கதை பேசின என்பது எனக்குத் தெளிவாக இல்லை.



ஒரு நாள் மாலை. பாபுஜி எனக்குச் சொல்லி அனுப்பினார். விரைந்து சென்றேன்.

சுரேஷ் ஓடிவிட்டான்!

அவன் விட்டுச் சென்ற காகிதக் குறிப்பை என்னிடம் நகர்த்தினார் காந்திஜி.

'என் மனப் போராட்டம் தங்களுக்குத் தெரிந்திருக்கும். நான் ஆசிரமத்தைவிட்டு அப்பாலே போகிறேன். எங்கு போகிறேன் என்பது எனக்கே தெரியாது. என் கையில் பொட்டாஷியம் சயனைட் இருக்கிறது. அவசியம் நேர்ந்தால் அதனை உபயோகிப்பேன்.'

நான் அண்ணல் முகம் நோக்கினேன். சாந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது.

எஸ். பி.க்குத் தகவல் கொடுத்தேன். சுரேஷைத் தேட ஆட்கள் அனுப்பப்பட்டார்கள்.

எனது அந்தரங்கம் சுரேஷுக்காக அழுது கொண்டிருந்தது. தவறான லட்சியங்களில் சென்றுவிட்டுத் திரும்பிய வாலிப உள்ளம் வாழ்வு முழுதும் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கியது. நெஞ்சைத் தொடும் நேசம் அன்னையில் வந்து கிட்டாமல் எட்டச் சென்றபோது ஏமாற்றம் அதிர்ச்சியாகியது. பாபுஜியின் நிழலும் ஆசிரம அமைதியும் அவனது உள்ளத்துப் புயலை அடக்க முடியவில்லையே!

அவன் முடிவில் ஓடிவிட்டான்!

ஆசிரமமும், நூல்களும், மனிதர்களும், அந்த மண்ணும் அவனது இழந்த காதலை நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் என்று பயந்து அந்தச் சூழலை விட்டு ஓடிவிட்டான். ஆனால் அந்த உள்ளம் மீண்டும் தறிகெட்டு நாசச் செயலில் ஈடுபடாமல் இருக்க வேண்டும். அல்லது மீனுவைத் தேடிக் கொலை புரியாமல்.....!

நினைக்கவே விதிர் விதிர்த்தது. சுரேஷைத் தேடிக் கைது செய்துவிட வேண்டும். அது எப்படி? எங்கெங்கு அவன் போகலாம் எனத் தகவல் சேகரித்து அந்தந்தப் பிராந்தியப் போலீஸ் நிலையங்களுக்கு எஸ். ஓ. எஸ். பறந்தது.....

*　　*　　*

"அப்புறம் அவன் கிடைத்தானா?" என்ற எனது ஆர்வக் கேள்விக்குப் பதில் சொல்லுமுன் இன்ஸ்பெக்டர் தமது மீசையைத் தடவி விட்டுக் கொண்டார்.

"ஐந்து மாதமாயிற்று. வேறொரு கேஸில் புலன் விசாரிக்கையில் தற்செயலாக ஒரு 'க்ளு' கிடைத்தது. வாச் அண்டு வார்டு ஹெட் கான்ஸ்டபிள் விக்ரம்சிங் சர்க்காருக்கு எதிராகச் சதி செய்கிறான் என்ற சேதி கேட்டு, அவனது வீட்டை 'ரெய்டு' செய்தேன். அப்போது சுரேஷின் கடிதம் ஒன்று கிடைத்தது.

"தனது சாமான்கள் அடங்கிய ஐந்து பெட்டிகளை விக்ரம் சிங்கிடம் ஒப்படைத்து விட்டு ரூபாய் ஐம்பது பெற்றுக் கொண்ட தகவல் அதில் காணப்பட்டது.

"விக்ரம்சிங் உண்மையை ஒப்புக் கொண்டான். ஒரு வாரம் முன்புதான் பெட்டிகள் உத்தரப் பிரதேசத்து கோண்டா என்னும் ஸ்டேஷனுக்கு ரயில் மார்க்கமாக அனுப்பப் பட்டன.

"அடுத்த வாரம் — கோண்டா குட்ஸ் ஷெட்டுக்குப் பெட்டிகள் டெலிவரி எடுக்க வந்த சுரேஷ் கைது செய்யப்பட்டான்.

"வழக்கு நடைபெற்றது. குற்றத்தை சுரேஷ் ஒப்புக் கொண்டான். 'மனம் திருந்தி மணம் புரிந்து கொண்டு வாழ விரும்புகிறேன்; குறைந்த தண்டனை கொடுங்கள்' என்று பிரார்த்தித்தான்.

"நீதிமன்றம் நான்கு வருடம் கடுங்காவல் விதித்தது. சுரேஷ் முகத்தில் அசாதாரண அமைதி நிலவியது."

இடது கையில் பிரம்பைத் தட்டியபடி, இன்ஸ்பெக்டர் எழுந்தார். "காந்திஜி ஜனன நூற்றாண்டில் எத்தனையோ தலைவர்கள், அறிவாளிகள் — அண்ணலுடன் கொண்ட தொடர்புபற்றி — பேசியதையும், எழுதியதையும் அனுபவித்திருப்பீர்கள். ஆனால் அருகதையற்ற போலீஸ்காரன் ஒருவன் அண்ணலுடன் தொடர்பு கொண்ட சுவையற்ற 'மாட்டர்—ஆப்—பாக்ட்' வரலாறு உங்களுக்கு ரஸப்படாமல் இருந்திருக்கலாம்" என்றார் சிரித்தபடி.

"நன்றாயிருக்கிறது. நான் வெறும் சத்திய புருஷனைத் தரிசிக்கவில்லை. மகாத்மாவின் விசுவரூப தரிசனம் கிட்டியது. ஒழுங்கு முறையையும் நீதியையும் பரிபாலிக்கும் போலீஸ்காரர்களை எவ்வளவு தூரம் மதித்து மரியாதை அளிக்க வேண்டும் என்ற தர்மத்தை மகாத்மா நமக்குக் கற்றுத் தந்திருக்கிறார். இன்றைய வன்முறைகளில் நாட்டம் மிக்க சமுதாயம் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்!" என்று கூறியவாறு பிரிந்தேன்.

எக்ஸிபிஷனில் அடுத்து எதிர்ப் பட்டது சிறை இலாகா ஸ்டால். சுரேஷை நினைத்துப் புழுங்கியது எனது உள்ளம்.

(வார்தாவில் சப்- இன்ஸ்பெக்டராகப் பணி புரிந்து மகாத்மாவுடன் தொடர்பு கொண்ட மகாராஷ்டிரப் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த திரு வி. ஏ. சாவோஜி (V. A. Chaoji) என்பவரது அனுபவக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டது.)



The sixth conference of Asian and Pacific Accountants is being held in the month of August 1970 between the 17th and 26th at Singapore and Kualalumpur. Accountants from professional Bodies in 22 countries are participating in it.

Mr. S. Kaliswaran, Chartered Accountant of Bangalore has been elected as an official delegate to represent the Institute of Chartered Accountants of India, New Delhi. He has over a decade participated in conferences in the Far East and India. He has travelled widely in the Western Countries and is the founder President of the Mysore State Chartered Accountants' Association.



புதுடில்லி பத்திரிகை ரிஜிஸ்ட்ரார் காரியாலயத்தைச் சேர்ந்த திரு கே. **அருணாசலத்துக்கும்,** மதுரை அட்வகேட் திரு எம். ராமனுதன் அவர்களின் இளைய சகோதரி சௌபாக்யவதி **விஜயலக்ஷ்மிக்கும்** சமீபத்தில் மதுரையில் திருமணம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

வாழ்க மணமக்கள்

இந்திராணி தர்பார்!

'மேதி'



[சங்கலனக் கல்லூரி முதல்வர் இந்திராணி அம்மையின் காரியாலய அறை. அம்மையார் ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்திருக்கும் வேளையில் கல்லூரி மாணவி ஒருத்தியின் தந்தை லிங்கப்பா உள்ளே வந்து ஓரமாக நிற்கிறார்.]

இந்திராணி (நிமிர்ந்து பார்த்து): யாரு லிங்கப்பாவா? உங்களைக் கூப்பிட்டு அனுப்பவில்லையே! முன்னறிவிப்புக்கூட இல்லாமல் ஏன் வர்றீங்க?

லிங்கப்பா: அவசரமானதால் வந்தேன்! உங்க சர்வாதிகாரத்தைக் கவனிச்சுக்கிட்டே வரேன்; பொறுக்க முடியாமல் போய் நேரிலேயே கேக்கலாம்னு வந்திருக்கேன்.

இந்திராணி: ஓஹோ!... நான் இந்தக் கல்லூரி பிரின்ஸிபால்! எனக்கு உத்தரவுகள் போடவும் அதை நிறைவேற்றவும் உரிமையுண்டு. நான் போடும் உத்தரவுகளை சர்வாதிகாரம் என்று அர்த்தம் செய்து கொள்கிறவர்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை.

லிங்கப்பா: அப்படீங்களா! அதுதான் இங்கிலீஷ் புரொபஸர் அம்மாவைக் கூப்பிட்டுக் கணக்குப் பாடம் எடுத்து நடத்தச் சொன்னீங்களாக்கும். 'ட்ரிக்னமெட்ரி' பற்றி 'டென்னிஸன்' ஏதாவது கவிதை எழுதியிருப்பாரான்னு அந்த அம்மா தேடிக்கிட்டு இருக்கணும். அப்படித்தானே?

இந்திராணி: லிங்கப்பா! ஷட் அப்! உங்களுக்குத் தெரியாத விஷயங்களிலேயும் சம்பந்தமில்லாத விஷயங்களிலேயும் ஏன் மூக்கை நீட்டறீங்க! உங்க கேள்விக்குப் பதில் சொல்லிக்கிட்டு இருக்கணும்கிற அவசியம் எனக்கு இல்லே.

லிங்கப்பா: எனக்குத் தெரிஞ்ச விஷயம்! சம்பந்தப்பட்ட விஷயம்! நான் மூக்கை மாத்திரம் நீட்டலே! முழு மனசையே நீட்டறேன். என் குழந்தைகள் இந்தக் காலேஜிலே படிக்கிது அம்மா! என் நண்பர்கள் பலரது குழந்தைகளும் படிக்குதுங்க!... போகட்டும். அந்த ஃபிஸிக்ஸ் லெக்சரரைத் தூக்கி ஹிஸ்டரி டிபார்ட்மெண்டுக்கு அனுப்பிச்சீங்க! தமிழ் டியூட்டர் அம்மாவை நகர்த்தி ஃபிஸிக்ஸ் டிபார்ட்மெண்டுக்குத் தள்ளினீங்க! ஃபிஸிக்ஸிலே இருந்து ஸவுண்டு, லைட், எலக்ட்ரிஸிட்டி மூணையும் மட்டும் பிரிச்சு உங்க பொறுப்பிலே வச்சுக்கிட்டீங்க! உங்களுக்கு இந்த மூணு பாடமும் ரொம்ப அத்துபடின்னு எண்ணமா?

இந்திராணி: அந்த ஃபிஸிக்ஸ் அம்மாகிட்டே இந்த மூணு சப்ஜெக்டும் இல்லாம தொடர்ந்து பாடம் நடத்துன்னு சொன்னேன்! அவள் மாட்டேன்னு சொல்லிவிட்டாள். அதனாலே தமிழ் டியூட்டரை ஃபிஸிக்ஸுக்கு மாற்றினேன்!

லிங்கப்பா: அவங்க தன்மானத்தைப் பாதிக்கிறப்போலே ஏன் நீங்க பிரிக்கறீங்க?

இந்திராணி: ஆஹா!... தன்மானம் வேறு? அது இருந்தா அப்பவே ராஜிநாமாப் பண்ணிட்டுப் போயிருக்க மாட்டாளா? சாப்பிடறதுக்குச் சன்மானம் வேண்டியிருக்கே!

லிங்கப்பா: நீங்க பெரிய சர்வாதிகாரியாக மாறிட்டீங்க! உங்க வெறியினாலே குழந்தைங்களோட படிப்புக் குட்டிச்சுவராகுது. எந்த வகுப்பும் ஒழுங்கா நடக்கலே! அப்புறம் அவங்க எப்படிப் பரீட்சை எழுதுவாங்க?

இந்திராணி: நான் அதைப் பற்றிக் கவலைப்படலே!

லிங்கப்பா: நீங்க பிரின்ஸிபால் அம்மா! கல்லூரிக் குழந்தைங்க நல்லபடி படிச்சாத்தானே உங்களுக்கு மதிப்பு!

இந்திராணி: எந்த இடத்திலே எப்படி மதிப்புச் சம்பாதிக்கிறதுன்னு எனக்குத் தெரியும்! நீங்க எனக்குச் சொல்லித் தரவேண்டாம். வெளியே போறீங்களா?

லிங்கப்பா: என் ஒருத்தனைப் போகச் சொல்லலாம். ஆனால் என்னைப் போலே எத்தனை பேர் குமுறிக்கிட்டு நிக்கறாங்க, தெரியுமா?

இந்திராணி: இந்தப் பூச்சாண்டிக்கெல்லாம் நான் அஞ்சவேணு? உங்களோடே எவன் கூட்டுச் சேருவான்? நீங்க வம்புக்காரர்னு தான் எல்லாருக்கும் தெரியுமே! உங்க பேச்சைக் கேட்டுக் கூட்டுச் சேர வரவங்களையே நீங்க அம்போன்னு கைவிட்டுடுவீங்களே!

லிங்கப்பா: இப்போ நிலைமை மறுபடியும் மாறப்போவுது. ஜாக்கிரதை!

இந்திராணி: பூ! ரொம்ப மிரட்டறீங்களே? என் இஷ்டப்படிதான் எல்லாம் நடக்கும். என் மேலே நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து பதவியிலிருந்து இறக்கி விடுவீங்களோ? ஒண்ணும் நடக்காது!

லிங்கப்பா: பிரின்ஸிபாலம்மா! நான் வரேன்! நீங்க கேட்ட கேள்வியிலிருந்தே உங்களுக்குப் பயம் தோணிப் போச்சுன்னு புரிஞ்சுக்கிட்டேன்! அது போதும்.

இந்திராணி: நான் ஒண்ணும் பயப்படலே!

லிங்கப்பா (போய்க்கொண்டே): பயப்படாதவங்க 'நான் பயப்படலேன்னு' சொல்ல மாட்டாங்க அம்மா! நீங்க சொல்றீங்க!

தவருது உபயோகித்தால் போர்ஹான்ஸ் பற்பசை ஈறு உபாதைகளை நிறுத்தி, பற்சிதைவைத் தடுக்கிறது

சிறியோர், பெரியோர், யாவரிடமிருந்தும் தாமாகவே தேடி வந்த நற்சாட்சிக் கடிதங்கள், ஈறு உபாதைகளையும், பற்சிதைவையும் தடுப்பதிலே போர்ஹான்ஸ் பற்பசையின் வியக்கத்தக்க வெற்றியைப் போற்றுகின்றன. இந்த நற்சாட்சிக் கடிதங்களை ஜெப்ரி மானேர்ஸ் & கோ லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

"பல் நோய்களால் நான் அவதிப்பட்டுக் கொண்டிருந்தேன்..உங்களுடைய போர்ஹான்ஸை உபயோகித்துப் பார்த்தேன்.......இப்போது எனக்கு அந்த நோய்களின் அவதியில்லை. அநேகமாக 20 முதல் 25 நபர்கள் போர்ஹான்ஸ் உபயோகிக்கத்தொடங்கி விட்டனர். என் குடும்பத்தில் போர்ஹான்ஸ் தனி இடம் பெற்று விட்டது."

—உதயசங்கர் திவாரி, பாட்னு.

"விஞ்ஞான முறையில் தயாரிக்கப்படும் உங்கள் போர்ஹான்ஸ் பற்பசையை நான் கடந்த பத்து வருடங்களாக உபயோகித்து வருகிறேன். அது எனது ஈறுக் கோளாறுகளை யெல்லாம் அகற்றி விட்டது. இப்போது என் குடும்பத்தினர் யாவருமே போர்ஹான்ஸ் பற்பசை கொண்டு பல் துலக்குகிறுர்கள்."

—எஸ். எம். லால், புது டில்லி.

பற்களைத் தக்கமுறையில் பராமரிக்க இரவிலும் காலையிலும் போர்ஹான்ஸ் பற்பசையையும், போர்ஹான்ஸ் டபின்-ஆக்ஷன் டூத் பிரஷையும் உபயோகியுங்கள்...உங்கள் பல் வைத்தியரையும் தவருது பார்த்து வாருங்கள்!



இலவசம்! "பற்களையும் ஈறுகளையும் பராமரிக்கும் முறை" என்ற வண்ணப் புத்தகம்.
தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் கிடைக்கும். இப்புத்தகத்தைப் பெற, (தபால் செலவுக்காக) 15 பைசா தபால் தலைகளை இக் கூப்பனுடன் அனுப்புங்கள்: மானேர்ஸ் டென்டல் ப்யூரோ, தபால் பை 10031, பம்பாய் 1. K-6

பெயர் ____________ வயது ________

விலாசம் ______________________

மொழி ________________________

போர்ஹான்ஸ் பல் வைத்தியரொருவரால் உருவாக்கப்பட்ட பற்பசை

457-1162 TM.



★ இக்குறிப்பிட்ட கடிதம் ரூபாய் 15/- பரிசு பெறுகிறது.

''முன்னேற்றப் பாதையில்'' என்ற கதையைப் பற்றி என் வேதனையைத் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. போதும் 'கல்சரல் இன்டர் மிக்ஸ்சர்!'

ஒலவக்கோடு
27—7—70 டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி

கல்கியின்பால் நன் நோக்கும் அன்பும் கொண்டசிலர் இதே பாணியில் இதே கதை பற்றிக் கடிதங்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள்.

என்னதான் 'முன்னேற்றப் பாதை' என்று அளந்து கொட்டினாலும் 'கல்சரல் இன்டர் மிக்ஸர்' என்று சொல்லி வேண்டுமென்றே அதற்குத் தவறான வியாக்கியானம் செய்து சவடாலாகப் பேசினாலும் அப்படிப் பேசுபவர்களாலேயே கூடப் பாரதத்தின் புராதனப் பண்பாட்டை மீறி எதையும் செய்து விட முடியாது; நமது பண்பாடு அமைந்துள்ள அரண் அவ்வளவு உறுதியானது என்பதை ஸ்ரீ ஹரிமோகன் ஜா நாசுக்கான இலக்கிய நயமுள்ள நடையைக் கையாண்டு விளக்கி யிருக்கிறார். வாய் வலிக்கப் பேசியவர்கள் விளக்கு அணைந்தபோது அப்படியே வாய் அடைத்து நிற்பதும் முன்னேறுவது ரயில் மட்டும்தான் என்பதும் எதைக் குறிக்கின்றன ?

— ஆசிரியர்

★ இலட்சக் கணக்கான மக்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படும் எம். பி.களும் எம். எல். ஏ.க்களும் ஸ்தல ஸ்தாபன பதவிகளுக்குத் தீவிரமாகப் போட்டியிட்டு வெற்றி பெற விரும்புவது அவர்களுடைய பதவி ஆசையையே காட்டுகிறது. இத்தகைய போட்டிகள் அவசியமற்ற பரபரப்புக்கும் ஆரவாரத்துக்கும் காரண மாகின்றன. பொதுத் தேர்தலின்போது பல்லாயிரக்கணக்கான வாக்குகளைப் பெற்றவர், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட சிறு பகுதி மக்களின் வாக்குகளைப் பெற முடியாமல் தோல்வியடையும் வேடிக்கையை நாம் பார்க்கிறோம். இந்தத் தோல்வி சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமில்லாமல் அவரைத் தேர்ந்தெடுத்த 'தொகுதி' மக்கள் எல்லோரையுமே பாதிக்கின்றது. ஆகவே, எம். எல். ஏ.க்களும், எம். பி.க்களும் நகரசபைப் பஞ்சாயத்துத் தேர்தல்களில் போட்டியிடாமல் விலகி இருப்பதே அவர்கள் மக்கள் 'பிரதி நிதித்துவத்து'க்கு அளிக்கும் மரியாதையாகும்.

ஈரோடு—2
26—7—70 க. ரவீந்திரன்

'வாழ்க்கையில் தோல்வியும் ஏமாற்றமும் அடைந்தவர்கள்தான் நக்சல்பாரிகளாக மாறுகிறார்கள். எனவே, அவர்களை அனுதாபத்துடன் நடத்த வேண்டும்' என்று நக்சல்பாரிகளைப் பற்றிப் பிரதமர் அளித்திருக்கும் விளக்கம் விசித்திரமா யிருக்கிறது!

தனிப்பட்ட ஒவ்வொருவரும் தங்கள் குறைகளையும், அதிருப்தியையும் தெரிவித்துக் கொள்வதற்கு வன்முறையைக் கையாள்வதை அனுமதிப்பதானாலும், இந்த நாட்டில் சட்டங்கள் எதற்கு? சர்க்கார்தான் எதற்கு?

இந்தப் போக்கை அனுமதித்தால் திருடனும் கொலைகாரனும்கூடத் தங்கள் செய்கைகளுக்கு எத்தனையோ நியாயங்களைக் கற்பித்துச் சொல்ல முடியும்!

இதுபோன்ற விளக்கங்கள் வன்முறையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு மேலும் பக்கபலத்தை அளிக்கின்றன என்பதைப் பிரதமர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. வேகமாகப் பரவி வரும் விஷ நோயைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாகப் பரிகாரம் எதுவும் செய்யாமல், சாவதானமாக மூலிகை ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சென்னை—31
25—7—70 இராம. சுப்பையா

சென்ற ஜூன் மாதம் 17ந் தேதியன்று நான் அமெரிக்க டாலர் ட்ராப்ட் (Draft) கோரி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் ஒன்றின் கிளைக்கு விண்ணப்பித்துக் கொண்டேன். அந்தக் கிளை வங்கி தேவையான மனுத் தாளை மூன்று வாரங்களுக்குப் பிறகுதான் எனக்குக் கிடைக்கும்படி செய்தது. மனுவைப் பூர்த்தி செய்து இரண்டு வாரங்களுக்குப் பிறகுதான் ட்ராப்ட் எனக்குக் கிடைத்தது. மேலும் வங்கியில் மேற்படி டிராப்டுக்கான தொகையைத் தவறுதலாகக் கணக்கிட்டு என் சேமிப்பு கணக்கிலிருந்து கழிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி தவறு டாலர் ஒன்றுக்கு ரூ. 7.60க்குப் பதிலாக ரூ. 9.40 வீதம் மாற்றப்பட்டதால் ஏற்பட்டது. நான் சுட்டிக் காட்டிய பின் பிழை திருத்தப்பட்டது.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட பின் இத்தகைய அனுபவங்கள் அதிகமாகி வருகின்றன என்பது உண்மை. வாழ்க தேசிய மயக் கொள்(ளை)கை! வெல்க பாரதம்!

சென்னை—44
26—7—70 என். கே. சூரியநாராயணன்

எனது நண்பர் ஒருவர் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது பட்டப் படிப்பில் மூன்றும் ஆண்டில் உடல் நலக் குறைவால் தேர்வு எழுத முடியாமல் தவறிவிட்டார்.

அதன் பிறகு இந்தியன் பாங்கியில் அவருக்கு வேலை கிடைத்தது. இதன் பிறகு சென்ற ஏப்ரலில் நடந்த பரீட்சைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக விடுமுறைக் கடிதம் (4 நாட்களுக்கு) ஒன்றை பாங்கியின் ஏஜெண்டிடம் கொடுத்தார். அதன்படி அவர் மூன்று நாட்கள் தேர்வும் எழுதிவிட்டார். நான்காம் நாள் அலுவலகத்திலிருந்து அவருக்கு விடுமுறை கிடையாது எனக் கடிதம் வந்துவிட்டது. அதனால் அவர் இம்முறையும் தேர்வு எழுதவில்லை. இவரைப் போன்ற ஊழியர்களுக்கு விடுமுறை அளிக்கும் வகையில் விதிமுறைகளைத் திருத்தி அமைக்க வேண்டும். இதை அரசு கவனிக்குமா?

இராஜபுரம்,
27—7—70 ஆர். கிருஷ்ணமூர்த்தி

ஒரு மாவீரனின் மரணம்



ஆர். நாராயணன்

1929-ஆம் வருடம், இ. பீ.கோ. 108 மற்ற பிரிவுகளின் கீழ் எங்களில் சிலர் இரண்டு வருடங்களுக்குச் சிறைப்பட்டோம். காந்திஜி தம்முடைய 'தண்டி யாத்திரை'யையும், உப்புச் சத்தியாக்கிரகத்தையும் தொடங்கும்பொழுது நாங்கள் பல நாட்களைச் சிறைச்சாலையில் கழித்திருந்தோம்.

நாங்கள் மூன்றும் வகுப்புக் கைதிகளாக நடத்தப்பட்டோம். அரசியல் கைதிகளுக்கும் சாதாரணக் கைதிகளுக்கும் ஒரு நிக்கரையும், ஒரு சட்டையையும் உடையாகத் தந்திருந்தார்கள். இரும்பினால் செய்யப்பட்ட தட்டும் கிண்ணமுமே கைதிகளின் பாத்திரங்கள்.

பாட்னா முகாம் சிறையில் அப்பொழுது மிஸ்டர் பாரா, ஐ. எம். எஸ். ஜெயில் சூப்பரின்டெண்டாக இருந்தார். அவ்வளவு கைதிகளிடையே ஒழுக்கத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட ஒருவரும் இல்லை. அதன் காரணமாக பாரா அங்கு இருக்கும்பொழுது சவுக்கடிகள் கொடுக்கப்பட்டன.

சவுக்கடிகள் கொடுக்கப்படும் பொழுது கைதிகள் நிர்வாணமாக நிற்க வேண்டும். ஒரு சமயம் டுமராவைச் சேர்ந்த ஆறடி உயரமுள்ள சௌபேஜி, இருபத்தைந்து சவுக்கடிகள் வாங்கிக் கொண்ட பின், நிர்வாணமாக மேடையிலிருந்து இறங்கி வந்தார். பின்புறத்திலிருந்து இரத்தம் பீறிட்டுக்கொண்டு கொட்டியது. அருகே இருந்த பாராவைப் பார்த்து, "வாடா சோமாரி, திருடனின் மகனே — இன்னும் அடிக்க வேண்டுமானால் வந்து அடி" என்று கத்தினார்.





அதன் பின் பாரா யாரையும் மேடையில் ஏற்றவில்லை. ஆனால் மற்ற வகைகளில் பலரை தண்டனைக்குள்ளாக்கினார்.

பாரா ஓர் ஆங்கிலோ இந்தியர். தண்டனை கொடுப்பதில் மிகவும் கொடுமையாக இருந்த போதிலும் ஒரு கைதியின் உடல்நிலை மோசமாக இருந்தால் தம் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றத் தயங்க மாட்டார்.

எவரும் எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள். செக்கு ஆட்டுவதற்கு முயற்சிகள் நடந்தன. ஆனால் சீக்கிரமே எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். அப்படிச் செய்திருக்கவில்லையானால் அதன் உறுப்புக்கள் ஜமேதார்களின் மீது எறிவதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

என்னிடம் படிப்பதற்கு நிறையப் புத்தகங்கள் இல்லை. இரவீந்திரநாத் தாகூரின் "சயனிகா"வையும், "கீதாஞ்சலி"யையும் வைத்துக் கொள்ள எனக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. இவற்றைப் படிப்பதிலும் மற்றவர்களுக்கு விளக்குவதிலும் நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தேன். சில சமயம் மெதுவாக எனக்குள் படித்துக்

வந்தே மாதரம்

வந்தே மாதரம்

சொல்வேன். மற்ற சமயங்களில் உரத்த குரலில் படிப்பேன். இந்தப் படைப்புக்களின் எதுகை மோனையால் கவரப்பட்ட ஒன்றிரண்டு பீகாரிகள் இவற்றை அவர்களுக்கு விளக்குமாறு என்னைக் கேட்டுக் கொள்வார்கள். மெதுவாக என்னிடம் கேட்பவர்களின் எண்ணிக்கை பெருகியது. என்னால் முடிந்தவரை அவர்களுக்கு விளக்குவேன்.

ஒரு நாள் இரவீந்திரரின் ''மரேன் மியே''வைப் படித்துக் கொண்டிருந்தேன். இங்கே காசி வித்யா பீடத்தைச் சேர்ந்த சில இளவயது மாணவர்களும் இருந்தனர். அவர்களுக்குக் கொஞ்சம் வங்காளி புரியும். நான் ''மரேன் மியே''வில் ஒரு பகுதியைப் படித்து, ''சாவுதான் நம்மிடம் வந்து கொண்டிருக்கிறதே என்று நாம் நன்றியுடன் இருக்க வேண்டும்'' என்று அவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தேன்.

செங்கல் தரை மீது சாக்கை விரித்து நாங்கள் உட்காருவது வழக்கம். பிறகு அதன் மேலேயே படுத்துக் கொள்வோம். நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில், கடைசி வரிசையில் உட்கார்ந்திருந்த பையன்களில் ஒருவன் தயக்கத்துடன் என்னிடம் வந்து, 'இதை இந்தியில் எழுதி யிருந்தால் நானும் மனப்பாடம் செய்ய முடியும்' என்றான்.

அவன் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தான். கருள் கருளான தலை மயிர்; கள்ளம் கபடமற்ற பார்வை. நான் அவனிடம், ''உன்னை இதற்கு முன் இங்கே பார்த்ததில்லையே'' என்று கேட்டேன். ''நான் இரண்டு நாட்களுக்கு முன்புதான் இங்கு வந்தேன்'' என்றான்.

''எந்த இடத்தி லிருந்து வருகிறாய்?''

''முஸாபர்பூரிலிருந்து.''

''உன் பெயர்?''

''வைகுந்த சுகூல்.''

அதன் பிறகு வைகுந்த சுகூல், நான் தனியாக இருக்கும்பொழுது என்னிடம் வருவான். அவன் ''சயனிகா''வைத் திறந்து தானே படிக்க முயற்சிசெய்வான். என்னிடம் சில சமயம் ஏதேனும் கேள்விகள் கேட்பான். ஒரு முறை அவனே உரக்கப் படித்துக் கொண்டிருந்தான்.

அதன் கருத்து: மரணமே—என் மரணமே — அந்தப் பெருத்த மழையில் (சுதந்திரப் போராட்டத்தில்) நான் அமைதியாகக் கடந்து செல்வேன்.''

நான் கேட்டேன்: ''உனக்குப் புரிகிறதா? நீயும் அவ்வாறு கடக்க முடியாதா?'' அதற்கு வைகுந்த சுகூல் புன்முறுவலால் பதிலளித்தான்.

1932: கயா சென்ட்ரல் சிறையின் நிலைமையையும், சூழ்நிலையையும் இங்கே கூற வேண்டும்.

பீகாரில் உள்ள மிகப் பெரிய சிறைகளில் அதுவும் ஒன்று. நகரத்துக்கு அப்பால் சென்று கொண்டிருக்கும் கிராண்ட் டிரங்க் சாலையைக் குறுக்கே கடந்து செல்லும் சாலையுடன் சிறைச் சாலையின் பெரிய சுவர்கள் செல்கின்றன. அந்தச் சாலையின் ஒரு புறம் சிறையும், மறு புறம் குன்றும் அமைந்துள்ளன.



வந்தே மாதரம்

வந்தே மாதரம்

'அந்தமான் புகழ்' பார்க்லி ஹில் நான் இங்கே வருவதற்கு முன்பு கயா சிறையின் மேற்பார்வையாளராக இருந்தான்.

முதல் முதலாக ஒரு கைதி இச் சிறைச் சாலைக்கு வரும்போது அந்தக் கைதியைப் பத்து நாட்களுக்குத் தொற்று நோய்கள் வராமலிருக்கத் தனித்து வைத்திருப்பார்கள். அதன் பிறகு, உடல்நிலைப் பரிட்சைக்காக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வார்கள். அவனுடைய உடல்நிலைக்குத் தகுந்தபடி கடினமான, நடுத்தரமான அல்லது மிதமான வேலை கொடுக்கப்படும். இந்த விதமான பிரிவைச் சிறை மேற்பார்வையாளரே செய்வார்.

பார்க்லியின் நிர்வாகத்தில், ஒரு கைதிக்கு வேலையைப் பகிர்ந்து கொடுப்பதற்காக ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு வரும்போது, பார்க்லி கைதியை நிர்வாணமாக நிற்க வைப்பான். பிறகு கைதியைக் குனியச் செய்து, அவனது தலை முழங்காலைத் தொடவேண்டும் என்பான். பார்க்லி 'சாஹேப்' அப்பொழுது கைதியின் மலக்குடலில் எச்சிலைத் துப்பி, 'ஹா...ஹா' என்று அட்டகாசமாகச் சிரிப்பான். ஒரு கைதியின் நிலை எவ்வாறு இருக்கும் என்பதை இந்த விளக்கத்தின் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம். நம்புவது கடினமாக இருந்தாலும் இதுதான் உண்மை. அதுவும் ஒரு நாளில்லை, இரண்டு நாளில்லை. வருடா வருடம் — பார்க்லி சாஹேப் சூப்பிரண்டாக இருந்த காலம் முழுவதும் இவ்வாறே நடந்தது. அந்த நாட்களில் பீஹார் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக மிஸ்டர் மாக்கர் என்பவர் இருந்தார். பார்க்லியைப்போல மிகக் கொடுமையானவர். ஆனால் அவர் கொடுமைப்படுத்துவது அரசியல் கைதிகளைத்தான். கயா சிறையைப் பற்றிப் புகாருக்கு மேல் புகார் வந்தவுடன், ஒரு நாள் திடீரென்று இந்தச் சிறையைப் பார்வையிட வந்தார். தன் காரை வாசலில் விட்டு விட்டு, ஜெயிலர் தொடர நேரே சிறைக்குள் போனார். அப்பொழுதுதான் ஒரு முஸ்லீம் ஜமீந்தாரின் மகனை நிர்வாணமாகச் சிறையைச் சுற்ற வைத்துக் கொண்டிருந்தார்கள். அவன் நிலத்தைச் சுவாதீனப்படுத்திக் கொள்வதற்காகக் கலகங்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தான். அவனது இரண்டு கைகளும் விலங்கிடப்பட்டிருந்தன. இரண்டு காவலர்கள் அவனது காதுகளைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தனர். இந்தக் கொடுமைக்கு உட்பட அவன் செய்த குற்றம்: இயந்திரத்தில் அரைப்பதற்கு மறுத்ததாகும். மாக்கரின் வருகையைப் பற்றி ஜெயிலரோ, மற்ற அதிகாரிகளோ, மற்றவர்களுக்கு அறிவிப்பதற்கோ, எச்சரிப்பதற்கோ அவகாசம் கிடைக்காமற்போயிற்று. மிஸ்டர் மாக்கர் கைதிகளின் இந்த அவல நிலையை நேருக்கு நேராகக் கண்கூடாகப் பார்த்துவிட்டு, பேசுவதற்குக் கூடச் சக்தியற்றுப் போய்விட்டார்.

பார்க்லி அப்பொழுது சிறைச்சாலையில் இல்லை. ஐ.ஜி.யின் பங்களாவுக்குச் சென்றார். அவர்கள் இருவரும் பின்பு என்ன பேசிக் கொண்டார்கள் என்பது எவருக்கும் தெரியாது. ஆனால் அன்றிரவே பார்க்லி தற்கொலை செய்து கொண்டான். பார்க்லியுடைய கொடுமைகளுக்கு உடந்தையாக இருந்த ஜமேதார் கிஷன்லாலும், சேவகனும், வார்டர் கிராஷ் விகாரியும் கைதிகளுக்குப் பேய் பிசாசுகளாகத் தோன்றுவர்.

நான் அங்கு சென்ற சில நாட்களுக்கு முன்பு தான் பார்க்லி தற்கொலை செய்து கொண்டான். அவனுடைய மூன்று உதவியாளர்களும் பார்க்லியின் பழக்க வழக்கங்களைப் பின்பற்ற முயன்றனர். ஆனால், பார்க்லியின் இடத்துக்கு வந்த ஒரு பாரசீக ஐ.எம்.எஸ் மாறுபட்ட குணங்களை உடையவராக இருந்ததால், அவர்கள் தங்கள் இஷ்டத்துக்குக் கொட்டமடிக்க முடியாது போயிற்று.

ஒரு நாள் பிற்பகலில் பஸாங் என்பவரின் அன்னை சிறையில் வாடும் தம் மகனைப் பார்க்க வந்திருந்தார். நாங்கள் எல்லோரும் வார்டு கதவின் அருகே வந்து நின்றோம். சிறிது நேரம் கழித்து ஜமேதார், சிறைச்சாலை அதிகாரிகள் தொடர, சோகத்தின் வடிவமான ஒரு மாது சிறைக் கதவினை நோக்கிச் செல்வதைப் பார்த்தோம். சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தன் மகனைப் பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்டிருக்கிறார் என்று தெரிந்தது. ஓர் அழகான இளைஞனும் அவர் கூட வந்திருந்தான். அவன் எங்களைப் பார்த்துக் கைகளைக் கூப்பினான்.

எங்களுக்கு அவர்களுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. என் அருகில் நின்றுகொண்டிருந்த கிராஷ் விகாரி ''அந்தப் பையன் யாரென்று தெரிந்து கொள்ள முடிகின்றதா?'' என்று என்னிடம் வினவினார்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு பார்த்த அந்த முகம் — புன்முறுவல் பூத்த அழகிய முகம் பளிச்சென்று என் மனத் திரையில் விழுந்தது.


''ஆம். அவன் யாரென்று புரிந்துவிட்டது.'' பதிலளித்தேன். ''அவன் பாட்னா முகாம் சிறையில் இருந்தவன். அவன்தான் பஸாங்கின் அன்னையுடன் வந்திருக்கிறான்'' என்று தொடர்ந்தேன்.

இருவரும் ஒரே மூச்சில் கூவினோம்:

''வைகுந்த சுகுல்!''

நாளோ, தேதியோ, வருடமோ இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இப்படிப்பட்ட குறுகிய வாழ்க்கையில் ஓரிரண்டு வருடங்கள் ஒரு பொருட்டல்ல. வைகுந்த சுகுலை பஸாங்கின் அன்னையுடன் கயா சிறைச்சாலையில் பார்த்து இரண்டு வருடங்கள்தான் இருக்கும். இப்பொழுது மீண்டும் இங்கு வந்திருந்தான். இம்முறை போலீசார் அவனை அழைத்து வந்திருந்தார்கள். பெதியாவில் போனி கோஷைக் கொலை செய்த குற்றத்திற்காக வைகுந்த சுகுலுக்குத் தூக்குத் தண்டனை அளித்திருந்தார்கள். சந்திரமா சிங்கிற்கும் (சுகுலின் கூட்டாளி) அதே காரணத்துக்காகப் பத்து வருடங்கள் சிறைத் தண்டனை அளித்திருந்தார்கள். சங்கிலிகளின் சப்தத்துக்கிடையில் வைகுந்த சுகுல் தன் சாவை எதிர்நோக்கிக் கயா சிறைச்சாலையின் ஏழாம் நம்பர் அறையை அடைந்தான்.

போனி கோஷ், அவனைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட வைகுந்த சுகுல் அவனுக்கு உடந்தையாக இருந்ததாகக் கரு



TAMIL



பயோ-ஸால்
(கிரைப் மிக்சர்)

ஜே. & ஜே. டிஷேன்
ஹைதராபாத் - இந்தியா

தஞ்சாவூர் பர்மனேனண்ட் பாங்க் லிமிடெட்

THE TANJORE PERMANENT BANK LTD. ESTD. 1901

பதிவு அலுவலகம்:
1087, மிஷன் தெரு, தஞ்சாவூர்

உங்களின் இன்றைய சேமிப்பு
நாளைய மகிழ்ச்சியான எதிர்காலம்

உங்கள் சேமிப்பின் வட்டி ரூ. 3000/- வரை
வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

உங்கள் சேமிப்பு ரூ. 1,50,000/- வரை
செல்வ வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

சேவிங்ஸ் டிபாஸிட்டுக்கு வட்டி 4% (தினசரி நிலுவையின்பேரில்)

பிக்செட் டிபாஸிட்டுகளுக்கு வட்டி $7\frac{1}{2}$ % வரை

ரெக்கரிங் டிபாஸிட்டுகளுக்கு வட்டி $7\frac{1}{2}$ % வரை


எங்கள் பாங்கில் முதலீடு செய்து உயர்ந்த வட்டியையும்
வரிச்சலுகைகளின் பயனையும் அடையுங்கள்

மற்ற விவரங்களுக்கு, எங்கள் 60 கிளைகளில்
ஏதேனும் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும்.

D. ஜெகஜ்ஜோதி நாராயணன்
சேர்மன்

B. K. மாதவன்
செகரட்டரி


C I B A Cosmetics




ஒரே ஒரு டூத்பிரஷ் அணிவரிசை உமக்கென்று ஒன்று

உங்களின் பற்களுக்கு...
உங்களின் ஈறுகளுக்கு...
உங்களின் விருப்பத்துக்கு...
உங்களின் வயதுக்கு...

பினகா வரிசை —
எல்லா வயதினருக்கும்
ஏற்ற விருப்பத்துக்கும்



பினகாவின் மழுக்கப்பட்ட முனைகள், ஈறுகளுக்கு
ஊறு செய்யாதவை



டூத்பிரஷ்
வெறும் டூத்பிரஷ் மட்டும் அன்று—அது பினகா எனில நன்று!

Binaca®

ULKA : CTB-66 TAM

தப்பட்ட சந்திரமா சிங் இம்மூவரையும் பற்றிக் கொஞ்சம் விரிவாகச் சொல்கிறேன்.

போனி கோஷ் ரிபப்ளிகன்'' கட்சியில் ''இன்னர் மேன்'' என்று பிரபலமான புரட்சிக்காரனாக இருந்தான். லாலா லாஜ்பத் ராயைக் கொல்வதற்குக் காரணமான ஸாண்டர்ஸ் சாகேப்பைக் கொன்ற குற்றம் தில்லி பாராளு மன்றத்தில் வெடி குண்டு எறிந்த குற்றம், ஆங்கிலேய அரசாங்கத்துக்கு எதிராகப் போர் நடத்த முயற்சிகள் செய்த குற்றம், ஆகிய பல குற்றங்கள் அவன் மேல் சாட்டப்பட்டிருந்தன. போனி கோஷ், வேறு சிலருடன் கைது செய்யப்பட்டான். அவனுடைய 'ஒப்புதல் வாக்குமூலம்' மூலமாகவும், மற்றவர்கள் குற்றங்களை ஒப்புக் கொண்டதன் மூலமாகவும் புரட்சிக்காரர்கள் பலர் பிடிபட்டனர். போனி கோஷ் பல முக்கியமான விஷயங்களை ஒப்புக் கொண்டது மட்டுமல்லாமல், அரசாங்க ''அப்ரூவ''ராகவும் மாறிவிட்டான். அதன் மூலம் பலரது அழிவுக்குக் காரணமானான்.

ஜோகேஷ் சுகுல் போராட்ட மனம் படைத்த புரட்சிக்காரராகவும், பீகார் புரட்சி இயக்கத்தின் தலைவராகவும் இருந்தார். இவர் முசாபர்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். 'ரிபப்ளிகன்' கட்சியில் பெரும் பங்கு கொண்டவர் — ஏன் தூணாக இருந்தார் என்றே சொல்லலாம். வைகுந்த சுகுலும் அதே மாவட்டத்தி லிருந்து வந்த பையன். பீகார் மாநிலத்தில் உள்ள முசாபர்பூரி லிருந்து பல புரட்சிக்காரத் தொண்டர்கள் அச்சமயத்தில் தோன்றினார்கள். — குதிராமைத் தூக்கிலிட்டது அந்த மண்ணையே அவ்வளவு வீர வனம் உள்ளதாகச் செய்தது போலும்!

வைகுந்த சுகுலின் கூட்டாளி — சந்திரமா சிங்கின் தந்தை ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தார். 1921ல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து தம் வேலையை விட்டுவிட்டார். அதன் பிறகு அவர் ஏறக்குறைய சுதந்திர இயக்கம் முழுவதிலும் சிறையிலேயே கழித்தார். சந்திரமா சிங் அவருடைய ஒரே பையன். தகப்பனார் இராட்டையைச் சுழற்றிக் கொண்டிருக்கும் பொழுது சந்திரமா சிங் கைத் துப்பாக்கியில் பயிற்சி எடுத்துக் கொண்டிருப்பான். தந்தை சிறையில் அடிக்கடி எங்களிடம் கூறுவார்: ''பார், நான் காந்தியுடைய காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறேன். சந்திரமா சிங் புரட்சி வேலை பண்ணிக் கொண்டிருக்கிறான். எவ்வாறு இருந்தாலும் தேசத்துக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். அவன் செய்யும் காரியங்களினால் எனக்கு ஒரு கவலையும் இல்லை. ஆனால்....'' அவருடைய ஒரே கவலை, சந்திரமா சிங்கைத் தூக்கிலிட்டு விடுவார்களோ யானால் அவனுக்குப் பிறகு தனக்கு வேறு சந்ததியே இல்லாமல் போய்விடுமே என்பது தான்.

வெகு நாட்களுக்கு அரசாங்கம் போனி கோஷின் வீட்டைக் கண்காணித்து வந்தது. நாட்கள் கடந்தன. பகத் சிங் உயிரைத் தூக்கு மரம் குடித்தது. ஜதின் தாஸ்

அம்மா! அம்மா!
'மாடர்ன் ரொட்டி'!



அரசியல்வாதிக்கு மிகவும் பிடித்த ரொட்டி,
அவரைப் பற்றிய கவரொட்டி!

— கன்னிசா.

உண்ணா விரதம் இருந்து உயிர் நீத்தார். ஆனால் போனி கோஷ்? நம்பியவர்களைக் காட்டிக் கொடுக்கும் அரசாங்க உடந்தையாக மாறி யிருந்ததால் அவனுக்கு மன்னிப்புக் கிடைத்தது. ஒரு குடியிருக்கும் வீடு உட்பட அரசாங்கத்தின் பரிசாக, போக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் போனி கோஷ் பகலில் ஒரு குட்டித் தூக்கம் போட்டு விட்டு எழுந்திருக்கப்போகும் சமயத்தில் வெளியிலிருந்து, யாரோ 'அண்ணா வீட்டிலிருக்கிறாரா?' என்று கேட்டார்கள். (பீகாரிலும் உத்தரப் பிரதேசத்திலும் வங்காளத்தைச் சேர்ந்த அரசியல் தொண்டர்களைப் பெரும்பாலும் அண்ணா என்றுதான் அழைப்பது வழக்கம்.). எந்த விதக் கவலையும் இல்லாமல் கண்களைத் துடைத்துக் கொண்டு வந்தான், போனி கோஷ். தனது நண்பனாக இருக்க வேண்டும் என்று நினைத்தான் போலும். இரண்டு பேர் கூர்மையான (குக்ரி) கத்தியின் உதவியால் அவன் சரித்திரத்தை முடித்து விட்டு, ஒன்றுமே நடவாததுபோல் சந்தை வழியாகப் போய்விட்டனர். அவனால் கத்துவதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாமல் போயிற்று. அந்த இருவரையும் பிடிப்பதற்கோ, அச்சமயம் எவருமே இல்லை.

அவர்களைப் பிடிப்பதற்குப் போலீசாரின் பைத்தியக்காரத்தனமான முயற்சிகள் ஆரம்பமாயின. வைகுந்த சுகுலையும், சந்திரமா சிங்கையும் தேடிப் போலீசார் பைத்தியக்காரர்களைப் போல அலைந்தனர். அந்த இருவரும் முக்கியத்துவமில்லாதவர்களாகக் கருதப்பட்டதால் போலீசாரிடம் அவர்களுடைய புகைப் படங்கள் இல்லை. நல்ல உடற்கட்டுக் கொண்ட அழகான ஆண்களைக் காரணமின்றிக் கைது செய்து கொண்டிருந்தனர்.

கடைசியில் அவர்கள் இருவரும் பிடிபட்டனர். அவர்களுடைய ''நண்பர்கள்'' அவர்களைக் காட்டிக் கொடுப்பதில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டனர்! சோன்பூரில் மிகப் புகழ் பெற்ற விழா நடக்கும் பொழுது அவர்கள் இருவரும் அங்கே இருந்தனர். மாலையின் மங்கிய ஒளியில் சோன்பூர் பாலத்தை அவர்கள் கடந்துகொண்டிருக்கும்பொழுது போலீசார் இரண்டு

பிரிவாகத் திடீரென்று இரண்டு பக்கத்திலிருந்தும் வந்து அவர்களைத் தாவிப் பிடித்தனர். எல்லாம் அவ்வளவு திடீரென்று நடந்தது. தப்பித்துக் கொள்ள ஒரே வழி நதியில் குதிப்பதுதான். அதற்குக் கூட அவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. அவர்களுடைய ''ரோமர்கள்'' போலீசாருக்கு, அந்த இருவரும் எந்த நேரத்தில் எந்த இடத்தில் இருப்பார்கள் என்று அவ்வளவு கச்சிதமாகக் கூறியிருந்தார்கள்.

எப்பொழுதாவது, வங்காளத்தின், அல்லது இந்தியாவின் புரட்சியின் முழுச் சரித்திரத்தையும் உண்மைகளை மறைக்காது எழுதினால் (நடக்கக் கூடிய விஷயம் என்று தோன்றவில்லை) ஒரு விஷயம் மட்டும் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கும். ஒரு புறத்தில் அளவிட முடியாத நாட்டுப் பற்றும், எண்ணிப் பார்க்க முடியாத தைரியமும், உற்சாகமும், மற்றொரு புறத்தில் மன்னிக்க முடியாத துரோகமும், பாம்பை விடக் கொடிய வஞ்சகமும் காணப்படலாம். பலர் மிருகத்தனமான கொடுமைக்கு மனத்தளவிலோ, உடலளவிலோ உட்படும்போது உறுதி குலைந்து விடுகிறார்கள். ஆனால் அது வேறு விஷயம். ''பச்சைத் துரோகம்'' நம் தேசத்தின் சரித்திரத்தை மீட்க முடியாத அளவுக்கு இழிவு படுத்தியிருப்பதைக் காணலாம். நிலைமை முற்றிலும் மாறி விட்டது என்று சொல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலைதான் இன்றும். இப்பொழுதும் வருந்தத் தக்க விஷயம் என்னவெனில், நம் தேசத்தில் துரோகம், சமுதாயத்தாலும், நாட்டினாலும் ஏற்றுக் கொள்ளப்படுவது மட்டுமல்லாமல், துரோகிகளுக்குத்தான் விருதுகள், பரம்பரை உரிமைகள் போலத் தோன்றுகிறது!

தூக்குத் தண்டனையை அனுபவிக்கப் போகும் கைதிகளை ஏழாம் வார்டில் வைத்திருப்பார்கள். தண்டனை நிறைவேற்றப்படும் நாளுக்கு முந்திய நாள் இரவில் அவர்களைப் பதினைந்தாம் நம்பரில் முதல் அறையில் வைத்திருப்பார்கள். மறுநாள் காலை அவர்கள் தூக்கு மரத்துக்குக் கொண்டு போகப்படுவார்கள். நான் கயா சிறையில் இருக்கும் போது ஏறக் குறைய நாற்பத்தைந்துபேர்கள் தூக்குத்தண்டனையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்தேன். அம்மாடி! தண்டனை அடையப் போகும் குற்றவாளிகளை முதல் அறைக்கு எப்பொழுதும் முதல் நாள் மாலைதான் கொண்டு வருவார்கள். நாங்கள் அவர்களுடன் பேச முடியும். முக்கால்வாசிக் குற்றவாளிகள் மறு நாள் காலை இறந்து விடப் போகிறோம் என்று நம்பவே மாட்டார்கள். அவர்களுக்கு ஏதாவது அதிசயமான, அசாதாரணமான நிகழ்ச்சி நடந்து, தப்பித்து விடுவோம் என்ற ஏதோ ஒரு நம்பிக்கை இருந்தது. அந்த இரவில் பலவிதமான சம்பவங்கள் நடக்கும். சிலர் இராம நாமத்தை இரவு முழுவதும் பாடுவார்கள். அர்த்த மில்லாமல் கத்திக் கொண்டிருப்பார்கள். மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கு சூப்பரின்டெண்ட் அவருடைய ஆட்களுடன் வரும்போது உள்ளத்தை உருக்கக் கூடிய சம்பவங்கள் நடக்கும். ''சாஹேப், என்னை விட்டுவிடுங்கள்...'' என்ற கூக்குரல்கள் அடிக்கடி கேட்கும். சில குற்றவாளிகளைத் தூக்கு மரத்துக்கு இழுத்துச் செல்ல வேண்டியிருக்கும். இந்தச் சம்பவங்களை நாங்கள் நேருக்கு நேர் பார்க்க முடியாது. ஆனால் கேட்கின்ற குரல்கள் மூலம் நடப்பதை உய்த்து உணர முடிந்தது. முதல் சில நாட்களுக்கு நான் மிகவும் சோர்ந்து விட்டேன். ஒன்றாம் நம்பர் அறையிலிருந்து வரும் சப்தங்களினாலும் கூக்குரல்களினாலும் நான் இரவில் தூங்க முடியாமல் போயிற்று. ஆனால் என்ன ஆச்சரியம்! சில நாட்களுக்குப் பிறகு இவை கொடுமையான இரக்கமற்ற செயல்களென்று படவில்லை. எங்கள் மன அமைதியை இவை பாதிப்பதும் நின்றுவிட்டது. பழக்கப்பட்டுப் போனால் மனிதன் எதையும் சகித்துக் கொள்வான் போலும்!

வைகுந்த சுகுலைத் தூக்கு மரத்தில் ஏற்ற நாள் குறித்தாகி விட்டதை உணர்ந்தேன். அப்பொழுது குளிர் காலம். கயாவில் குளிர் தாங்க முடியாது.

பழைய சூப்பரின்டென்டை வேறு இடத்துக்கு மாற்றி விட்டார்கள். 1930ல் மிகவும் புகழ் பெற்ற பாட்னா முகாம் சிறையில் சூப்பரின்டென்டாக இருந்த மிஸ்டர் பாரா ஐ.எம்.எஸ். கயா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு இங்கே பொறுப்பேற்று வந்தார்.

நாட்கள் கடந்தன. கடைசியில், தூக்குத் தண்டனைக்கு முதல் நாளும் வந்துவிட்டது.

இன்னும் இருட்டவில்லை. பகல், மாலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. என்னுடைய சட்டையை மாட்டிக் கொண்டு, கம்பளியைப் போர்த்திக் கொண்டு, இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு சூனியத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தேன்.

சங்கிலிகளின் சப்தங்கள், வைகுந்த சுகுல் பதினைந்தாம் நம்பர் தாழ்வாரத்தில் நுழைவதை அறிவித்தன. அவன் உரத்த குரலில், ''தாதா, வந்துவிட்டேன்!'' என்று கூவினான். நாங்கள் மூவரும் எங்கள் அறைகளிலிருந்து ''வந்தே மாதரம்'' என்று ஒரே குரலில் திரும்பக் கூவினோம்.

பூட்சுகளின் உரத்த சப்தம். ஜெயிலர், டெபுடி ஜெயிலர், தலைமை ஜமேதார், மற்றும் நிறைய ஜமேதார்கள், வார்டர்கள் இன்னும் யார் யாரோ வைகுந்த சுகுலை ஒரு சடங்குக்குரிய தோரணையில் கூட்டி வந்தார்கள். மஞ்சளான வானத்தின் ஒரு பகுதியை வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனத்தைச் சூனியம் முழுமையாகச் சொந்தம் கொண்டது. என் எண்ணங்களில் ஒரு கவிதையின் சில வரிகள் மட்டும் சுழன்று கொண்டிருந்தன. அதன் கருத்து: ''மரணமே! என் மரணமே! விலோசன் தன் திருமணத்துக்குச் சென்று கொண்டிருக்கும்பொழுது அதற்காக எவ்வளவு ஏற்பாடுகள்! எவ்வளவு தேவைகள்!''

மற்ற கைதிகளைப் போலல்லாமல், ஒன்றாம் நம்பர் அறையில் வைகுந்த சுகுலை அடைக்கும்பொழுது அவனது சங்கிலிகளைக் கழற்றவில்லை.

மெள்ள மெள்ளக் கனமான பூட்சுகளின் ஒலி மறைந்தது. மெதுவாக இருள் சூழ்ந்து

கொண்டிருந்தது. நான் வானத்தின் நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

மரக்கதவின் வழியாக ஹவில்தார் ஸாஹேப் என்னுடைய அறைக்கு வெளியே தாழ்வாரத்தில் நுழைந்தார். சிறையில், வெகு நாட்கள் இருப்பது கட்டாயமாக, வார்டர்கள், ஜமேதார்கள், ஹவில்தார்கள் ஆகியோருடன் ஒருவித நட்புடன்தான் முடிகின்றது. ட்யூட்டியில் இருக்கும்போது அவர்கள் பலமுறை எங்களிடம் வருவார்கள்; பேசுவார்கள். அவர்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பிரச்னைகளில் எங்களுடைய அபிப்பிராயங்களையும் புத்திமதிகளையும் கேட்பார்கள்.

அரிகேன் விளக்கைக் கீழே வைத்துவிட்டு என்னுடைய அறையின் இரும்புக் கதவுக்கு எதிரே உட்கார்ந்து கொண்டார். ஹவில்தார் தம்முடைய வலது உள்ளங் கையைத் திறந்து ''ககூல்ஜி இவற்றை உங்களுக்காக அனுப்பியிருக்கிறார்'' என்று என்னிடம் சில பூக்களைக் கொடுத்தார். நான் அவற்றைப் பெற்றுக் கொண்டு என்னுடைய இரும்புத் தட்டில் வைத்தேன்.


ஹவில்தார் விளக்கைச் சிறிதாக்கிவிட்டு, அதை எங்களை விட்டுச் சற்றுத் தள்ளி வைத்தார். பிறகு, ''என்ன யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள், பாபுஜீ'' என்று கேட்டார். நான் அவரை நேருக்கு நேர் பார்த்தேன். நல்லவனோ, கெட்டவனோ, இவர்கள் மீது எனக்கு இருந்த வெறுப்பு உணர்ச்சியையும், கோபத்தையும் என்னால் தணித்துக்கொள்ள முடியவில்லை. ''நான் நினைத்துப் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது?'' என்றேன்.

என்னைப் பார்த்துக் கொண்டே இருந்தவர், ''பாபுஜீ, ககூல்ஜியின் உயிரை இங்கிலாந்திலிருக்கும் அரசனுக்கு மனுப் போட்டாவது காப்பாற்ற முடியாதா? அவருக்குத்தான் இந்தியாவில் இருக்கும் வைஸ்ராயை விட அதிகமான அதிகாரம் உண்டே...?'' என்று மிக வினயமாகக் கேட்டார்.

நான் மிகுந்த ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன்.

என் பதிலை எதிர்பாராதவர் போல, ''பாபுஜீ, நானும் நிறையத் தைரியசாலிகளைப் பார்த்திருக்கிறேன். கடந்த யுத்தத்தில் நான் வார்தூனில் சண்டையிட்டிருக்கிறேன். மெஸபொடேமியாவில் சண்டையிட்டிருக்கிறேன். பலரைக் கொன்று குவித்திருக்கிறேன்.. கொலை நடப்பதைக் கண்ணெதிரே பார்த்திருக்கிறேன். வைகுந்த ககூலை மாதிரி ஒரு வீரனை நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை. அவ்வாறு யாரும் இருக்கவும் முடியாது'' என்று ஹவில்தார் கூறினார்.

கொஞ்சம் மௌனம் நிலவியது. இந்த மாதிரி உணர்ச்சிகளை அவர் வைத்துக் கொண்டிருப்பதே குற்றம்; அதை வெளியிடுவது அதை விடப் பெருங் குற்றம். என்னைப் பார்த்தவுடன், அவருடைய எண்ணங்களும், கற்பனைகளும் எல்லை கடந்து பெருகி வந்தன போலும்! மனம் விட்டுப் பேசித் தம்முடைய மனச் சுமையைக் குறைத்துக் கொள்ள விரும்பினார். ''தண்டனை வழங்கப்பட்ட அன்றிலிருந்து ககூல்ஜியின் உடல் ரோஜா நிறமாக மாறிக் கொண்டு வருகிறது. பாபுஜீ. நான்



பர்ஸ் எப்படிக் கிடைத்தது?

ஒரு நாள் என் கணவருடைய பர்ஸ் நடுரோட்டில் விழுந்து தொலைந்து விட்டது. அதில் 705 ரூபாய் இருந்தது. அதனால் எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியாகப் போய்விட்டது. போலீசில் புகார் செய்தோம். எங்கள் அதிர்ஷ்டம், இரண்டு நாளைக்குப் பின் பர்ஸ் கிடைத்து விட்டது. அதில் பணமெல்லாம் அப்படியே இருந்தது. அந்த சந்தோஷமான செய்தியோடு ஆச்சரியமான ஒரு செய்தியும் வந்தது. பர்ஸைக் கண்டெடுத்துப் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்தவர் பார்வை இழந்த ஒருவர்! தெருவில் நடந்து கொண்டிருந்தபோது காலில் தட்டுப்பட்டதாம் பர்ஸ்!

ஆதாரம்: ''டிட் பிட்ஸ்''
தகவல்: சரோஜாராமச்சந்திரன்

அந்த முகத்தைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். அந்த மாதிரி ஒரு புன்சிரிப்பையோ, அந்த அளவுக்கு மகிழ்ச்சியையோ எவரிடமும் பார்த்ததில்லை. இதுவரை நான் அறிந்தவர்களில் அவ்வளவு தைரியத்தைக் கொண்டவர் எவருமில்லை. இவ்வளவு சிறிய பையன் இவ்வளவு பெரிய வீரனாக இருக்க முடியுமா என்று என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை'' என்று அவர் கூறுகின்றார். ஊற்று நீர்போல அந்தப் பட்டாணிய ஹவில்தாரின் கண்களிலிருந்து வழியும் கண்ணீரை அந்த மங்கிய வெளிச்சத்தில் காண எனக்கு மிக ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு பரிவும், பாசமும் வேதனையும் அவருடைய இரும்பான இதயத்தைத் துளைத்துக் கொண்டு, அந்தக் கல்லான இதயத்தை நனைத்திருக்க வேண்டும்!

''பாபுஜீ, அவரைக் காப்பாற்ற ஏதும் வழியே இல்லையா? நான் ககூல்ஜியை என்னுடைய உயிரைக் கொடுத்தாவது காப்பாற்ற முடியுமானால், நான் குதாவிற்குப்(கடவுளுக்கு) பெரிய தொண்டு செய்தவனாவேன்.''

அவருடைய வார்த்தைகள் என்னைச் சிந்தனையில் மூழ்கடித்தன. சிறிது நேரம் கழித்து, ''ககூல்ஜியைக் காப்பாற்ற வழிகள் இருக்கின்றன'' என்று நான் ஹவில்தாரிடம் சொன்னேன். திடுக்கிட்டு அவர் என்னைத் திரும்பிப் பார்த்தார்.

''நீங்கள் விரும்பினால் நடக்க முடியும்'' என்றேன்.

''நானா?'' அவர் குரலில் ஆச்சரியம் மிகுந்திருந்தது.

மிகுந்த ஆர்ப்பாட்டமோ, வழவழவென்று இழுவையோ இல்லாமல், அவரிடம், ''ஹவில்தார் சாஹேப், ககூல்ஜியையும் என்னையும் இந்த அறைகளை விட்டு வெளியே செல்ல அனுமதித்தீர்களானால் நான் அவரை அந்தச் சுவரைக் கடப்பதற்கு உதவி செய்ய முடியும். அந்தச் சுவர் மிக அருகே இருக்கிறது. அதற்கு அப்பால் நெடுஞ்சாலை போகிறது. அதற்கும் அப்பால் சிறிய குன்று இருக்கிறது. சுவரைத்

தாண்டிச் சாலைக்குப் போய்விட்டாரேயானால் மற்றவற்றை சுகூல்ஜி கவனித்துக் கொள்வார்'' என்றேன்.

ஹவில்தார் உண்மையில் ஏமாற்றமடைந்து விட்டார். என்னுடைய கருத்துக்களை அவர் மிகவும் மதித்து வந்தார். ஆனால் நான் இதைப் போல ஓர் அசட்டுத்தனமான எண்ணத்தை வெளியிட முடியும் என்று அவர் நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்.

''அது சற்றும் நடக்க முடியாத காரியம்'' என்று உடனே சொல்லி விட்டார். ஒரு வினாடி கூட அவர் யோசிக்கவில்லை. ''பாபுஜி நான் இதற்குச் சம்மதிக்க மாட்டேன். அப்படியே நான் இந்த யோசனைக்கு உடன்பட்டாலும் சுகூல்ஜி தப்பிக்க முடியாது. அவர் இங்கு கொண்டு வரப்பட்ட பிறகு மிகப் பலமான ஆயுதம் தாங்கிய இராணுவப் படை—முக்கியமாக இரவு வேளைகளில் – வெளியே ரோந்து வருகிறது. காவலர்கள் இன்று ஒவ்வொரு மூலையிலும் இருக்கின்றனர். சிறு துரும்பைக் கூட வெளியில் கொண்டு போவதென்பது முடியாத காரியம். இந்தப் பதினைந்தாம் நம்பரைக் கூட ஆயுதம் தாங்கிய காவலர்கள் வெளியிலிருந்து காவல் புரிகின்றனர். பலம் பொருந்திய காவற் படை உள்ளே நுழையும் கேட்டின் அருகே நிறுத்தப் பட்டிருக்கிறது. ஸ்பெஷல் வார்டர்கள் மாறி மாறி சுகூல்ஜியின் அறையைப் பாதுகாத்து வருகிறார்கள். மேலும் இன்று சிறைச் சாலையின் சாவிகள் சூப்பரின்டென்டின் அலமாரிக்குள் இருக்கின்றன. பதினைந்தாம் நம்பரின் சாவிகள், குறிப்பாக சுகூல்ஜியின் அறைச் சாவி – எல்லாவற்றையும் சூப்பரின்டென்ட் தம்மிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார். இன்று அதிகாலையிலிருந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், ஜெயில்களின் இன்ஸ்பெக்டர் ஜெனரலும் கயாவில் தங்கியிருக்கிறார்கள். நாளை தூக்குத் தண்டனை நிறைவேற்றப் படும்பொழுது ஆஜராகி யிருப்பார்கள்....'' அவர் சற்று நிதானித்து விட்டுத் தொடர்ந்தார்: ''பாபுஜி! இதற்கெல்லாம் மேலாக சுகூல்ஜியை விலங்காலும், சங்கிலியாலும் பிணைத்திருக்கிறார்கள்!''

ஹவில்தாரின் பூட்ஸ் ஒலி மறைந்தவுடன், ஒன்றாம் நம்பர் அறையிலிருந்து ''விபூதிதா'' என்று என்னை அழைக்கும் குரல் கேட்டது.

நான், ''என்ன?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து நின்று இரும்புக் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே நோக்கினேன்.

வைகுந்த சுகூல் ஒன்றாம் நம்பர் அறையிலும், நான் பத்தாம் நம்பர் அறையிலும் இருந்தோம். இரவின் அமைதியில் எங்கள் குரல் தெளிவாகக் கேட்டது.

சுகூல், கொச்சை வங்காளியில், ''தாதா, 'நான் சிரித்துக் கொண்டே தூக்குக் கயிற்றுக்குச் செல்வேன்' என்ற அந்தத் தூக்கு தண்டனைப் பாட்டை ஒரு முறை பாடுகிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டான்.

சிறையில் நான் இதைப் பாடும்போது அரசியல் கைதிகள் என்னைச் சுற்றி வட்டமாக அமர்ந்து கொள்வது வழக்கம். அவர்களுடைய தட்டுக்களில் பாட்டுக்கு ஏற்பத் தாளங்களைப் போட்டுக் கொண்டு, மிகுந்த ரசிப்புடன் தலையை ஆட்டிக் கொண்டிருப்பார்கள். ஒரு முறை பாடி முடிந்தவுடன், மறுபடியும் பாடச் சொல்வார்கள். குதிராமின் தூக்குத் தண்டனையை விவரிக்கும் அந்தப் பாட்டில் ஏதோ ஒரு மந்திர சக்தியிருந்தது.

வானத்தைப் பார்த்துக் கொண்டு கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நான் முழு லயிப்புடன் அப்பாடலைப் பாடினேன்.

> ''நான் சிரித்துக் கொண்டே தூக்குக் கயிற்றுக்குச் செல்வேன்.''
>
> ''பாரதம் முழுதும் என்னைப் பார்க்கும்.''

சுகூல், ''தாதா, உங்களுடைய புல்லாங்குழலை ஒரு முறை தயவு செய்து வாசியுங்களேன்'' என்று கேட்டுக் கொண்டான். புல்லாங்குழல்! ஒரு வெற்றுத் தீப்பெட்டியும் மெல்லிய காகிதமும்தான் என்னுடைய புல்லாங்குழல்! நீண்ட நேரம் நான் புல்லாங்குழல் வாசித்ததைக் கேட்டுக் கொண்டிருந்தான் சுகூல்.

எனக்குத் தெரிந்த பாட்டுக்களையும் கவிதைகளையும் ஏதாவது மெட்டிசைத்துத் திரும்பத் திரும்பத் திரும்ப வாசித்துக் கொண்டிருந்தேன். நான் பாடுவதை சுகூல் கேட்க விரும்பினான். இரவு முழுவதையும் நான் பாட்டுக்களால் நிரப்ப வேண்டும். இந்த இரவுக்குப் பின் மறுநாள் விடியற்காலையில் என் பாட்டுக்கள் அடைய முடியாத இடத்துக்குப் பிரயாணம் செய்து கொண்டிருப்பான்....

''தாதா, பாடுங்கள். 'மரணமே! என் மரணமே!' என்ற டாகூர் பாடலைப் பாடுங்கள்!'' அவன் கடைசி யாத்திரைக்குப் புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. நான் எதைப் பற்றியும் யோசித்துக் கொண்டிருப்பதற்கில்லை. எவ்வாறோ, எங்கிருந்தோ, கவிதைக்குத் தகுந்த மெட்டு என் குரலில் வந்தது. எவரோ தானாகவே வந்து தன்னுடைய மெட்டை எனக்குப் பரிசாக அளித்தது போலிருந்தது. நான் தர்பாரி கானடாவில் பாட ஆரம்பித்தேன்.

> **மரணமே; ஏன் மிக மெதுவாகப் பேசிக் கொண்டிருக்கிறாய்?**

எவ்வாறு ஒரு மனிதன் தன்னை இழக்கிறான் என்பது அன்றுவரை எனக்குத் தெரியாதிருந்தது. ஆனால் அந்த இரவு நான் அதை உணர்ந்தேன். வானத்தை நோக்கிக் கொண்டிருந்த என் கண்கள் தன்னால் மூடிக் கொண்டன. நான் பாடிக் கொண்டிருந்தேன்.

> **மரணமே; உன்னுடைய படகு இருக்கும் இடத்துக்கு நான் செல்வேன்; எங்கே இருட்டைத் தொடர்ந்து தென்றல் வீசுகிறதோ அங்கே!**

பாட்டு சாவைத் தழுவி ஆலிங்கனம்செய்து கொண்டு பறந்து சென்று கொண்டிருந்தது போலத் தோன்றியது.

> **நீ யாருக்காகவும் கவலைப்பட வேண்டாம்; நான் உன்னிடம் சரணமடைவேன்; நீ என்னை எல்லாவிதமான கௌரவத்துடனும் எடுத்துச் செல்ல வேண்டும் - மரணமே, என் மரணமே!**

தாகூரின் பாட்டுக்களோ, கவிதைகளோ வேறு எங்கும் எப்பொழுதும் இவ்வளவு

வெற்றி யடைந்திருக்க முடியாது. ககல் தானே பாடினான். என் பாடலையும் கேட்டான். காலை நாலு மணி அடித்துவிட்டது என்று ககல் கூறித்தான் எனக்குத் தெரியும். ''கடைசிக் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது; கடைசியாக 'வந்தேமாதரம்' கேட்க ஆவலாக இருக்கிறேன்'' என்று ககல் தெரிவித்தவுடன், நாங்கள் இருந்த ஒன்று, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய அறைகளிலிருந்து நாங்கள் வந்தேமாதரத்தை ஒரே குரலாகப் பாடினோம்.

சிறைச்சாலை மணி காலை ஐந்து மணி என்று எங்களுக்குச் சொல்வது போல அடித்தது. குளிர்காலக் காலை; இன்னும் இருள் படர்ந்திருந்தது. கனமான பூட்சுகளின் ஒலி பதினைந்தாம் நம்பர் அறைக்குள் நுழைந்தது. வைகுந்த ககல் என்னைப் பார்த்து, ''தாதா, நான் இப்போது போகிறேன். எனக்கு ஒரு விஷயம் உங்களிடம் சொல்ல வேண்டும். நீங்கள் வெளியே சென்றவுடன் தயவு செய்து பீகாரில் வழக்கத்திலிருந்து வரும் பால்ய விவாகத்தை நிறுத்த முயலுங்கள்'' என்று கூறினான்.

வைகுந்த ககல் மணமானவன்; சிறு வயதிலேயே அவனுக்குத் திருமணம் ஆகியிருந்தது.

அமைதி — மயான அமைதி. ககல் இருந்த அறை திறக்கப்படும் சப்தம் கேட்டது. மரண தண்டனைக்காக ஒரு கைதியைத் தூக்கு மரத்துக்கு இட்டுச் செல்லும்போது முதுகுப்புறத்தில் அவன் கைகளை விலங்கிடுவது வழக்கம். பதினைந்தாம் நம்பர் வார்டை விட்டு வெளியே வந்து, ககல் ஒரு நிமிஷம் நின்றான் போலும். எங்கள் அறைகளைப் பார்த்து, ''தாதா, உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன். நம் தேசம் இன்னும் விடுதலை பெறவில்லை, நான் கட்டாயம் திரும்பி வருவேன். வந்தேமாதரம்!'' என்று கூவினான்.

நாங்கள் அனைவரும் ஒரே சமயத்தில் ''வந்தே மாதரம்'' என்று முழங்கினோம். அதன் பிறகு மறுபடியும் எங்கும் அமைதி. சாவு தன்னுடைய காதலனை அழைத்துக் கொள்ள அமைதியாகச் சென்று கொண்டிருக்கிறதோ!

''வந்தே மாதரம், பாரத் மாதாகி ஜெய்!'' ககலின் குரல் மீண்டும் கேட்டது. தொடர்ந்து இதே வார்த்தைகளை அக்குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. கடைசியாக ''பாரத் மாதாகி...'' என்று அரை குறையாகக் கேட்டது.... பிறகு ''தும்'' என்ற சப்தம் சிறைச்சாலை முழுவதும் எதிரொலித்தது. எல்லாமே முடிந்து விட்டது!

அடுத்தபடி என்ன நடந்தது என்பதை நான் விவரிக்கவில்லையானாலும், இந்தக் கதை முடிவு பெற்றதாக இருக்காது. ககல்ஜியின் கடைசிக் கோஷத்துக்குப் பிறகு நாங்கள் மீண்டும் கோஷங்கள் செய்து கொண்டிருந்தோம். ''வந்தே மாதரம்! — பாரத் மாதாகி ஜெய்! ககல்ஜீகி ஜெய்! பகத்சிங்கி ஜெய்! குதிராம்கி ஜெய்!'' நாட்டின் நலனுக்காக உயிர் நீத்த உத்தம ஆத்மாக்களின் பெயர்களில் ஜயத்வனி எழுப்பிக் கொண்டிருந்தோம்.

வானி நிறையக் கிச்சடியை எடுத்துக் கொண்டு ஆள் வந்தான். நான் உண்ண முடியாது என்று சொல்லி அதைத் திருப்பி எடுத்துப் போகச் சொல்லி விட்டேன். என் கோபத்தைப் பார்த்து விட்டு, அவன் மறு வார்த்தை பேசாமல், அந்த இடத்தை விட்டகன்றான்.

சூப்பரின்டெண்ட் பராரா வந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். 1930ம் ஆண்டில் முகாம் சிறையில் சூப்பரின்டெண்டாக இருந்த அதே ஆங்கிலோ இந்திய பராராதான் இவர்! பராரா எனக்கு மிக அருகில் வந்து, ''காலை உணவைத் திருப்பி அனுப்பி விட்டாயா?'' என்று கேட்டார்.

''ஸாஹேப், நான் உண்ணா விரதம் அனுஷ்டிக்கவில்லை. எனக்கு இப்பொழுது உண்ணுவதற்கு மனமில்லை. என்னைத் தனியாக இருக்க அனுமதிப்பீர்களா?'' என்றேன்.

பராரா இன்னும் அருகில் வந்து ''பரவாயில்லை. நானும் நேற்று இரவு முழுவதும் தூங்கவில்லை என்று தெரியுமா? நான் முதல் முதலாக அந்தப் பையனைப் பார்த்த போதே அவனுக்காக வருந்தினேன். அவன் கொலையாளியா? அவனால் ஒருவனையும் கொல்ல முடியாது. நான் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும் நாளன்று ஆஜராகவிரும்பவில்லை. அன்று விடுமுறை எடுத்துக்கொள்ள விரும்பினேன். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை. செய்ய முடியவில்லை'' என்றார். அவருடைய குரல் கரகரப்பாகிக் கொண்டு வந்தது. சொல்ல வந்ததை அவரால் முடிக்க முடியவில்லை.

மிகவும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப் போன நான், பராரா ஒரு கைக்குட்டையில் மூக்கைச் சிந்திக் கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவர், ''ஓ! அவன்தான் எத்தகைய தீரன்!'' என்று வியந்து கூறினார்.

பராரா திரும்பிச் சென்ற சிறிது நேரத்தில் தலைமை ஜமேதார் வந்தார். அவர் சொன்னார்: ''நேற்று இரவு முழுவதும் பராரா சாஹேப் தமது அலுவலக சாய்வு நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்தார். சிறைச்சாலையின் வெளியிலும், உள்ளேயும், காவல் ஒழுங்காக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக வந்திருந்த ஐ. ஜி.யும் இரவில் வெகு நேரம் அங்கே இருந்தார். உங்கள் பாட்டைக் கேட்டுவிட்டு, ஐ. ஜி., சாஹேப்பிடம், 'யார் ஜெயிலில் கத்திக் கொண்டிருப்பது? வைகுந்த ககலா?' என்றார். அதற்கு, 'இல்லை, இது 15ம் நம்பரிலிருக்கும் ஒரு வங்காளிக் கைதி. அவன் வைகுந்த ககலுக்காகப் பாடிக் கொண்டிருக்கிறான்' என்று பராரா சாஹேப் பதில் சொன்னார். ஐ. ஜி. 'அவனை நிறுத்தச் சொல்லுங்கள், அவன் பாடுவதைத் தடுங்கள்' என்றதற்கு, பராரா, 'பாடட்டும். அதனால் ஒன்றும் தவறில்லை' என்றார். அதன் பிறகு ஐ. ஜி. வற்புறுத்தவில்லை.''

(நன்றி: பிம்லபி நிகேதன், கல்கத்தா: ''காம்பஸ்'' கல்கத்தா.)

— விபூதி பூஷண்தாஸ் குப்தா எழுதிய வரலாற்று நூலின் சுருக்கம்.


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam





"மற்றவர்கள் விஷயம் எனக்கு தெரியாது. ஆனால் நான் மட்டும் தினம் ஒரு தடவையாவது ஸ்னானம் பண்ணுகிறேன்.
அதற்கு நான் எப்பொழுதும் பாம்பே டையிங் துவாலையே உபயோகிக்கிறேன்"
கண்கவர் டிசைன்கள், அழகான வண்ணங்கள். புத்தம் புதிசில் கூட மிகவும் மென்மையானவை. நீரை நன்றாக உறிஞ்சுபவை.
துவாலைகள்.
பாம்பே டையிங்


REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon


முதன்மையில் நிலைப்பீர் மாஸி-பர்கூஸனுடன்

















இந்தியாவிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் மற்றெந்த டிராக்டரைக் காட்டிலும் மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரைப் பெரிதும் விரும்புகிறார்கள். ஏனெனில் இது மிகுந்த சக்தி கொண்டது. சிக்கனம் வாய்ந்தது. பல வகையில் பயன் அளிப்பது. உலகப் புகழ் பெற்ற பர்கூஸன் முறையைக் கொண்ட டிராக்டர் இது ஒன்றே.

மாஸி-பர்கூஸன் 1035 டிராக்டரும், கருவிகளும், விற்பனைக்குப் பின் விரிவான சேவை அளிக்கும் சிறப்பு ஏற்பாடுகள் கொண்ட, நாடு முழுதும் பரவியுள்ள விற்பனையாளர் அமைப்பின் ஆதரவைக் கொண்டுள்ளன.

TAFE

டிராக்டர்ஸ் அண்டு ஃபார்ம் எக்யுப்மெண்ட் லிமிடெட், மதராஸ்